முருகக்கடவுடுணை.

கௌமாரசமயபரமாகிய

ஏகத்தாள்

# இதழகலந்தாதி

## மூலமும்உரையும்.

இவை

முருகதாசசுவாமிகளென்றுந்

திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்

விளங்குகின்ற

**ஸ்ரீமத் தண்டபாணிசுவாமிகள்**

அருளிச்செய்தன.

காஞ்சி-முருகேசமுதலியார்விருப்பத்தின்படிக்கும்

வளவனூர்க்குமாரபுரியில்வசிக்கும்

பொய்கைப்பாக்கம்

**அப்பாசாமியுபாத்தியாயரவர்கள்**

வேண்டுகோளின்படிக்கும்

**காஞ்சி-நாகலிங்கமுதலியாரால்**


சென்னை:

இந்து தியலாஜிகல் யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

சருவதாரிஞு பங்குனிமீ

ரிஜிஸ்தர்செய்யப்பட்டிருக்கின்றது.

1888



மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

முருகக்கடவுடுணை.

# சாத்துகவிகள்.

சோழவந்தானூர்க்கிண்ணிமடம்
அருளானந்தசுவாமியாதீனம்
ஸ்ரீமத் கந்தசாமிசுவாமிகளியற்றியன.

## கட்டளைக்கலித்துறைகள்.

தண்டணிகையினன்றனே தனதிசைசாற்றலிதே
தண்டணிகையினன்றனே தனதிசைசாற்றலிதே
தண்டணிகையினன்றனே தனதிசைசாற்றலிதே
தண்டணிகையினன்றனே தனதிசைசாற்றலிதே.

(இ-ள்.) தண்-தணிகை, இனன் - குளிர்ந்ததணிகாசலத்திற்சதோதயமாய் விளங்குஞ்சூரியன், தால்-நே-தன-திசை - நாவினிடங்களிற்பிரியமுள்ளவாணியின துகுசங்களில்நோக்கும், சால்-தலி-கயண்டலமும்பூமியினதிதெய்வத்துவமுமுடையபிரமாவின், தே-தண்-தணி-கை - இன்-நன்று-தெய்வத்தன்மையிகழப்பட்டுத்தாழ்ச்சியடைதற்குக்காரணமாகியசிலத்தின்யினிமையையுடையநன்மையானவன், ஆன்-ஏது-அனது-இசை-சாற்று-அலி - கோவுகளின்றிதிக்குக்காரணபூதரானவிட்டுணுவால் அவ்விதக்கிரியாவரும்பொருந்தப்புகழப்படுகின்ற திருவிழாவினையுடையவக்கினிபோல்வான், தே-தண்டு-அணி-கை-இனன்-இருபையைம் சேனையினலங்கரிக்கின்றவகுப்பின்கூட்டத்தையுமுடையோன், தான்-யாவுமானன்றியுந்தானுகவேயிருப்போன், ஏத-நதி-சை-சாற்று-அல்-துன்பப்பெருக்கைச்சூழ்தற்குக்காரணமானபேரின்பசொரூபமாகியவரண்போல்வான், இதே-தண்-ணிகையினன் - சிவகாருண்ணியத்தையுந் தண்டபாணியென்னு நாமத்தையுமுடையான், தானே-தன திசை-சாற்றல்-இது-தான்றனே தன்புகழைச்சொல்வதில்வந்தாதி—எ-று ஏ-ஈற்றசை.

ஓரடிபோல்வருநான்கடிச்செய்யுளொவ்வொன்றுகண்டோஞ்
சீரடிமுற்றுமிதழகன்றேதுஞ்சிறப்பங்கின்று
வீரடல்பெற்றவிதுவோவளைவனமேந்தகின்றேன்
பேரடல்வாக்கின்பெருமைவிளக்கும்பிரபந்தமே.

(இ-ள்) ஈரடலென்பது - பலசெய்யுட்கூட்டமும் - இதழகன்றேதப்படுதேலும்-வளைவனமேந்த-வென்பது - மலைக்கூட்டந்தாங்க - மலைகளழகுபொருந்துமவ்வில்வனந்தாங்கவெனப்பொருள்கொள்க.

வளவனூர்க்குமாரபுரியில்வசிக்கும்

பொய்கைப்பாக்கம்

## அப்பாசாமியுபாத்தியாயரவர்களியற்றியன.

### கட்டளைக்கலித்துறைகள்.

திருப்புகழோதியருணைசலத்திற்சிறந்துபெருந்
திருப்புகழ்வாய்ந்தவர்தாமேநெல்வேலித்திருநகர்வாய்
திருப்புகழாரெனத்தோன்றியொன்றேயெனச்செய்யுடோறுந்
திருப்புகழலிதழகலந்தாதியைச்செப்பினரே.

தண்டாக்கலைத்திறஞ்சேர்தையலேநிலந்தன்னினன்னீர்த்
தண்டாங்கணிநெல்லையிற்சேய்தனித்தடந்தாட்கணியாய்த்
தண்டாகரத்திதழகலந்தாதியைச்சாற்றினள்கைத்
தண்டாரொண்டாட்ககந்தன்னையன்ஞனகஞ்சார்ந்தினிதே.

அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியன.

### கட்டளைக்கலித்துறை.

தண்டங்கையேந்தலியற்றிடந்தாதியைச்சாற்றரிதே
தண்டங்கையேந்தலியற்றிடந்தாதியைச்சாற்றரிதே
தண்டங்கையேந்தலியற்றிடந்தாதியைச்சாற்றரிதே
தண்டங்கையேந்தலியற்றிடந்தாதியைச்சாற்றரிதே.

(இ-ள்.) தண்டம்-மேருவில்லை, கை-வெறுத்த, ஏந்தலி-பெருமையினரான சிவபெருமானும், அல் - இருண்ட பிரகிருதியையும், திடம் - வல்லபத்தையும் தாதி-சொன்மூலதாதுக்களையுமுடையாளான பராசத்தியும், ஐ-அரசுரிமையைச் சேர்ந்த, சாற்று-விழாப்பகுதிகளையுடைய, அரி-விட்டுணுமூர்த்தியும், தே-கிருபை, தண்-குளிர்ச்சி, தம்-மகாவாக்கியமாகிய முப்பொருள்களையும், கை-துதிக்கையிற்கொண்டவரான விநாயகக்கடவுளும், ஏந்து - அருமையாலெடுத்துக் கொஞ்சும் பாலப்பருவத்தையுடைய, அலி-அக்கினிபோல்வானும், அற்றிடம் ஒருக்காலும் நாசப்படாத வான்மகோடிகளாகிய வெமது, தாது-நரம்புதோல் முதலிய சரீரதாதுக்களை, இயைச்சு-ஒன்றோடொன்றைச் சம்பந்தப்படுத்தி ஆற்று-சிருட்டிசெய்கின்ற, அரி-பொன்னிறமுள்ள பிரமதேவருக்கு, தே-தெய்வமும், தண்டம் - தடையற்ற செலவினைக்கொண்ட, கய-யானைவாகத்தினையுடைய, இந்து-சந்திரன்போலுமாகிய முருகக்கடவுளுக்கு, அல்-மதில்போற் றன்னைச்சூழ்ந்துகாக்கும், இயற்று - தமிழையுடையதும், இடம் - ஆகாயத்தினன்ன, தா-வியாழனைப்போன்ற, தி-புத்தி, ஐ-அலங்காரத்தையும், சாற்று தேனைப்போலும், அர்-அருமையான, இதே - இனியகுணத்தையுமுடையதும்

தண்டு-தண்டாயுதத்தை, அங்கை-அழகிய கையிற்றரித்துக்கொண்ட, எந்தல்-எமது தலைவருமாகிய தண்டபாணிசுவாமிகள், இயற்றிடு-அருளிய, அந்தாதியை - ஏகத்தாளிதழகலந்தாதியை, சாற்றிடே-உணர்ந்து பிறர்க்கோதுதலும் கடினமே.

### நேரிசைவெண்பா.

தண்டபா ணிச்சரபந் தந்தவிந் நூலைப்போற்
கண்டதில்லை கேட்டதில்லை காசினியிற் - பண்டோரு
மேகத்தாள் சொற்றனர்க ளென்பா ரிதழகலும்
பாகத்தைச் சேர்த்ததின்றப் பா.

ஷையார்மாணாக்கர்

## காஞ்சி - நாகலிங்கமுதலியாரவர்கள்

இயற்றியது.

### நேரிசைவெண்பா.

ஏகத்தா ளந்தாதி யீன்றெடுத்த சண்முகற்கே
யேகத்தா ளந்தாதி யீன்றதே - யேகத்தாள்
தண்டபா ணிச்செறியச் சார்திருநெல் வேலிவரு
தண்டபா ணிச்சரபந் தான்.

வேலுமயிலுந் துணை.

உ

முருகக்கடவுடுணை.

# ஏகந்தாளிதழகலந்தாதி பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க | உரு | அளி | அடி |
| ௨ | ச | கிரகம்செய் | கிரகஞ்செய் |
| ஷெ | உச | வொழுக்க | யொழுக்க |
| ங | உய | புத்திகூர் | புத்திக்கூர் |
| ஷெ | கக | பீடிக்கபடா | பீடிக்கப்படா |
| ச | கசு | இகட்சி | இகழ்ச்சி |
| ரு | ரு | விகா | விகார |
| ஷெ | உய | ககதன்கிழ-க்கு | கந்தன்-கிழக்கு |
| அ | சு | கனைவு | கனையு |
| யங | உய | புனைமா | புனமா |
| யசு | கூ | கெடுக்கின்ற | கெடுகின்ற |
| யஅ | சக | யமாலறியா | யாலறியுமா |
| உக | அ | கலகத்தை | கலக்கத்தை |
| உஎ | கக | கனைட | கண்ட |
| உஅ | யகூ | குளிர்த்த | குளிர்ந்த |
| கக | கஅ | இன்றம் | இன்ற |
| ஷெ | கக | அன்ன | அன்னம் |

இவையல்லாதன வேறாயினுமிருந்தாலுந் தக்கோருணர்ந்துகொள்வாரெனக் கருதுகின்றோம்.

# விளம்பரம்.

இந்நூற் பெறவேண்டுவோர் சென்னை பெத்துநாயக்கன்பேட்டை அண்ணாப்பிள்ளைவீதி ஈஉ-வது வீட்டில் தாபித்திருக்கும் இந்து தியலாஜிகல் யந்திரசாலையிலும், வளவனூர்க்குமாரபுரி மடாலயத்திலும், ஷெயூரில்வசிக்கும் பொய்கைப்பாக்கம் - அப்பாசாமியுபாத்தியாயரவர்களிடத்திலும் விலை அணா-ச கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். வெளித்தேயத்தார் தபாற்கூலி அனுப்பவேண்டும்.

உ

முருகக்கடவுடுணை.

# ஏகத்தாள்

# இதழகலந்தாதி.

## காப்பு.

### கட்டளைக்கலித்துறை.

*சேயேகத்தாளிதழகலந்தாதிசெயச்செய்திரோ*
*சேயேகத்தாளிதழகலந்தாதிசெயச்செய்திரோ*
*சேயேகத்தாளிதழகலந்தாதிசெயச்செய்திரோ*
*சேயேகத்தாளிதழகலந்தாதிசெயச்செய்திரோ.*

(இதன்பதப்பொருள்.) சேயே-பிள்ளைவருக்கங்களிலக்கிரகண்ணியரான விநாயகரே, கத்து-பிரமகபாலத்தின், ஆளி-ஆள்கையுடையவரான சிவபெருமானே, தழு - ஆலிங்கனஞ்செய்கின்ற, அகலம் - மார்பினிடத்து, தாதி- தனதடிமைப்பெண்ணாகிய லட்சுமியையுடைய விட்டுணுவே, செய் - தவத்தோர் பாவனைப்படி, அச்சு-திருமேனி, எய்து-கொண்டருளும், இரே-வியாபகப்பொருளே, சேய்-தூரத்தில், ஏகு-செல்கின்ற, அத்து-செம்மைப்பொருளான சூரியனே, ஆளி-சிங்கவாகனத்தை, தழு-அங்கிகரித்த, அகல் - விருத்தியடைகின்ற, அம்-அழகுள்ள, தாதி - சத்ததாதுக்களுக் கதிட்டானமான பராசத்தியே, செய்-சிவப்பின், அச்சு - அடையாள முள்ளவைகளெல்லாம், எய் - இளைக்கத்தக்க, திரே-மேன்மையும், சேயே-செவ்வாயென்னுங்கிரகமும், கத் - சுவர்க்கலோகத்திற்குவேண்டிய, தாள்-அநுகூலமுயற்சியும், இதழ-இதழ்களையுடையனவான பூமாலைகளும், கல்-மலைகளும், அந்து-பொருத்தமான, ஆ-வியப்புள்ள, தி-அறிவுத்தன்மையும், செய - வெற்றிக்கு, செய்-விளைநிலம்போன்ற, திரு-தெய்வீகமும், ஏ?பொருந்திய, சேய்-முருகக்கடவுளைக்குறித்த, ஏக-ஒன்றேபோன்ற, தாள்-அணிகளோடுகூடிய கவிகளாற்சொல்லும், இதழகலந்தாதி-இதழகலந்தாதியென்னும் பிரபந்தத்தை, செய-பாடும்படி, செய்திர்-அநுக்கிரகியுங்கள்.-எ-று. ஏ-ஈற்றசை.

(கருத்துரை.) விநாயகருஞ் சிவபெருமானும் விட்டுணுமூர்த்தியுங் குருவென்றும் பரமென்று நிதானிக்கப்படாமற் பாவனைப்படி விளங்குகின்ற வியாபகப்பொருளுஞ் சூரியனும் பராசத்தியுமாகிய நீங்கள் சமானமில்லாத செந்நிறத்தையும் அங்காரகனென்னுங் கிரகத்தையுந் தேவலோக முய்வதற்கான முயற்சி

யையும் பலபூமாலைகளையு மலைகளையு மிசைவான வியப்புற்ற பேரறிவையுஞ் செயம் விளைகின்ற நிலம்போன்ற தெய்வீகத்தையுமுடைய முருகக்கடவுளுக் கேகபாதத்திதழகலந்தாதி பாடும்படி எனக்கநுக்கிரகஞ்செய்யுங்களென்பதாம்.

(ஞாயம்.) சண்மதங்களையுஞ் சண்முகமா வுணர்ந்த கவுமாரன் பாடும்பிர பந்தமாதலி னங்ஙன முள்ளவாறுமூர்த்திகளையும் வேண்டியவாறு மவற்று ளொன்றன்றே கவுமாரசமய மென்னிலதன்முடிவான குருத்துவமு மளவு படாப் பொருளாதலிற் சமயாதீதத்திற்கூட்டிப் பிரித்துக்கொண்டதுபோற் காட்டியவாறு மதனு லம்மூர்த்தியின் வணக்கமுந் தோற்றுதற்றவாறுஞ் சண் மதங்களின் விபரஞ்சொல்வார் சிலர் காபாலிகத்தைச் சேர்த்துக்கொண்டு கவு மாரத்தைக் கழிப்பதுண்டாயினு மஃது சைவத்தின் பிரிவேயாதலி னதைக் கழித்துச் சருவமத சம்மதமான குருத்துவப் பிரதிபாத்தியமுள்ள விதனைக் கூட்டப்பட்டவாறு மதற்குப்பிரமாணம் வேதத்தினஞ்சுருணியான வைதிக மார்க்கத்தோ ரநுட்டிக்கின்ற பஞ்சமூர்த்தி யுபாசனையே யென்பது மிங் ஙனம் பலவாறுகூறினு மாறுசமயங்களையு மங்கமாகக்கொண்டவாற்றாற்றெய்வ மொன்றென்றே விளங்குகின்றவாறு மிதனாற் சகுணப்பிரமோபாசனை யுள்ள போதே சமயாதீத சமரசத்தை யறிவதற்கானமார்க்க மக்கவுமாரமேயாகின்ற வாறும் பிறவுமறிக.

(இலக்கணம்.)பண்புநோக்கி மூர்த்திகள்வகுக்கப்பட்டன.தாதியென்ற சொல் லிற்குப் பூந்தாதிலைகின்ற லட்சுமியென்று கூறினுமமையு மன்றியுஞ் சூல பாணி பரசுபாணி யென்ற விதிவழி தாதியையுடையவனை யங்ஙனங் கூறப் பட்ட தென்னினுந்தகும். பாவனை மனத்தின்றொழிலாதலாற் செய்யெ ன்ற சொல்லை யதற்குபயோகப்படுத்தப்பட்டது. அன்றியுஞ் செயலென்ற சொல்லின் விகாரமாக்கி யொழுக்கமுறையெனக் கொள்ளவுங்கூடும். ஏகார மிரண்டிடத்தில் விளியாயு மிரண்டிடத்தி லெண் கூட்டும்பொருளாயும் வந்த மைபற்றி மயங்காது வேறுவேறுழியென்று மப்பதமவ்வுழி யப்பொருடரினே விரோதமென்று மறியவேண்டுவது. இருவேதிருவே யென்றபதங்களிரேதி ரேயென வந்தவாறும் வேறொருபொருளை விளக்குமாயிற் கூறியதுகூறினுங் குற்றமில்லை யென்றவிதிப்படி முற்கூறிய செய்யென்ற பகுதியுடைய செய் யவென்றுஞ் செய்தியென்றுமுள்ள பதங்களை வாக்கின்றொழிலாகிய பாடுதலுக் குங் கருணைப்பகுதியாகிய வநுக்கிரகத்திற்கு முபயோகப்படுத்தி யிருப்பது மறிக. இவற்றுட் பிற்பகுதி யவ்வுழி மற்றோரடியினு மப்பொருள் குறித்ததன் றென்பதுங்காண்க.இங்ஙனம் விரிப்பிற் பெருகுமெனச் சுருக்கினமாதலினமுக் காதின்றி யருமை பாராட்டும் பெரும்புலவர் முகத்திற் கேட்டுத்தெளிதல் கடமையாம்.

உ

முருகக்கடவுடுணை.

# ஏகத்தாளிதழகலந்தாதி.

## நூல்.

### கட்டளைக்கலித்துறைகள்.

சீராரயிலணிந்தான்றலத்தேற்றநஞ்செந்திலதே
சீராரயிலணிந்தான்றலத்தேற்றநஞ்செந்திலதே
சீராரயிலணிந்தான்றலத்தேற்றநஞ்செந்திலதே
சீராரயிலணிந்தான்றலத்தேற்றநஞ்செந்திலதே

(இ-ள்) சீர் - செல்வங்களுக்கு, ஆரை-மதில்போன்றுள்ள, இல்-மனைவியாகிய லட்சுமியை, அண்-பொருந்தியவரான விட்டுணுவும், இந்தான்-சந்திரசூடனான சிவனும், தல - பூமியையுடைய, தேற்ற-தெளிந்த தன்மைபொருந்திய, நம் - நம்மென்னும் பீசாட்சரத்தோனான பிரமாவுமாகிய மூவர்களினது, செம்-செவ்விதான, தில - விருப்பங்களைப்பொருந்திய, தே - கிருபையையும், சீரார் - சொற்சீர்களையுடைய புலவர்களையும், ஐ-தலைமையான, இல்-வீடாகிய மோட்சத்தையும், அணிந்து - அலங்கரித்துக் கொள்வதனாலுள்ள, ஆன்றல்-பெருமையையும், அந்து-செஞ்சிறத்தையும், ஏற்று - இடபவாகனத்தையுடைய, அனம் - அன்னம்போன்ற வுமையவளிடத்து, செம்-செனிக்கின்ற தன்மையையும், தில-எள்ளைப்போன்ற, தேசு-காரொளியான சனியனால், ஈரார்-இழுக்கப்படாதவர்களின், அயில்-புந்திக்கூர்மைக்கு, அணிநது-சமீபமான நிலையையும், ஆன்-ஒருக்காற் பசுவடிவான சிவபெருமான், தலத்து - விரித்தகையில், ஏற்ற-ஏற்றுக்கொண்ட, நஞ்சு-ஆலகாலவிடத்தை, எந்து-தாங்கிய, இல - இடமான கூர்மையுள்ள, தே - தெய்வத்தன்மையான, சீர்-சிறப்பு, ஆர் - பொருந்திய, அயில்-வேலாயுதத்தையும், அணிந்தான்-தரித்துக்கொண்டவரான முருகக்கடவுளின், தலத்து-வாசத்தலமான முப்பத்தாறு படைவீட்டுள்ளும், ஏற்றம்-உயர்ச்சியானது, நம் - எங்களுடைய, செந்தில் - திருச்செந்தூரென்னும், அதே - அத்தலமே.—எ-று.

(க-ரை.) திரிமூர்த்திகளினது செவ்விதான விருப்பங்களை யங்கிகரிக்குங் கிருபையையும் வித்துவான்களையு மோட்சவீட்டையு மலங்காரப் பெருமையையு மிடபவாகனத்திலேறு முமையவளுக்குக் குழந்தையான தன்மையையு மெட்போன்று கருநிறச்சோதியான சனியாற் பீடிக்கப்படாதவர்கட்குச சமீபமாகத் தோற்றுகின்ற நிலையையு மொருக்காற் பசுவடிவமாயுந் திருவிளையாடற்செய்த சிவபெருமான் கையாலேற்றுக்கொண்ட வாலகாலவிடந்தங்கிய கூர்மையோடுகூடித் தெய்வத்தன்மைபெற்றுள்ள வேலாயுதத்தையுந் தரித்துக்கொண்ட முருகப்பெருமான் வசிக்குந் தலமான முப்பத்தாறு படைவீட்டுள்ளுந் திருச்செந்தூரே யுயர்ச்சியுள்ளதென்பதாம்.

(ஞா-ம்.) செல்வத்திற் கதிதேவதையாகையா லிலக்குமியை யதன்மதிளென்று மவளாகிய பத்தினியின் பொருத்தமென்றதால் விட்டுணுவென்றும்

விநாயகர்முதலோருஞ் சந்திரனைத் தரித்திருப்பினு மவனுக்கபயப்பிரதானர் சிவபெருமானே யாதலி னவரை யிந்தானென்றுஞ் சிட்டித்ததாற் பூமியையுஞ் சரசுவதி சம்பந்தத்தாற் றெளிவையும் பிரமாவுக்குச் சொன்னதன்றி நம்மெனும் பெயர்கூறியது பஞ்சகிருத்திய தேவதைகளின் பீசமான பஞ்சாட்சரத்தின் முதலக்கர மஃதாதலானு மெவ்வகைப்பட்ட பீசங்களுக்கு மகரவொற்றப்புணர்தல் வழக்காதலானுமென்றுமறிக. குட்டியதாலுஞ் சக்கரந் தாருகனிடத்திருந்து மீட்டுக்கொடுத்ததாலு முபதேசித்ததாலுந் திரிமூர்த்திகள் விருப்பங்களையுடைய கிருபையென்று முழுதுணர் புலவனுதலிற் புலவர்களையும் பரமகுருவாதனுதலின் மோட்சத்தையு மகாடம்பனென்னு நாமத்தா லலங்காரப்பெருமையையுஞ் சொற்றமைபோன்ற ஞாயங்களைப் புராணவாசகயூகத்தாலு மான்றோர் பழக்கத்தானு மறியவேண்டுவது உமையவளுக்குத்தனித்தோ ரிடபவாகனமுண்டென்பது விசாரித்தறியவேண்டுவது சிவபெருமானுடை னிடபத்தேறுதலானு மமையும். எள்ளுக் கதிதேவதையாதலானு மற்றையகோட்களிற்சிறந்தவழியின தாதலானுஞ் சனிக்கு நிறத்தன்மையன்றியு மஃதுபொருந்தியவாறுந் தீக்கோட்களால் வாதனைப்படாதவர்க்குத் தெய்வநிலைசமீபமாகத்தோற்றுமாதலி னங்ஙனங்கூறியது மனுச்சோழனைச் சோதிக்கும்பொருட்டுச் சிவபெருமான் பசுவடிவ மெடுத்தாரென்பது முறையின் முப்பத்தாறு படைவீடென்றது திருவருட்சம்மதத்தாலுள்ள தன்கோளென்பது மற்றையவு மறியுமாறறிதல் கடனும்.

(இ-ம்.) ஆனையென் றதிலுள்ள வைகாரம் போலியாய் நின்றது இரண்டாமடியினு மவ்வுழி யங்ஙனமே நின்றது உவமைத்தொகை யாகுபெயராக உமையவளுக்குவந்த வன்னமென்ற பதமனமென மெலித்தது அணித்தென்றபத மணித்தென மெலித்தல் விகாரமாயிற்று ஏந்தென்றபத மெந்தெனக்குறுக்கல் விகாரமுற்றது ஆனுகிய சிவனை யங்ஙனங்கூறிய முறைமூர்த்த பேதமாதலி னதைப்பற்றிய விவகாரமின்று அனத்தின்கட் செம்மென வரவேண்டுவதனஞ் செம்மெனவந்த வுருபுத்தொகை முதலியவற்றை விரித்திலமாயினுங் கண்டுகொள்க. (௯)

செந்திலையாநின்றனதடியாரிற்செறியென்னையே
செந்திலையாநின்றனதடியாரிற்செறியென்னையே
செந்திலையாநின்றனதடியாரிற்செறியென்னையே
செந்திலையாநின்றனதடியாரிற்செறியென்னையே.

(இ-ள்.) செந்தில் - சிவகோடிகளிடத்திலும், வையா-ஒடுங்கியிருப்பவனே, நின்றன - நிலைபெற்றிடல்போன்ற, தடி-மின்னுகிய பெண்கள், ஆர்-பொருந்தி வசிக்கின்ற இல்-வீட்டுக்கெல்லாம், செல்-போகின்ற, தி - புத்தியுடையோன், என்-என்றுசொல்கின்ற, கையே-இகழ்ச்சியிலிடத்து, செம்-உண்டாகின்ற, இல்-விருப்புத்தேவேடிவு, ஐ-வையமியே, ஆலின்-பசக்களாலுண்டான, தன - சம்

பத்துடையோராய, தடியார் - வில்லாளிகளுமான விட்டுணு மூர்த்திகளுக்கும், இல்-மனைவியான வுமையவளை, செறி-தன்னிற் கலந்துகொண்டதும்,* எல்-சூரியனை, கை-துக்கப்படுத்தியதுமான, ஏ-வியப்பும், செம்-செவ்விதான, தில்லை-தில்லைத்தலமும், ஆன் - உடையவனுன சிவனுக்கும், இன்-சந்தோடத்தைச்செய்கின்ற, தன-தன்மையுடையவனே, தபு-இசைவுற்றும், இயாரில்-தம்மையொப்புக்கொடாத பெண்களைப்போன்று, செறி - ஊடலாற்கோபிக்கின்ற, என்னை-என தன்னையாகிய வள்ளிநாயகியை, ஏ-பொருந்துதலுற்று, செந்தில் - திருச்செந்தூரிலெழுந்தருளிய, ஐயா-அப்பனே, நின்-உன்னுடைய, தனது - சொந்தமான, அடியாரில் - மெய்யடியார் கூட்டத்தில், செறி-சேர்த்தருள், என்னை-அடியேனை.—எ-று. ஏ ஈற்றசை.

(க-ரை.) ஆன்மகோடிகளிலுங் கலந்திருப்போனே நிலையான மின்னலைப்போன்ற பெண்கள் வசிக்கும் வீடுதோறும் போகின்றவனென்று மிகழ்ச்சியைவிரும்புகின்ற சுவாமியே பசுக்களாலுண்டான செல்வத்தையும் வில்லையுமுடைய விட்டுணுக்களுக்கு மர்த்தநாரீச்சுர மூர்த்தமெடுத்தவருஞ் சூரியனைத்துன்பப்படுத்தியவருந் தில்லைச்சிதம்பரத்தை யுடையவருமான சிவனுக்குஞ் சந்தோடத்தைச்செய்கின்ற தன்மையுடையோனே யந்தரங்கத்திசைவிருந்துமில்லார்போன்றாடுகின்ற வெமதன்னையான வள்ளிநாயகியைக்கலந்து செந்தின்மாநகரத்தி லெழுந்தருளிய வப்பனே யுனது சொந்தமான மெய்யடியார்கள்கூட்டத்தி லடியேனைச் சேர்த்தருளென்பதாம்.

(ஞா-ம்.) சர்வாந்தரியா மித்துவமுள்ளோ னென்பதுதோன்ற வான்மகோடிகளிற் கலந்தோ னென்றதும்போகமூர்த்தியுமவனே யென்பானலர்விரும்புமாறு சொன்னது மசுரர்களைக்கெடுக்கும் போரையு முபதேசஞ்செயுங் குருத்துவத்தையும் வகித்தமையால் விட்டுணுவுக்குஞ் சிவனுக்குஞ் சந்தோடஞ் செய்வோனென்றது மங்களமூடுந்தன்மைமறக் கற்பினதாதலின் வள்ளிநாயகிக் கமைத்ததுஞ் சித்திமுத்தி யிரண்டுஞ் சாத்தியப்படாமையின் மெய்யடியாரிற் சேர்க்கப்பட்டில னென்றோர்ந்தவனஞ்சேர்க்கும்படி வேண்டியது மறிக.

(இ-ம்.) செந்திலயாவென வரவேண்டுமூழி செந்திலையாவென வந்தது போலி யைகாரமாயது அச்சொல்லிடையுற்ற வேழாமுருபா மில்லீற்று லகரவொற்றை வருமொழிமுதலா மவ்வுயிர்மெய்கொண்டுநின்ற வியற்கைப்புணர்ப்புறியாது மயக்குவர் பலராம் நிலைபெற்ற மின்போலி யென்றமையாற் பெண்ணென வுருவித்திடநோக்கிப் பண்மையாக்கொள்ளப்பட்டது. புத்தியோனென்றற்குப் புத்தியெனல் பின்மொழித்தொகை விட்டுணு வனந்தாவதார முடையவராதலிற் பன்மை பொருந்திற்று தடியாரென்றசொற்குப் பசுமேய்க்குங் கோலுளாரென்னினும் பெருத்தவடிவுள்ளாரென்னினு மமையும் தங்கள் வேள்வியிற் பற்களைத்தமையால் சூரியனைத் துன்பப்படுத்தியதாகக் கூறப்பட்டது முதலடி யீற்றேகாரம் வீடேபிறுப்பினு மென்றபிரகார மேழா

முருபிற் குபயோகப்பட்டது இரண்டி லங்கனமுள்ள வது வியப்பிற்குச் சொன்ன• தலகவழக்கால் மூன்றி லங்கனமுள்ள வதை யேய்தலென்னும் பதத்தின் பகுதியென்றும் விகாரமென்றுஞ் சொல்வாருளா ரவற்றுளொன் றுந் தள்ளற்பாற்றன்று ஈயாரிலென்னும்பத மியாரிலெனக் குறுக்கல் விகார முற்றது. (உ)

என்னனையாதியநான்காயநாதனிளங்கந்தனே
என்னனையாதியநான்காயநாதனிளங்கந்தனே
என்னனையாதியநான்காயநாதனிளங்கந்தனே
என்னனையாதியநான்காயநாதனிளங்கந்தனே.

(இ-ள்.) எல் - சூரியனையும், நனை - தேனையும்போன்ற, ஆ-வியப்புள்ள, தி-அறிவுக்கு, அனுன்-உவமைப்பொருளாயவரும், காய-சரீரத்தின், நாது-இன்மை, அன்-உடையனுன மன்மதன், இளங்கு-தாழ்ச்சியடையத்தக்க, அந்தன் - அழகியரும், ஏ - பாணத்தை, என்ன - போன்று, நை-சங்காரத்தொழில்செய் கின்ற, ஆதி-சிவனுகிய, அனுன்-அவர், காய்-மோகத்தால் வெதுப்பத்தக்க, அகா-உலகமாதாவான வுமையவள், தன்-உடைய, இளங்கம்-இளக்கமென்னுமுருக்க மாகிய, தன்-தன்மையின், ஏ-பொருத்தமானவரும், எல்-இகழ்ச்சியால், நனை-முழுகப்பட்டு, ஆது-குற்றமான, இய-வார்த்தைகளைப்பேசுகின்ற, நான்-என தான்ம சொரூபம், கய்-பிரகாசிக்கத்தக்க, அ-அந்த, நாதன் - ஒலியையுடைய வரும்,இளம்உன்மத்தத்திற்கு,கந்தன்கிழங்குபோன்றவரும்,நே-விரும்புகின்ற என் - என்னுடைய, அனை-தாய், ஆதிய-முதலான, நான்கு - நால்வகையுறவும், ஆய-ஆகிய, காதன்-இறைவனொன்றல, இளப்-இளமைத்தன்மை நீங்காத, கந்தனே-கந்தக்கடவுளே.—எ-று. அன்றியும் முதலடியிலுள்ள (காயநாதனிளங் கந்த) னென்றலைச் சரீரத்திற் காதாரமான பிரமா தாழத்தக்க முடிவை யுடையாரொன்று மூன்றுமடியிலுள்ள (ஆதியநான்காயநாத) னென்றலைக்குற்றமாகிய காட்டிலுள்ள வகங்காரத்தைக் கெடுக்கின்ற வகரத்தொனியுடையாரொன் றும் பொருள்கூறினு மமையும்.

(க-ரை.) சூரியனையுந் தேனையும்போன்ற வியப்புள்ள வறிவுக் குவமைப் பொருளானவரு மன்மதன் றாழத்தக்க வழகையும் பிரமாதாழத்தக்க பொருண் முடிவையு முடையவரும் பாணம்போன்று சங்காரத்தொழில் செய்கின்ற சிவபிரான் மோகவெப்பமடையத்தக்க வுமையவளுருக்கத்தன்மைக்குப் பொருத்தமானவரு நிந்தையின்முழுகிக் குற்றவார்த்தைகளைப்பேசு மெனதான்ம சொரூபம் விளங்கும்படிக்கு மகங்காரங் கெடும்படிக்கும் பேசுமொலியை யுடையவரு முன்மத்தத்திற்குக் கிழங்குபோன்றவரும் விரும்புகின்ற வெனது மாதா பிதா குரு தெய்வமென்னு நால்வகை யுறவுமானவரு மாரொன்று மிள மைப்பருவ நீங்காத கந்தக்கடவுளே யென்பதாம்.

(ஞா-ம்.) பிரகாசத்தாற் சூரியனையு மினிமையாலும் பலவாறு கூட்டப் படித்தன்மையாலுந் தேனையு மறிவுக்குவமைகூறியது மதிலும் பெரும்பேறின் மையா லதற்குவமைப்பொரு ளென்றவனைக்கூறியது மழகாலும் புலமைத்

திறத்தாலு மன்மதனையும் பிரமாவையுந் தாழ்த்தியதும் விளைவாலுங்கொடுமை யாலுஞ் சங்காரத்தொழிற்குப் பாணத்தை யுவமித்தது முமையவளின் வல்ல பந்தோற்றச் சிவன் வெதும்புந்தன்மைகூறியது மகவாசையின் பெருமையும் பாட்டுடைத்தலைவ னருமையுந்தோற்ற வப்படிப்பட்ட வுமையவளி னுருக் கத்தைக்காட்டியது மவன் வார்த்தையின் மகிமையினைக்குறித்தான் மப்பிரகாசத் தையு மகங்கார நாசத்தையுங்காட்டியதும் வீரமும் பிரபுத்துவமுந்தோற்ற வுன்மத்தத்திற்குக் கிழங்குபோன் றவனென்றது மவனைத்தவிர வேறுறவறியே மென்பா னூல்வகையுறவு மவனேயென்றது மாதாவாதிய நாற்பொருள் பிதா குரு தெய்வமென்பன சேர்ந்தவையேயெனல் சருவசாத்திர லோகப்பிரசித்த மென்பது மிரட்டுற மொழிந்த பொருளையுங் கருத்துரையிற் கூட்டிக்கொண்ட வாறுங்காண்க.

(இ - ம்.) முழக்கமென்ற பெயர்ச்சொல் வினைவழி பெயரொச்சமாம் போது முழங்கு முகிலென வருமாறு இளக்கமென்ற தாழ்மைப்பெயர்ச்சொல் விளங்கந்தனுயிற்று அன்னுனென்றபத மனுனென மெலிந்தோருழி போல்வா னெனப் பொருடந்து மற்றோருழியவனென்னுஞ் சுட்டுப்பொருடந்தது பிற் பொருள் பலர்க்கையந் தருமாதலின் "அன்னுன்சேவலு மயிலும்போற்றி" யெ னலாதிய வான்றோருரையாற் றெளியக்கடவர் அன்னையென்ற தாய்ப்பெயர் மெலிந்து அனுவென விளிபோன்றமைந்ததின் மருளார் தம்மாவந்தாள் அப் பாவந்தாவொன்று மொழிவழியெனக்காண்க அதனடுத்த தன் சாரியை யுடை மைகாட்டி நின்றது இளக்கமென்னு முருக்கப்பெயரிளங்கமென மெலித்தாறு முருபு தொக்கு நின்றதடுத்த தன்மைப்பெயர் மை விகுதிகெட்டு நின்றது இகழ்ச்சியி னனைதன் முழுகல்பற்றி நின்றது அது வெப்பமாதலிற் குளிர்ச்சிக் குறிப்பு கூடாதென்பார் வஞ்ச நிந்தைபோலு மென்றுங் குளிர்மிகினுந் தாங்க லரிதென்றுங்காண்க தீ யென்னுமறிவுப்பெயர் தி னைவந்ததற்குஞ் சிறப்புன கரம் பொது நகரமாறி நின்றதற்கு மனையவாய பலவற்றிற்கும் பெரும்புலமை யுடையோனைக் கேட்டுத்தெளியவேண்டும். இப்பிரபந்தத்திற்கு முந்திய சிவ னேகபாதத்தந்தாதி யுரையானு மனேகம் வெளியாமாறுங் கண்டுகொள்க. (அ)

கந்தனையெண்ணிக்கனியாதசித்தங்கடைத்தகைத்தே
கந்தனையெண்ணிக்கனியாதசித்தங்கடைத்தகைத்தே
கந்தனையெண்ணிக்கனியாதசித்தங்கடைத்தகைத்தே
கந்தனையெண்ணிக்கனியாதசித்தங்கடைத்தகைத்தே.

(இ-ம்.) **கந்தன்-பொதியமலையையுடைய வகத்தியமுனிவரது, ஐ-சுவாமி யும், எண்-இகழப்பட்ட, இக்கனி-கரும்பனுனமன்மதனையுடைய கடிதடத்தா லுண்டாகும், ஆது-குற்றத்தோடேகூடிய, அசித்தம்-அஞ்ஞானிகளாகியவெமது, கன்-கள்ளத்தனத்தை, தைத்த-அடைத்துள்ள, கை-சிறுமைபொருந்திய,தேகம்- சரீரத்தின், தனை-அளவை, எண்ணிக்கு - தொகைப்படுத்துகின்றவனுன பிரமா வுக்கு, அனிய-சம்பந்தமில்லாத, அத-அத்திமரம்போன்ற, சித்து-ஞானத்துக்கு,**

அம்-அழகாயிருப்பவரும், கடு-விடமாகிய, ஐ-அதை, தகைத்த - தடைசெய்த, ஏகம்-ஒருபொருளானசிவபிரானுக்கு, தனை-குழந்தையும், எண்-எட்டென்னும் தொகையுள்ள, இக்கன்-தேன்போலுமினிமையுற்றோனும், நியாத-அங்கந்யாச கரந்யாசமென்னும் கிரியாசம்பந்தமுள்ள, சி-நெருப்பில், தங்கு - அதிட்டித்துவசிக்கும், அடு-சங்காரத்தொழிற்பெற்ற, ஐந்த-தலைவரானவுருத்திரர்களையுடையனவான, கை-கைகளைக்கொண்ட, தே-தெய்வமுமான, கந்தனை-கந்தமூர்த்தியை, எண்ணி-தியானஞ்செய்து, கனியாத-முதிர்ச்சியடையாத, சித்தம்-மனமானது, கடை-கீழ்மையான, தகைத்தே-குணமுடையதே.—எ-று. அன்றியுமுதல்வரியிலுள்ள விக்கனியாதென்றசொல்லிடையுற்ற இகரத்தை யெண்வடிவாக்கொண்டு பெண்கள்சரீரத்தின் பாதியிலுள்ள மன்மதன்வாசத்தலமான கடிதடத்தாலுண்டாங்குற்றமெனப்பொருள்கூறினுமமையும்.

(க-ரை.) பொதியை முனிவருக்கிட்ட மூர்த்தியும் காமவிகாரத்தாற் குற்றப்பட்டு கள்ளத்தனத்துக் கிருப்பிடமாகின்ற வெமது சரீரங்களின் கணக்கினுக்குமுள்ள பிரமாவுக்கெட்டாம லத்திமரம்போன்றுள்ள ஞானத்துக்கழகாயிருப்பவரும் ஆலகாலவிடத்தைத்தடுத்த சிவபெருமானுக்குக் குழந்தையும் எட்டுவகைச் சந்தோடத்தை யுடையவரும் சருமாநுட்டானங்களுக்கு முக்கியமான நெருப்பிற் சம்பந்தப்பட்டுச் சங்காரத்தொழிற்குத் தலைமைபெற்றுள்ள வுருத்திரகணங்களாகிய வாயுதந்தரித்த கையோடிருக்குந்தெய்வமுமான கந்தசுவாமியைத்தியானித்துக் கனிவடையாதசித்தந்தாழ்மைப்பட்ட குணமுடையதேயென்பதாம்.

(ஞா-ம்.) மன்மதனுக்கரசாட்சித் தானங்கடிதடமேயென்பது மதனாகமப்பிரசித்தமென்பதும் பிரமாசரீரஞ்சிருட்டிக்கும் வேலைக்காரனுதலிற் சலிப்பாலொவ்வோருயிரைப்பற்றியு மிதற்கித்தனை சரீரஞ்செய்தோமே யின்னுமெத்தனை செய்யவேண்டுமோ வென்றெண்ணுங்கணக்குடையனுவானென்பதும், ஞானவியாபகத்தடங்கும் பிரகிருதியை யனேகங்காய்களோடுள்ள வத்திவிருட்சமாச் சொல்வதான்றோர் வழக்கென்பது மெட்டென்னுமினிமை யட்டமாசித்திமுதலிய பலபொருடருமென்பதுமறிக அன்றியகத்தியருக்குச் சுவாமியாதல் சிவபெருமான்விடத்தைத்தடுத்தல் உருத்திரகணங்களாயுதமாய்க் கையிலிருத்தலாதிய சாதாரணத்தோர்க்கும் வெளிப்படையாதலின் விரித்திலம்.

(இ-ம்.) இக்கலையுடையபெண்குறியை யிக்கனியெனச்சொல்லியிருக்கின்றது தலையன்தலையளென்னும்பதத்தின் பகுதியானதலையைக் குழந்தைக்குபயோகப்படுத்தியிருக்கின்றது நியாசமென்றபதத்துள்ள சகரந்தகரமாமுறைவழிவந்திருக்கின்றது ஐ யென்னும்பதத்திலொருமைப் பொருளிலுடைமைகாட்டும் தவ்விகுதியும் பன்மைப்பொருளிலுடைமைகாட்டும் அகரமும்புணர்ந்துடையதுவென்னும் பொருடந்தது அன்றியுந்தேகத்தின்றலையை யெனவரவேண்டுவது தேகத்தலையெனவந்தமைபோது முருபுந்தொகையாதிய வற்றைவிரித்திலம்.

(அ)

கைத்தந்தியானனத்தற்கிளையானெண்ணில்கல்லினனே
கைத்தந்தியானனத்தற்கிளையானெண்ணில்கல்லினனே
கைத்தந்தியானனத்தற்கிளையானெண்ணில்கல்லினனே
கைத்தந்தியானனத்தற்கிளையானெண்ணில்கல்லினனே.

(இ-ள்.) கைத்து-பொன்மலையைத்தாங்கிய, அந்தி-செவ்வானம்போன்ற சிவபெருமானை, ஆல் - ஆடும்படிசெய்கின்ற, நல்-உத்தமப்பகுதியான, நத்து-மூக்கணிதரித்த, அல்-இருண்ட நிறமுள்ள வுமையவள், கிள்-சந்தோடத்தாற் கிள்ளிக்கொள்வதற்குரிய, ஐயான்-அழகையுடையவனும், எண்-யாவராலுமதிக்கத்தக்க, இல்-மனைவியாகிய பூமியை, கல்லினன்-தோண்டிய விட்டுணுவுக்கு, நே-பிரியமானவனும், கை-ஒழுக்கத்துக்காதாரமான, தந்தி-நூல்களை யுடையவனும், ஆன்-போரேறு போன்றவனும், அனத்தற்கு-அன்னவாகனனான பிரமாவுக்கு, இளையான் - தோல்வியுறாது வென்றவனும், எண்-எட்டுவிதமாய், நில்-நிலைபெற்ற, கல்லி - ஓசையாகிய வண்ணத்தை யுடையவனும், நன் - நன்மையின், ஏ-பொருத்தமுள்ளோனும், கைத்து-வெறுப்பினால், அம்-அழகுபெற்ற, தியான-யோகாநுபூதியை, நத்தல்-விரும்புந்தன்மையுற்ற, கிளையான்-அருணகிரிநாதரான கிளியையுடையவனும், எண் - ஆன்மவிசாரத்திற்கு, இல்-இடமானவனும், கல்-விடந்தீர்க்கு மணிபோன்றவனும், இனன் - சூரியனால், ஏ-வியக்கத்தக்க, கை - துதிக்கையுற்ற, தந்தியானனத்தற்கு - ஆனைமுகமுள்ள விநாயகமூர்த்திக்கு, இளையான் - பிற்சகோதரனுமான முருகக்கடவுள், எண்ணில் - எண்ணிக்கையி லடங்காத, கல்லினனே-மலைகளையுடையவனே.—எ-று. அன்றியு மிரண்டாமடியி லனத்தற்கிளையானென்ற சொல்லை யாவருக்கும் விபரீதஞ்செய்த சூரனைவென்றோனெனப் பொருள்கூறினுமாம்.

(க-ரை.) சிவபெருமானுடும்படி செய்கின்றவளு மூக்கணி தரித்தவளுமான வுமையவள் கிள்ளிக்கொள்ளத்தக்க வழகனும் வராகாவதாரமெடுத்துப் பத்தினியான பூமியைத்தோண்டிய விட்டுணுவுக்குப் பிரியமானவனு முத்தம நூல்களை யுடையவனும் போரேறு போல்வானும் வாதத்தாற் பிரமாவையும் போராற் சூரனையும் வென்றவனு மெட்டுவிதமாக நிலைத்த வண்ணத்தொனியுள்ளவனு நன்மையிற் பொருந்துவோனு நிராசையென்னு மலங்காரமுற்ற அருணகிரிநாதரான கிளியுள்ளவனு மான்மவிசாரத்திற் கிடமானவனும் விடந்தீர்க்கு மணிபோன்றவனுஞ் சூரியனால் வியக்கத்தக்க விநாயகருக் கிளையவனுமான முருகக்கடவு ளனந்தமலைகளையுடையவனே யென்பதாம்.

(ஞா-ம்.) கைத்தென்றசொல்லிற் பொன்னெனும்பொருளே பிறப்பதாயினு மேருவிற் பெரும்பொன்னின்மையா லதுவருவிக்கப்பட்டது. அந்திவண்ணமுள்ள சிவனை யாடும்படிசெய்யு முமையவள் கிள்ளிக்கொள்ளு மழகென்றதா லதன்பெருமை விளங்கும் பத்தினியைத்தோண்டிய விட்டுணுவென்றதா லுலக நலத்தின்பொருட்டுத் தனது நட்டத்தையுஞ் செய்வாரென்பது வெளியாம் அவருக்குப் பிரியனென்றதா லத்தொழிலின் முயல்வா

னெனப்பேராருடரும் றூனுள்ளோ னெனுஞ்சொன் முழுதுணர் புலவனென்னும் பெயரைக்குறிக்கும் பிரமாவையுஞ் சூரனையும் வென்றமை ஞானவீரங்களின் முதிர்ச்சிகாட்டும் சந்தத்தொனி தமிழ் விருப்புணர்த்தும். நன்மையிற் பொருந்த நீமையின் வெறுப்பைக்காட்டும் நிராசைதவத்தின் பெருமையையுங் கிளியைக்கொள்ளல் கருணைப்பொலிவையு மான்மவிசாரங் குருத்துவத்தையும் விடந்தீர்க்குமணி யுவமை தீட்சாப்பிரபாவத்தையும் விளக்குமெனக்காண்க. விநாயகர் விசுவரூபத்திற் சூரியமண்டல மனையளவினின்றதா லவனால் வியக்குந்தன்மை சொல்லப்பட்டது தானுற்பவித்தபின்பே தேவோற்பவமின்மையான பெருமைதோன்ற விளையோனென்றது மெய்ச்சமயத்தோ ரொத்தேவரைக்குறித்தேனு மலையி லராதனஞ்செய்யி லஃதிவனையே சாருமென்பான் பலமலைகளை யுடையானென்றது மறிக.

(இ-ம்.) முற்கூறிய பண்பாலல்லென்றசொல் லுமையவளாயிற்று பூமியையக்குறித்த இல்லென்றபதந் திரியவேண்டுதொழிந்தமையிடத்தால்வந்தமைதி ஆனென்ற பொதுப்பெயரைப் போரோறெனச் சிறப்பாகத்தழுவப்பட்டது எட்டுவித வோசையென்றதால் வண்ணமெனக் குறிக்கப்பட்டது அன்னத்தனையனத்தனென்றும் நன்மையை நன்னென்றுங் கிள்ளையைக்கிளையென்றுஞ் சொன்னவாறும் பிறவும் பலவாறு முன்விரித்துள்ள மாதலானும் புலவர்வாய்ப்பாட்டிற் சேர்ந்தனவே யாதலானுந் தெரியக்கடவர். (௫)

கல்லனந்தத்தற்கடியேனங்காளிலங்கைக்கிளியே
கல்லனந்தத்தற்கடியேனங்காளிலங்கைக்கிளியே
கல்லனந்தத்தற்கடியேனங்காளிலங்கைக்கிளியே
கல்லனந்தத்தற்கடியேனங்காளிலங்கைக்கிளியே.

(இ-ள்.) கல்லன் - ஓசையையுடையவன், அந்து - தன்னைத்தழுவிக்கொள்ளும், அத்தற்கு-சிவனுக்கு, அடி - வமிசத்தினடியாயிருப்பவன், ஏனன்-வராகமூர்த்தியும், ஆளி - நரசிங்கமூர்த்தியும், லங்கைக்கு - இலங்காபுரிப் பட்டினத்துக்கு, இளி-அவமதிப்பான நிந்தையெல்லாம், ஏகு - போய்ச்சேர்வதற்கான, அல்லல்-துன்பத்தை, நந்து-விர்த்திசெய்த, அத்தற்கு - கையுடைய ராகவமூர்த்தியுமான விட்டுணுவுக்கு, அடி-நெருக்கமானவன், ஏ-பாணங்களின், நன்-நன்மையுள்ள, ஆள்-அடிமையான வீரவாகுமூர்த்தி முதலாயினோரால், இலங்கு-பிரகாசிக்கின்ற, ஐ-சுவாமி, ஒளி-ஒள்ளியெடுத்தல்போலுஞ் சொற்பஞ்சொற்பமாய், ஏ - தனக்குவேண்டியவற்றை, கல் - கற்கின்ற, அனம்-அன்னப்பட்சி போன்ற சாவெறியின், தந்து - ஆபத்துகளையும், அல்-அஞ்ஞான விருளையும், கடி-கோபிக்கத்தக்க, ஏனன் - பாத்திரமானவன், ஆன் - தன்னாலாளப்பட்ட, இலம் - தெய்வானை வள்ளியென்னு மனைவியரின், கைக்கு-சீலத்திற்கு, இளிஇளைக்கமானவன், ஏ-வியப்பான, கல்-மலைகள், அனந்தத்தற்கு-அனேகமுடையவனான முருகக்கடவுளுக்கு, அடியேன்-தொண்டனாகிய நான், அங்காளிப்பூர்வகாலத்தில், அன்னைஅனைதழுவிய கையிலிடத்திருந்த, இளியே-கிளியான [illegible]-று.

(க-ரை.) ஓசையுடையோனு மெடுத்தணைந்துக்கொள்ளுஞ் சிவபெருமான் வமிசத்தி னடியானவனும் வராகன் நரசிங்கன் இராமனென்னு மவதாரஞ் செய்த விட்டுணுவுக்குப் பொருத்தமானவனும், பாணங்களானன்மைபெற்ற வீரர்களை யடிமையாயுள்ள சுவாமியுங், கொஞ்சங்கொஞ்சமாத் தன்னிடத்திற் கல்விகற்கின்ற கலைமகளாபத்தையு மஞ்ஞானத்தையுங் கோபிக்கின்ற பாத்திர மானவனுங், தெய்வானையம்மன் வள்ளியம்மனென்னு மனைவியர் சிலத்திற் கிணக்கமானவனும், பலமலைகளை யுடையவனுமான முருகப்பெருமானுக்குத் தொண்டனான நான் ஆதிநாளிலவனது கையிலிருந்த கிளியே யென்பதாம்.

(ஞா-ம்.) முழுதுணர் புலவனாதலி னோசையுடையோனென்றதும், சிவ பெருமான் வமிசத்தின் முருகனுக்குப் பிந்தினோரின்மையா லடியென்றதும் வீரவாகுவாதியரிருக்க வங்ஙனஞ்சொன்ன தேதென்னி னுமாதேவியின் புத்திரரைக்குறித்த வுண்மையென்றதும், விட்டுணுவைப்போன்றசுரரைக் கறுவுதலாலவருக்கு நெருக்கமென்றது மேற்கூறிய விபகாரந்தோற்ற வீரவாகுவாதியரை யடிமையென்றதுங் கலைமகள் கல்விகற்கை முருகனிடத்தே யென்றல் வீராகமமாதிய நூற்பிரசித்தமென்றதுங் கற்பகத்தருநிழலிற் கொலுவிருத்தலாதியவற்றாலுங் குறிச்சிவாசமாதியவற்றானு மிருமனைவியர்க்குமிணக்கமுடையானென்றது மலைத்தெய்வமென்ற துயர்ச்சிதோற்றவென்றதுந் தன்னைக் கிளியென்ற தநுபவரகசியமென்பது மங்ஙனம்போய்கூறிற்றானும் புகழ்ச்சிப் பொருட்டமைத்ததென்னி லங்ஙனங்கூறுவர் தாமும் பெருத்த நரகவாதனைக் குப்பாத்திரராதல் சத்தியமென்பது மறிக.

(இ-ம்.) அடிமைப்பெயராகிய ஆளென்னு மொருமையை முற்குறித்த பன்பால் வீரர்கட்குப் பன்மையா யுபயோகப்படுத்தி யிருக்கின்றது. சுவாமி யென்னும் பொருடந்த ஐக்கமித்த ககரவொற்றுச் செய்யுள்விகாரத்தான் மிகலேயா மிபல்லென்பாருமுளார். ஏனங்கா ளென்றபதத்திற் கடைவரி யல்லா மூவிடத்து ககரமிரட்டல் சாதாரணப்பாடல்களினு மகரமிரட்டலாதியவற்றைக்காணும் புலவர்க்கு விகற்பமாகத் தோன்றுதனவாம் கிள்ளியென்றற்குக் கிளியென்றும் அன்னமென்றற் கனமென்றும் இல்லமென்றற்கு இலமென்றுஞ் சொற்றுள்ளனவும் பிறவு மான்றோர் வழக்கேயாம். (௬)

கிளியென்றிசைத்தனையாண்டிலையேயிதக்கேடென்னையே
கிளியென்றிசைத்தனையாண்டிலையேயிதக்கேடென்னையே
கிளியென்றிசைத்தனையாண்டிலையேயிதக்கேடென்னையே
கிளியென்றிசைத்தனையாண்டிலையேயிதக்கேடென்னையே.

(இ-ள்.) கிளி-சோழராசனால், என்று-எக்காலும், இசைத்த-கலகமின்றிப் பொருத்தியாளப்பட்ட, நய-மேன்மைதங்கிய, ஆண்டு-சோழநாடாகிய வவ்விடத்துள்ள, இலை-படைவீடாகிய திருவேரகத்தை, ஏயி-பொருந்தி வாழ்வோனே, தக்கு-தகுதியான, ஏடு-இதழுள்ள தாமரைக்கும், எல்-பகற்பொழுதுக்கும், கை-துன்பத்தின், ஏகு-நிவிர்த்திக்கும், இளி-இணக்கமுற்ற, என்றி-

சூரியமண்டலத்தையுடையவனே, சைத்த - இகழ்ச்சிக்குறிப்புள்ளனவான, னையாண்டி-சரசவினோத, லயே-கூத்துடையோனே, இதக்கு-நன்மைக்கும், ஏடு-சுவடியைத் தரித்துக்கொண்டிருக்கிற, என்னை-எமதன்னையான சரசுவதிக்கும், ஏ - வியப்புச்செய்வோனே, கிளி - சமுத்திரத்துள்ளவொருசாதிமீனை, என்-உவமிக்கத்தக்க, திசை-முத்தியின், தனை-யளவாயிருப்போனே, ஆண்டி-தவவேடமுள்ளோனே, லய-ஒடுக்கமான, இயி-இயமென்னும் வார்த்தையுடையானே, த-பிரமாவாலுண்டான, கேடு-பொல்லாங்கைக்கொண்ட, என்னையே-அடியேனை மற்புறுத்தி, கிளியென்று-உன்னுடைய கிளியென்பதாய், இசைத்தனை - சொல்லியநீ, ஆண்டிலையே - ஆண்டுகொள்ளா திருக்கின்றாயே, இத-உனதுரிமையை, கேடு - அழிக்கத்தக்கது, என்னை - யாதிருக்கிறது.—எ-று. ஏ - ஈற்றசை.

(க-ரை.) சோழநாட்டிலுள்ள படைவீடாகிய திருவேரகத்தில் வசிக்கின்றவனுந் தாமரைக்கும் பகற்பொழுதுக்குஞ் சந்தோடத்திற்கும் பொருத்தமான சூரியமண்டலத்தை யுடையவனு மிகழ்ச்சிக்குறிப்பான சரசக்கூத்தாடுவானு நன்மைக்குஞ் சரசுவதிக்கும் வியப்பைச்செய்வானுஞ் சமுத்திரத்துள்ள மீனையுவமிக்கத்தக்க முத்தியினளவா யிருப்பவனுந் தவவேடத்தோனு முடிவான வார்த்தைக்காரனுமான குமரக்கடவுளே பிரமாவாற் பொல்லாங்கடைந்திருக்கிற வென்னை யுனது கிளியென்றுசொன்ன நீ யதற்கானபடி யாண்டுகொள்ளவில்லை யுனதுரிமையை யழிக்கப்பட்ட தியாதிருக்கின்ற தென்பதாம்.

(ஞா-ம்.) தக்கவிதழென்ற சொல்லா லதனுள்ள தாமரை வருவிக்கப்பட்டது பகற்போதே யெவ்வுயிர்க்கு மினியதாதலிற் றுன்பநிவிர்த்திக் கிணக்கமுள்ளது சூரியனெனச்சொல்லப்பட்டது அதன் மத்தியிற் றியானிக்குமுறை சண்மதங்களுக்கும் பொதுவாதலினதை யுடையானென்றமை பொருந்திற்று சல்லாப விநோதத்தானு மாவேசத்தானுமாதலாற் சரசக்கூத்தனென்று சொல்லப்பட்டது நன்மைக்குஞ் சரசுவதிக்கும் வியப்பைத்தருதலென்றசொல் பழுதற்ற கீர்த்தியையுங் கல்வித்திறத்தையும் விளக்கியது பொதுப்படவெமதன்னையென்றசொல் வித்துவான்களனைவரையும் பற்றிநின்றது ஏடுதரித்த பண்டாரச் சரசுவதியென்றற் கிடமுண்டாயிற்று சமுத்திரத்து மீனை முத்திக்குவமித்தவாற்று லதுபோன்றுதன்னைப் பாத்துளமிழ்த்திப் பிரிவறநிற்றலே யந்நிலையெனுங் குறிப்புப்பொருடந்தது அளவென்றசொல் வியாபகத்தை விளக்கியது தவவேடந் தண்டபாணி மூர்த்தத்தையு மொடுங்கியவார்த்தை ஞானோபதேசத்தையும் ஆண்டிலையேயென்றல் சாத்தியதிசை வராமையாற்கொள்ளு மாத்திரத்தையும் என்னையென்றவினு வொருவாறான சந்தேகத்தையுங்காட்டின, மற்று சேரிடுமையங்களுண்டானாற் பெரியோர்களாற் றேறக்கடவர்.

(இ-ம்,) கிள்ளியென்னுஞ் சோழன்பெயர் கிளியென மெலிந்தது என்றென்னுஞ்சொல்லி னும்மை தொக்கதாக்கூறினும் வினாவாக்கொண்டதன் விடை யென்னைமாமெனக் கருதினுங் குறித்தபொருடரும் இல்லையென்றற் கிலையென்றதும் லைவு என்றசொல்லில் யுகரச்சாரியையின்றி லையென்றது மூருபுத்தொகைகளும் லையென்றபத மீருழிபோலியா நின்றதும் லய, இயி, லயேயியான வியல்புப்புணர்ச்சியும் பிறவு மறியக்கடவர். (௪)

என்னகத்தாடல்செய்யாறக்கரத்திலியலண்ணலே
என்னகத்தாடல்செய்யாறக்கரத்திலியலண்ணலே
என்னகத்தாடல்செய்யாறக்கரத்திலியலண்ணலே
என்னகத்தாடல்செய்யாறக்கரத்திலியலண்ணலே.

(இ-ள்.) என்நக-எந்தமலையின், தாள்-அடிவாரமும், தல்-தலங்களும், செய்-விளைநிலமும், ஆறு - கங்கையாதிய நதிகளும், அக்கர் - க்ஷேத்திரப் பொலிவுள்ள விந்திரர்களின், அத்து-பொன்னுலுமணியாலுஞ் செந்நிறங்காட்டும், இல்-மனைகளும், இயல்-முதன்மைத்தமிழும், அண்ணல்-பெருமையும், ஏ-பாணம், என்-என்று சொல்லத்தக்க, அகத்து-அகங்காரத்தோடுகூடிய, ஆடு-தகர்வாகனமும், அல்- மதிள்களும், செய்-திருத்தப்பட்ட, ஆறு-வழிகளும், அ-அந்த, கர-ஆலகாலவிடத்தின், திலி-விருப்பினனானசிவனும், அலள் - பிரகிருதிக்கதிதேவதையான பராசத்தியும், நல்-நன்மையும், ஏ-வியப்பும், எல்-சூரியமண்டலமும், நக-காலிலுள்ளநகத்தால், தாடு-தலைமைபெற்றதானசேவற்கொடியும், அல்-அல்ல,செய்-செந்நிறமானவீரத்தன்மை,ஆற-குன்றிக்கெடும்படி, கரத்து-கையிடத்து, இல்-யாதுமின்மையானமிடியின், இயல்-குணப்பகுதிகள், அண்ணலே-பொருந்திய தேயாமப்படிப்பட்ட, என்னகத்து அடியேன்மனத்தில், ஆடல்செய்-நடனஞ் செய்வீராக, ஆறக்கரத்தில்-சடாட்சர மந்திரத்தில், இயல்-பொருந்திய, அண்ணலே-இறைவனான முருகக்கடவுளே.—எ-று.

(க-ரை.) மலையடிவாரங்களு முத்தமத்தலங்களுந் திளைப்புமாதியவிளைநிலங்களுநதிகளு மிந்திரர்களி னரண்மனைகளுந் தமிழும்பெருமையு மம்புபோலுங்கூரிய கோரகுணத்தின தானவாட்டுக் கடாவாகனமு நகரங்களைக்காக்கின்றனவான மதிள்களு நல்வழிகளுஞ் சிவபிரானு மிருண்ட மாயைக்கதிதேவதையா யந்நிறத்தோடுவிளங்கு முமையவளு நன்மையும் வியப்புஞ் சூரியமண்டலமுங் காலாற் சண்டைசெய்வதான சேவற்கொடியுமன்றே தேவரீராடல்செய்தற்குரிய தானங்களவைகளி லியாதுமல்லாததாய் வீரங்குன்றக்கேதுவான தரித்திரத்திற்சம்பந்தப்பட்டிருக்கின்ற வடியேன்மனத்திலுமாடல்செய்யவேண்டுஞ் சடாட்சர மகாமந்திரத்தின் பொருத்தமுற்ற முருகப்பெருமானே யென்பதாம்.

(ஞா-ம்.) எந்த மலையடிவாரங்களு மல்லவென்றதா லெல்லாமலையடிவாரங்களு மாடற்குரியன வென்பது விளங்கும் குறிஞ்சிநிலப்பொருளான சிலாவிக்கிரகங்களைக் காரணமாகக்கொண்டு தலங்களெல்லா மவர்க்குரியன வெனப் பொருடரும்படி சொல்லப்பட்டது மற்றையபொருள்களை யாடற்கிடமாக்குறித்தவாறு வெளிப்படையாதலின் விரித்திலமன்றியுந் திருமுருகாற்றுப்படையாதிய வான்றோர் நூல்கள் சதுக்கஞ்சந்தி புதப்பூங்கடம்பாதியவற்றையு மிடமாகக்குறித்துள்ளவாறுங் கண்டுகொள்க இங்ஙனமுள்ள வென்மனத்தாடல்செய் யென்றமை தக்கனவாய வவற்றிலாடலோர் பெருமையன்றிழிந்ததாய விதனிலாடலே நின்கருணைக் குயர்ச்சியாமெனப் பொருடந்தது ஆறக்கரத்திலிய லண்ணலென்றதா லம்மந்திரத்தினு முரித்துள்ளனவேறின்மைகாட்டியது.

(இ-ம்.) தலமென்றசொல்லைச் சாரியைதள்ளித் தல்லெனச்சொல்லப்பட்டிருக்கிறது அதுமுதலான சிலசொற்களுக் கமைதிநோக்கிப் பன்மைவருவித்திருக்கின்றது அக்கவொன்ற னேத்திரத்தாரொன்றே பொருட்டருமாயினு மிகுதிநோக்கி யிந்திரனெனச் சொல்லப்பட்டது கொடுமையாலும் விரைவாலு மாட்டுக்கடாவிற்குப் பாணமுவமைப்பொருளாகியது அல்லனென்றபத மலனென விதிவழி மெலிந்தது அதன்முன் இல்லுடையானைத் இலியெனச் சொல்லப்பட்டிருக்கின்றது முற்கூறிய பண்பாற் சேவற்கொடியெனப் பொருட்கந்தது மறுத்தற்பொருட்டரும் அல்லென்றசொல்லை முற்கூறிய பதங்கடோறுங் கூட்டவேண்டுவது நிறத்தால் வீரமுரைக்கப்பட்டது மற்றும் விரிக்கத்தக்கவாறுள்ளவெயாமாதலிற்றக்கோராற் கேட்டுத்தெளிதன் முறையெனக்காண்க. (அ)

இயலிசைநாடகத்தாசான்சிகிநடத்தேந்தலன்றே
இயலிசைநாடகத்தாசான்சிகிநடத்தேந்தலன்றே
இயலிசைநாடகத்தாசான்சிகிநடத்தேந்தலன்றே
இயலிசைநாடகத்தாசான்சிகிநடத்தேந்தலன்றே,

(இ-ள்.) இ-தனது பாதியில், அல்-இருண்டநிறம், இசை-பொருந்திய வரும், நாடகத்து-நடனத்தில், ஆசான்-விரைவுள்ளவருமான சிவபெருமானுக்கு, சிகி-தீபமாவானும், நட-கானப்பாட்டின், தேம்-இனிமையை, தலன்-இடமாக்கொண்டவனும், தேய்-உருவக்குறைகின்ற, இயலி-குணத்தையுள்ளவனுன சந்திரனுக்கு, சை-இகழ்ச்சி யுண்டாம்படி, நாடு-விரும்பிய, ஆகத்து-மனமுடைய, ஆசான்-வியாழன், சிகி-மலையானமேருவில், நடத்து-செய்த, ஏந்தல்-பெருமையை, அன்று-அந்நாள், ஏயி-பொருந்தியவனும், அலி-இயமனுனவன், சைநாள்-சமணரை, தக-ஏற்றுக்கொள்ளும்படி, தா-வென்ற, சான்-விற்போன்றவனும், சிகி-கேதுவென்னுங் கிக்கோளால், நள்-அபேட்சிக்கப்படுகின்ற, தத்தேம்-ஆபத்தையுடைய வெமக்கு, தலன்-சன்னிமித்தமாவானும், தே-தெய்வத்தன்மைவாய்ந்த, இயலிசைநாடகத்து-இயலென்று மிசையென்று நாடகமென்றுமுள்ள மூன்று தமிழுக்கும், ஆசான்-பரமாசாரியனுனவனுமாமொன்றல், சிகி-மயிலை, நடத்து-வாகனமாகச் செலுத்துகின்ற, ஏந்தல்-அரசன்.—எ-று. அன்றே-அசைச்சொல்.

(க-ரை.) திருமேனியிற்பாதி கறுத்தவரு நடனத்தில் விரைவுள்ளவருமான சிவபெருமானுக்குத் தீபமானவருங் கானப்பாட்டி னினிமையில் வசிக்கின்றவருஞ் சந்திரனுக் கிகழ்ச்சியையுண்டுபண்ணிய வியாழனுன் மேருவிற் செய்யப்பட்ட பெருமையை யேற்றுக்கொண்டவரு மெமதருமன் சமணரைக் கைக்கொள்ளும்படி செயித்த விற்போன்றவருங் கேதுவென்னுங் கிக்கோளாலபேட்சிக்கப்படுகின்ற வெமக்கு சன்னிமித்தங் காட்டுவோருந் தெய்வீகம்பொருந்திய முத்தமிழுக்கு மாசாரியாரானவரு மயிலைநடத்துகின்ற வாசனுன முருகக்கடவுளே யென்பதாம்.

(ஞா-ம்.) அர்த்தநாரீச்சுரமூர்த்த மெடுத்ததாற் பாதி கறுப்பென்றதுங் காளியை நடனத்திற்செயித்ததாலதில் வினைவுள்ளானென்றதும் பிரணவார்த்தத்துள்ள சந்தேகந்தீர்த்ததாற் றீபமென்றது நாததத்துவத்தி னிலையுணர்த்தோனென்பா னதனை யிடமாவுள்ளானென்றதுஞ் சாபத்துட்பட்ட சந்திரன் சகிதமா யெல்லாத்தேவரு முய்யும்படி வியாழன் பிரார்த்தித்தமையு மதனை யேற்றுக்கொண்டதுங் கந்தப்புராணத்துள்ளதோர் சரித்திரமென்பதுஞ் சமணரைவெல்லும்பொருட்டுச் சரமழைபோற் கவிபொழிந்ததாலுங் கோரங் காட்டாமற் சமவாதத்துக் கிடங்கொடுத்தலாகிய வளைவாலும் விற்போல்வா னென்றதுந் தீக்கோள் வாதனையிற் பட்டுள்ளபோதுந் தமக்கு நன்மைவருமா றொருவாறுணர்த்தலா னன்னிமித்தனென்றதும் பலவற்புதமாதிகள் விளைத்தமையாற் றமிழ்க்குத் தெய்வத்தன்மை சொன்னது மதைச்செய்த வகத்திய மகாமுனிவர்க்கு மாசாரியராதலிற் பரமாசாரித்துவஞ்சொன்னது முபாசிப்போர் பெருமைநோக்கி மலைபாதற்பொருட்டு மயிலைநடத்துமோ ராசனென்றதுமறிக.

(இ-ம்.) முதலிகரத்தை யெண்வடிவாக்கொண்டு பாதியெனக் கூறப்பட்டது சைநர்களென்றசொல்லைச் சைநரென வுலகவழக்கத்தைத் தழுவிச் சொல்லப்பட்டது தாவென்னுஞ்சொற் பொருளானதாண்டுதலைக்குறிப்பாற் செயித்தற் குபயோகப்படுத்தி யிருக்குது சானுவென்னும் விற்பெயரி னுகரச் சாரியை யியல்பின்வழி தள்ளப்பட்டது மற்றுமொரு பதத்தோ டொருபதம் புணர்ந்து பொருடருமாறும் பிறவு நன்காலோசித்தும் பெரும்பழக்கத்தாலும் பெரும்புலவர் வாய்மொழிகளாலு மறியவேண்டும். (௯)

ஏந்தலைச்சாகரத்திற்றீயினனிடலீதலென்றே
ஏந்தலைச்சாகரத்திற்றீயினனிடலீதலென்றே
ஏந்தலைச்சாகரத்திற்றீயினனிடலீதலென்றே
ஏந்தலைச்சாகரத்திற்றீயினனிடலீதலென்றே.

(இ-ள்.) ஏந்தல்-அரசர்களின், ஐ-தெய்வமாகிய விட்டுணுவுக்கு, சா-மரணத்தைக்கொடுக்கத்தக்க, கர-ஆலகாலவிடமாகிய, திற்றீயினன்-புசிப்பையுடையவரான சிவபெருமான், இடு-தரித்துக்கொண்ட, அலீ-ஆம்பலோடிருப்பவளான கங்கையின், தல்-ஆழத்திலுதித்த, என்று-சூரியன்போல்வானே, ஏ-இகழ்ச்சிக்காரணமான, ஏம்-இறுமாப்பில், தலை-முதன்மையுற்ற, சா-பேய்போன்ற வகங்காரத்தையும், கர-வஞ்சத்தோடுகூடிய, இல்-விருப்பத்தையும், தீ-தீய்ந்துப்போகச்செய்கின்ற, இன்-களிப்புள்ளோனே, ஆனிடு-ஒருக்காற் கெடுகின்றதான, அல்-இருண்ட, ஈது-இவ்வஞ்ஞானம், அல்-அல்லாத, என்-என்னுடைய, தே-கடவுளே, ஏந்தல்-பெருமையுற்ற, ஐ-அலங்காரம், சாகரத்து-பலகோடிகளுக்கும், இல்-வாசத்தலமா யிருக்கின்றோனே, தீ-கொடிய, இனு-துன்பமானது, இடல்-வளர்கின்றதா யிருக்கின்றது, ஈ-ஈய்களின், தல்-கலப்புள்ளதானதேன், என்-என்று சொல்லத்தக்க, தே-உனது கிருபையானது,

ஏந்து-தாங்கிய, அலை-அலைகளையுடைய, சாகரத்தில்-சமுத்திரத்திலும், தீயில்-நெருப்பிலும், நான்-அடியேனால், இடல்-போடப்பட்டுள்ளவற்றை, ஈதல்-கொடுப்பது, என்றே-எக்காலமோ.—எ-று.

(க-ரை.) அரசர்களுக் கதிட்டான தேவதையான விட்டுணுவுக்கு மரணமூர்ச்சை யுண்டுபண்ணிய காளகூடவிடத்தைப்புசித்த சிவபெருமான் றரித்திருக்கிற கங்கையினுழத்தினுதித்த சூரியன்போல்வானே இகழ்ச்சியைத்தருகின்ற விருமாப்புவடிவான வகங்காரத்தையும் வஞ்சக விருப்பத்தையுங் கெடுக்கின்ற வானந்தமயமானவனே யொருக்காற் கெடுகின்றதா யிருண்டவடிவோடெப்போது போராடுகின்ற வஞ்ஞானத்துக்கன்னியமான வென்றெய்வமே பெருமையான பலகோடி யலங்காரங்களும் பொருந்திய முருகக்கடவுளே துன்பம் விருத்தியடைகின்றது தீரும்படி யீய்களைத்தன்னிற் கலக்குந் தேன்போன்ற வுனதுகிருபை யடியேன் கடலினுந் தீயினும் போட்டிருக்கின்ற பிரபந்தங்களாதியவற்றைத் தருவதென்றோ வென்பதாம்.

(ஞா-ம்.) தன்மைகளால் விட்டுணு சிவன் கங்கைமுதலினவை வருவித்துரை கூறியவாறுந் தேனுசை மிஞ்சி யதில்வீழ்ந்த வீய்கள்போலனுபூதியை விட்டுபோகீசுரகிருபையு மான்மாக்களை விடாதிழுத்துக்கொள்ளுதலால் அவ்வுவமைகூறியதுந் துன்பத்தின்விருத்தி சொல்லவந்த பதமாகிய நீடலென்பது நீடலெனக் குறுகியது பின்வரு நன்மைக்குறிப்பாயதும் பிரபந்தங்களன்றி வெவ்வேங்கைமணியாதியுங் கடலிற்போட்டிருப்பதா லங்ஙனங்கூறியதும் பிறவுமறிக.

(இ-ம்.) சாவைக்கொடுக்கும்படி வந்தகரத்தைச்சாகரமென்ற பிரயோகஞ் சிலர்க்கேமயக்காது பொருடரும் அதமரிடையிற் ககரவொற்றுவாராமையின் உவமைத்தொகையாயது திற்றியென்பது திற்றியெனநீட்டல் விகாரமுற்றது ஆழமென்றுங்கலப்பென்றும் பொருடரும்படி வந்தலமென்றபதமிரண்டிடத்துஞ்சாரியை கெட்டுத்தல்லெனநின்றது அல்லியென்றபதமல்லியென்றாய்ப் பெண்பாலுடைமை காட்டுமிகரப்புணர்ந்து ஈற்றெழுத்து நீண்டுகங்கையெனப் பொருடந்ததும் இன்னுவென்றபதமினுவானதும் பிறவுமறியக்கடவர். மனச்சாட்சியாய்த் திருவருட்பிரசாதமென்னுங் கூலியைச் விரும்பிச்செய்கின்ற தொண்டிற்புகழ்ச்சிப்பொருட்டில்லாத பதப்பிரயோகங்கள் செய்திருக்கிறதாகவு நினைத்துக்கெடாமையின் பொருட்டினம்புலவர்களின் பெருங்கருணையைப் பிரார்த்திக்கிறேன். (௰)

என்றடியாரிடையானுகச்செய்கையிசைத்தியின்றே
என்றடியாரிடையானுகச்செய்கையிசைத்தியின்றே
என்றடியாரிடையானுகச்செய்கையிசைத்தியின்றே
என்றடியாரிடையானுகச்செய்கையிசைத்தியின்றே.

(இ-ள்.) என்று-சூரியன், அடி-குரு, ஆர்-ஆத்திமாலையை, இடு-தரித்துக்கொண்ட, ஐ-தலைவனான சிவன், ஆன-பசுக்களுக்கு, ஆ-விபட்டைச்செய்யும்

விட்டுணு, கச்சு-மூலைக்கச்சின், எய்கை-பொருத்தமுள்ள பராசத்தி, இசை-புகழ்பொருந்திய, தியின்-புத்தியென்னுஞ் சத்தியையுடைய, தே-விநாயகக் கடவுள், என்-என்றுசொல்லப்பட்ட, தடி-இசைவாகிய வாறுமுகங்களுடைய வனே, ஆர்-அருமையான, இடையான்-ஞானவேழத்தோனே, நாக-மலையின், செய்-விளைநிலமான திணைப்புனத்தின், கையி-இடத்தையுடையவளான வள்ளி யின், சை-இகழ்ச்சியான, தி-இனிமைதோய்ந்த, இன்-ஆனந்தத்தோனே,தே உன்கிருபை, என்-என்னவிப்படியிருக்கின்றது, தடி-மின்னலுக்கு, ஆர்-பொருத்தமான, இடை-பெண்களிடையில், ஆல்-ஆடுகின்ற, நாக-பாம்புபோன்ற கடிதடத்தின், செய்கை - தொழிலானகலவியை, இசைத்தி - சேர்க்கின்றாய், இன்றே-அஃதில்லாமலே, என்று-எந்நாளில், அடியார் - உன்னடியவர்களின், இடை-மத்தியில், யான்-அடியேன், ஆக-இருக்கும்படி, செய்கை-நீசெய்கின்றது, இசைத்தி-சொல்லக்கடவாய், இன்றே-இன்றைக்கே—எ-று.

(க-ரை.) சூரியன் குரு சிவன் விட்டுணு பராசத்தி விநாயகனென்னுமறுவரின் சம்பந்தமான சண்முகங்களுடையோனே திருஞானவேழத்தோனே குறிஞ்சிநிலத்துள்ள திணைப்புனத்தை யிடமாகக்கொண்ட வள்ளிநாயகியினூடலினுண்டா மிகழ்ச்சியினிமைதோய்ந்த வானந்தத்தோனே யுன்கிருபையென்னவிப்படியிருக்கின்றது பெண்களின்கலவியிற் சம்பந்தப்படுத்துகின்று யஃதின்றிப் பெரியோரான வுன்னடியார்கூட்டத்தின் மத்தியிலியானிருக்கும்படி செய்வதென்றதை யின்றேசொல்லக்கடவாயென்பதாம்.

(ஞா-ம்.) அனேகமுறைசொல்லியபடி யறுவரைச்சொற்றமையான் முகங்களெனவருவிக்கப்பட்டது சிலபண்பாற்பண்புடையார்நாமங்களையும் வருவிக்கப்பட்டிருக்கின்றன பாம்புக்கு மின்னல்விரோதமாதலினதனொடு பொருந்தியதெனக்கூறியது அதிசயோத்தியலங்காரமதனாற் பாம்பினுங்கொடிது கடிதடமெனப்பொருடருமறியாது மயங்குரர்பலராம் படமெனத்தோற்றும் பொருட்டாடுந்தன்மைகூறப்பட்டது மற்றுள்ளனவெளிப்படையாமாதலின் விரிக்கிலம்.

(இ-ம்.) எய்தலென்னும்பதத்திலுள்ள தல்விகுதியைநீக்கிக் கைவிகுதி சேர்க்கப்பட்ட திரண்டும் வினைச்சொல் விகுதியென்றறிவார் சிலரோ. தடுதலென்னும்பதத்தின் பகுதியானதடுவி லுடைமைகாட்டுமிகரம்புணர்ந்து தடியெனவிசைவுள்ளானுக்குவந்தது இனிமையின்பெயரும் புத்தியின்பெயருமான தியிரண்டிடத்துந் தியெனக் குறுக்கல்விகாரமுற்றது. என்னென்னும்பதத்திற் சிற்றிகழச்சிக்குறிப்பும் வினாவுமிருப்பதாலங்ஙனம் விரித்துக்கூறப்பட்டது. இன்றென்னும்பதமே யின்றியென்னும் பொருடருமுறையாலின்றே யென்றற்கில்லாமலே யெனக்கூறப்பட்டது "நீரின்றமையாதுல" கென்றதாலது நன்கு விளங்கும். (௰௧)

இன்றேகலியறத்தாக்கெனதாணையெளிதிதன்றே
இன்றேகலியறத்தாக்கெனதாணையெளிதிதன்றே
இன்றேகலியறத்தாக்கெனதாணையெளிதிதன்றே
இன்றேகலியறத்தாக்கெனதாணையெளிதிதன்றே.

(இ-ள்.) இன்-இனிதான, தே-கிருபையும், கலி-மலைகளுமுடையவனே, அற-தருமத்தின், தாக்கு-வலிமைக்கு, எல் - பகல்போற்பிரகாசிப்பவனே, ந-சூனியசம்பந்தமான, தாள்-முயற்சியின், நை-துன்பத்தை, எள்-இகழ்கின்ற, இதி-உறுதிக்கு, தன்-சொந்தமான, தே-தெய்வமே, இன்றே - இல்லாமலே, கலி-விருத்தியடைகின்ற, அல்-மாயையிருளாலுண்டாம், தத்து-ஆபத்தின்,ஆ-ஆச்சரியத்தை, கெல்-வேரோடுகெல்லிக்களையும், நத-ஒருவிதநதிபோன்ற,ஆண்-ஆண்மையோடிருக்கும், ஐ-சுவாமியே, எள்-தள்ளத்தக்க, இதி-பேய்போன்ற தன்-தன்மையை, தேய்-அழிக்கின்ற, இன்-ஆனந்தமயமான,தேகு-திருமேனி அலி-அக்கினிபோல்வானே, அறு-ஆறென்றதொகையின், அத்து-சம்பந்தமான சமயங்கள், ஆக்கு - உண்டுபண்ணுகின்ற, என - வினைவையமிகழ்ச்சியபிமான மாமிவற்றிற்குரியோனே, தானை-கூட்டமாகிய, எளி-எள்ளையுடைய வெண்ணெய்போன்ற, நித-நிலைமையின், அன்றே-பழமையோனே, இன்றே - இன்றைத்தினமே, கலி-கலிபுருடன், அற - நாசமடையும்படி, தாக்கு-மோதக்கடவாய், எனதானை-உனக்குரியவடியேன்பேரி லானையிட்டேன், எளிது-இக்காரியஞ்செய்வதெளிதேயாகும்—எ-று. அன்றே-அசை.

(க-ரை.) இனிதானகிருபைக்கு மலைகட்குமுரியோனே தருமத்தின் வல்லபத்தைவிளக்குவோனே சூனியமுயற்சியை யிகழ்வாருறுதிக்குத் துணையான தெய்வமே யில்லாதிருந்தும் விருத்தியாகின்றமாயையிருட்டாலுண்டாகு மாச்சரியத்துன்பங்களைக்களைவதிற் புண்ணியநதிபோன் றாண்மையோடிருக்குஞ் சுவாமியே தள்ளத்தக்கபேய்க்குணத்தை யழிக்குமானந்தமயமான திருமேனி யக்கினிபோல்வானே சண்மதங்களாலுண்டாகு நன்மைதீமைக் குரியோனே அனேக மெட்களிலுண்டாகுமோரொண்ணெய்போலு நிலையிற்பழையோனே யுனக்கென்பேரி லானையிட்டிருக்கிறேனின்றைக்கே கலிபுருடனாசமடையும் படி தாக்கக்கடவா யிதுசெய்தலுன்றகுதிக் கெளிதேயாகுமென்பதாம்.

(ஞா-ம்.) தருமத்தை விளக்குவோனென்ற ததன் விரோதிகளான வசுரரைக்கெடுத்தலாலென்றுஞ் சூனியமுயற்சியையிகழுமுறுதி சகளபுபாசனை யென்று மாயையாலுண்டா மாபத்தைக்கெல்லுந்தன்மை குருத்துவமென்று நதியிற்பிறந்தமையா னதமென்னுமாறுற்றை யுவமித்ததென்றுஞ் சண்மதங்களுமுங்களானதா லதனன்மைதீமைக்குரியோ னெனக்கூறியதென்று காமரூபம் பலவாய் வியாபகப்பொருளொன்றுதலி னெண்ணெய்யை யுவமித்ததென்றுங் கலிநாசத்தா லெல்லாநலமுமுண்டா மாதலினதனைவிரும்பிக் கேட்டதென்றுந் தன்பேரிலானையிடத்தக்க வுரிமையாதோவிருக்கின்றதென்று மன்றியும்பேய்க்குணம் விபரீதபாவனையென்றுந்தெரிவதோடு பிறவுமாலோசித்தறிக.

(இ-ம்.) கல்லுடையானைக் கலியென்றுசொல்லப்பட்டது கைவுஎன்னும் பதத்திலுகரச்சாரியை நீக்கப்பட்டது தேகம்தானையம் என்பவற்றைத்தேகு தானையெனச் சாரியைநீக்கப்பட்டது என்னென்னுமொருபதத்தின் பொருளுங்கு மவ்வுழிபுடயோகப்படுமின்றமை புளையில்விரித்தஃதுடையானை யென வென்னவிளித்திருக்கின்றது இதவன்றேயென்றற்குத்திதன்றேயென நாகனை யாதியவாய்ப்பாட்டாற்கூறப்பட்டது மற்றுள்ளனவற்றையு மழுக்காறில்லா வமைதி யாலறியுமா றறிவது கடனேயாம். (௰௨)

அன்றந்தரத்தனையாண்டாயென்றன்னையகற்றிடலே
அன்றந்தரத்தனையாண்டாயென்றன்னையகற்றிடலே
அன்றந்தரத்தனையாண்டாயென்றன்னையகற்றிடலே
அன்றந்தரத்தனையாண்டாயென்றன்னையகற்றிடலே.

(இ-ள்.) அன்-ஒருமைவிகுதிக்குத்தக்க, தந்தர் - புத்தியோனை, அத்தர்-சொற்பொருளுணர்வோர்க்கு, ஐ-அரசாகியவகத்தியனொன்றும், ஆண் - ஆண்மைத்தன்மையில், தாய்-மூலமாகிய விட்டுணுவென்றும், என் - சொல்கின்ற, தன்-தன்மையின், ஐய-கோழைபோலுமருவருப்புப் பகுதிகளை, கற்றிடு - கற்கின்ற, அல்-இருள்போலுமறிவீனத்தை, ஏயன்-பொருந்தமாட்டேன், தந்த-உன்னைப்பெற்ற, ரத்தர்-சிவந்தநிறத்தினரான சிவபெருமானது வயதுப்பிரமாணப்படி, ஐயாண்டாய்-ஐந்தாம்வயது நடக்கின்றகுழந்தைப்பருவமுடையவனே, என்று-சூரியனை, அன்ன-போன்ற, ஐய-அழகுள்ளோனே, கல் - மலைகளாகிய, திடலே-மேடுகளையே, அன்று- அல்லாமல், அம்-அழகிய, தர-சிலாக்கியமான, தனை-பூமியென்னும், ஆண்டு-அவ்விடத்தையும், ஆய் - தெரிந்தேற்றுக்கொண்டு, என்று-எக்காலத்தும், அன்னை - தாயானவுமையவள், அகற்று-விசாலப்படுத்தும், இடலே - ஈதலென்னுந்தருமத்தின்வடிவாயிருப்போனே, அன்று-ஆதிகாலத்தில், அந்தரத்தனை-ஆகாயவாசிகளானதேவரை, ஆண்டாய்-அடிமையாக்கிக்கொண்டநீ, என்றன்னை - அடியேனை, அகற்றிடல் - நீக்கிவிடவேண்டாம்—எ-று. ஏ-ஈற்றசை.

(க-ரை) அவனிவனென வொருமையாய்ப்பேசத்தக்க வற்பபுத்தியோனையும் வித்துவசிகாமணியான வகத்தியமுனிவனொன்றும் புருடோத்தமனுனை விட்டுணுவென்றுஞ் சொல்லு மருவருப்புப்பகுதிகளைக் கற்றிடுதலான வஞ்ஞானத்தைப்பொருந்தமாட்டேன் றனதுபிதாவான சிவபெருமானுக் கோராண்டெவ்வளவுகாலங்கொண்டதோ வவ்வளவுப்படி யைந்தாம்வயதுநடக்குங்குழந்தையான வாலசுப்பிரமணியத்தெய்வமே சூரியனைபபோலப் பிரகாசிக்கு மழகுள்ளோனே மலைகளையன்றிப் பூமியிலுஞ் சிலாக்கியமான தலங்களைக்கொள்வோனே தாயானவுமையவளா லெக்காலத்தும் வளர்க்கப்பட்ட தருமத்தின் பயனுயிருப்போனே யந்நாளிற்றேவர்களையாண்டுகொண்ட நீயடியேனைக்கைவிட்டுவிடவேண்டா மென்பதாம்.

(ஞா-ம்.) பெருமையினு மொருமையுண்டாதலி னங்ஙனங்கொள்ளாது சிறுமையினொருமை யெனக்கொள்ளவேண்டுவது மப்பெருமை யொருமையுமிச்செய்யுளிலிருப்பது மனிதனைப்பாடும் புலவரகத்தியனையும் விட்டுணுவையுமுவமிப்பது பெரும்பான்மையென்பது மெத்தனையோகோடி கற்பங்கூடியோராண்டாமென்னும் விபரமுமலைகளல்லாது மற்றையநிலங்களினு முருகப்பெருமானுலவு முள்ளவாறுதோற்ற வங்ஙனங்கூறியதுந் தாய்க்குச்சந்தோடமுண்டு பண்ணுங் குழந்தையானதாலவள் வளர்க்குந்தருமத்தின் வடிவாயிருக்கின்றதென்றதும்போகத்தைவிரும்பியதேவர்களையுங்கொண்ட நீயதனோடுமுத்தியையும் விரும்புமென்னைக்கைவிடலாகாதெனக் குறிப்பித்தவாறுமறிக. அன்னை

மாயிற்றேவரினுந் தானுயர்வென்னுங்குறிப்போவெனாகாது பலஞானநூல்களினுஞ்சொன்னபிரகார மனச்சாட்சியான மோட்சகாமியாயினுகலாமன்றென்னிற்றெய்வதண்டனை நேரிடுமென்றுணர்ந்து தம்மைக்குற்றத்துட்புகுத்தாது பாதுகாக்கக்கடவர்.

(இ-ம்.) அன்னென்னுமொருமை விகுதியவனிவனென்னும் பதங்களிற் சுட்டெழுத்துக்களோடு கூடிவருமாறுகாண்க அகத்தியர் விட்டுணுவாதியரைப் பண்பால் வருவித்துரைகூறப்பட்டது தன்மைதன்னென்றாதல்போன்ற பதங்களனேகங்களுக்கு முன்னமேவிபரஞ்சொல்லியிருக்கின்றன உலகவழக்கினும் ஐயென்றருவருப்பைக்குறித்துப் பேசுதலாதிய விபரங்களெழுதி முடியாதாதலிற் சுருக்கிக்கூறப்பட்டது. (௰௩)

அகத்தியனையளித்தானலாற்றஞ்சறிகிலனே
அகத்தியனையளித்தானலாற்றஞ்சறிகிலனே
அகத்தியனையளித்தானலாற்றஞ்சறிகிலனே
அகத்தியனையளித்தானலாற்றஞ்சறிகிலனே.

(இ-ள்.) அகத்து-மனத்தினிடத்து, இயல்-பொருந்திய, நார்-அன்பிற்குரிய, ஐ-சுவாமி, அளித்தான்-தன்னைப்பெற்றவனான சிவனுடைய, நல்-உத்தமமான, ஆற்று-மார்க்கத்துக்கு, அம்-அழகானவன், சல்-பெருங்கோபத்தோடுகூடி, திகிலன்-பயமுற்றோனை, ஏய்-போலப்பொய்மைகாட்டிய, அ-அந்த, கத்தியன்-வாளேந்தியவனானசூரனை, நார்-பாசமேந்திய, ஐயள்-தலைமையுற்றபராசத்தியான வேலால், இ-பப்பாதி, தான்-ஆகவே, அல்-இராப்பொழுதில், ஆற்று-செய்தவனான, அஞ்சு-அச்சம், அறி-அற்றவன், இலன்-சிறுமையான, நய-எண்ணமுள்ள, கத்து-பிரமாவின், இயன்-வார்த்தைகளை, ஆரை-மதிள்போன்றுதகைத்தவன், அளித்தான்-வண்டுசேலையுடைய மாலைகளணிந்தோன், அல-துன்பத்தை, ஆற்று-தணிக்கின்ற, அஞ்சல்-அபயசம்பந்தக்கைக்குறியோடு, திகு-எல்லாத்திக்கிலும், இலன்-தேற்றாமரம்போல்வான், ஏ-வியப்புப்பொருந்திய, அகத்தியனை-அகத்தியமகாமுனிவனை அளித்தான்-பிரணவார்த்தமுரைத்திரட்சித்தோன், அலால்-அப்படிப்பட்டமுருகக்கடவுளையன்றி, தஞ்சு-சகாயம், அறிகிலன்-யானறியேன்—எ-று. ஏ-ஈற்றசை.

(க-ரை.) அந்தரங்கபத்திக்குரியதெய்வமும் பிதாவானசிவபெருமானுடைய சன்மார்க்கத்துக்கழகானவனும் பெருங்கோபமுற்றிருந்தும் பயந்தவன்போலே மாற்றிப்பின்பு வாளேந்தசூரனைப் பாசந்தரித்த பராசத்திவடிவான வேலாலிராக்காலத்திற் பிளந்தெறிந்தவனும் பயமற்றவனுமற்பமாக நினைத்தபிரமாவின்வார்த்தைகளைத் தர்க்கத்தாற்கட்டுப்படுத்தியவனுந் துன்பத்தைத்தணிக்கின்ற அபயக்குறிப்போடெல்லாத்திசைகளினுந் தேற்றாமரம்போல வியாபிப்பவனுமனேகம் வியப்புற்ற வகத்தியமகாமுனிவருக் குபதேசஞ்செய்திரட்சித்தவனுமாகிய முருகப்பெருமானையன்றி யாதொருதுணையுமறியேனென்பதாம்.

(ஞா-ம்.) எம்மதத்தோர் செய்யுமந்தரங்கபத்திக்கு முரியோனென்பான் பொதுப்படச்சொன்னதுந் திருஞானசம்பந்தப்பிள்ளையாராய்ச் சைவத்தை நிலைநிறுத்தியதா லதற்கழகியனென்றதுஞ் சூரன்பயந்தோன்போ லேமாற்றி யது கடலிற்புகுந்ததென்பதும் பராசத்தியே வேலென்பது பிரசித்தமென்பது மிரவிற்பிளக்கினன்றி யவனோடாறுநாள்பொருததாகச் சொல்வதிசையாதென் பதும் பிரமாவைத்தகைந்தது விலங்கிட்டதென்பதும் மாலையெனப்பொதுப் படச்சொல்லல் பலமாலைகளைக்காட்டுமென்பதுங் கலைத்தைத்தெளிக்கின்ற வித் துப்போன்ற குரவர்களையுண்டபெண்ணலாற் றேற்றுமரத்தையுவமைகூறியதுங் கடலுண்டன்முதலிய வியப்பனந்தமகத்திய முனிவரிடத்துள்ளன வெனபது மவர்க்குபதேசித்த சகுணப்பிரமசொரூபமானமூர்த்தியன்றி மற்றுமுள்ளவனு பட்சமூர்த்திகளாற் றன்றிருத்தியடைதல் கூடாதென்பா னங்ஙனங்கூறியதும் பிறவுமறியக்கடவர்.

(இ-ம்.) சலமென்றபதஞ் சல்லெனநின்றது. கத்தியைச்சுட்டியவகரத்த டுத்தோர் மெய்வரவேண்டுவது செய்யுள்விகாரத்தாலொழுகியது. கத்தியனை யென்னுஞ் சொல்லினிரண்டாமுருபும் ஐயளாலென்றசொல்லினுள்ள மூன்று முருபு மாதியதொகைநிலைகள்கண்டுணர்ந்து கொள்ளற்பாலவாம். இகரத்தை யெண்ணுருவாக்கொண்டு மொருபாதியுண்டாம்போது மற்றொருபாதியு முண் டாமாதலானும் பப்பாதியெனப்பொருள்கூறப்பட்டது அஞ்சுதலை யஞ்சென் றும் அறுந்தன்மையோனை யறியென்றுங் கிலத்தைக்கிலலென்று மியத்தை யிய னென்றுஞ் சொற்றமைபோன் றவற்றையெல்லாம் விரிப்பிற்பெருகுமெனவிடுத் தாம் ஆயினுமவையறிவார் பலருளாரொன்பது சித்தம். (௰௪)

அறியத்தகாதனயாதில்லையில்லயகண்டத்திலே
அறியத்தகாதனயாதில்லையில்லயகண்டத்திலே
அறியத்தகாதனயாதில்லையில்லயகண்டத்திலே
அறியத்தகாதனயாதில்லையில்லயகண்டத்திலே.

(இ-ள்.) அல்-இருண்ட, தி-புத்தியின், அத்த-பொன்சம்பந்தமான, காதல்-மோகத்தை, நை-கெடுக்கின்ற, ஆ-வியப்புற்ற, தில்லை-சிதம்பரத்தை, இல்-வீடா கக்கொண்ட, ஐ-தலைவனானசிவபெருமான், அ-உடைய, கண் - நேத்திரத்தை, தத்து-தவழ்கின்ற, இல்-இடமாக, ஏ-பொருந்தியதன்மையும், அறு - ஆறுவித மான, இயத்த-தொனியுமுடையவனே, கா - கற்பகத்தருவையுடைய தேவர்க ளின், தனயா-புத்திரியாகிய தேவயானையின், தில்-விருப்பமும், அயில்-வேலா யுதமுமுள்ள, ஐய-அப்பனே, கண்டத்து - துவிதபாவனையின், இலேயு-அற்பத் தன்மை, அறி-அற்றவனே, அத்த - சொற்பொருண்முற்றுடையோனே, காத-செவிப்பெருக்கத்தோனே, நய-நயகுணத்தோனே, அதில் — வேண்டாமையை, அயில்-அநுபவிக்கின்ற, லய-ஒடுக்கநிலையான, கண்டு-கற்கண்டுபோலுமினிமை, அத்தில்-பொருத்துமாகில், ஏ-வியப்பின்பகுதிகளில், அறியத்தகாதன - அறிந்து கொள்ளத்தகாதவைகள், யாது-எத்தன்மைத்துள்ளதாம், இல்லையில்லை - இல்ல வேயில்லையாம், அகண்டத்திலே-யாவுந்தன்மயமானபரவெளியில்-எ-று. ஆதலி னவ்வினிமை யெனக்குத்தரவேண்டுமென்னும் பொருளெஞ்சிநின்றது.

(கவா.) இருண்ட வஞ்ஞானபுத்தியாலுண்டாகும் பொருளாசையைக் கெடுக்கின்ற சிதம்பரத்திற்கோயில்கொண்டருளிய சிவபெருமானது நேத்திரத்தைத் தவழ்க்குவிளையாடு மிடமாகக்கொண் டாறெழுத்தொலியோடிருப்போனே தேவலோகத்தில் வளர்ந்த தெய்வயானையின்விருப்பமும் வேலாயுதமுமுடையவப்பனே யற்பமான துவிதபாவனையற்றவனே முழுதுணர்புலமையுஞ் செவிப்பெருக்கமு நயகுணமுமுடையோனே வேண்டாமையை யநுபவிக்குமானந்தஞ் சித்தித்தா லெல்லாவியப்புமறியத்தக்கனவே யாய்விடுமென்றி வேறிராதாதலி னகண்டபரவெளியின் சம்பந்தமான வதனை யெனக்கருளவேண்டுமென்பதாம்.

(ஞா-ம்.) பொன்னம்பலமாதலிற் பொருளாசையைக் கெடுக்கின்றதென்றதும் கண்கணினின்றுற்பவித்தமையாலு மவற்றிற்கன்னியமல்லாத சூரியமண்டலவாசத்தாலுந் தவழுமிடமென்றது மம்முருகக்கடவு ளநுபவத்திற்றுவிதபாவனை யற்றமையாலதனையிகழ்ந்துகூறியது மற்றையவிபரங்கள் வெளிப்படையாயறியத்தக்கனவேயென்பதும் வேண்டாமையன்னசெல்வமீண்டு மாண்டுமின்றென்னும் வேதவாக்கியத்தா லதனைவியந்து வேட்டவாறுமறிக.

(இ-ம்.) காவையுடைய தேவனைக்காவெனலாதிய செய்யுள்வழக்கேயாமுன்விபரங்களனேகமாகவெழுதப்பட்டிருக்கின்றன. இல் விழைவாதலி னதில் வேண்டாமையென்னும்பொருடந்தது அந்திலென்றவொருபதத்திற்குப் பொருந்துமாகிலெனப் பொருள்விரித்திருக்கின்று மங்ஙனமுள்ள பதங்களைப்பற்றி விபரீதமாகநினைப்பார் பலருளாரென்பதுமறிவாமாயினுந் தெய்வமுமனமுமே சாட்சியாகும் அதன்விபரமாவது அந்தலென்னும்பதத்தின் விகாரமென்னினுந் தைப்பென்னும்பொருடருதல்பற்றி யமைத்ததென்னினுந்தகும் அவ்வில்லுருபு எதிர்காலவினையெச்சமாகின்றது மூன்றுமுருபைக்கொண்டு பொருந்தினுலெனவருவதுமுண்டு இங்ஙனந் தும்மலிருமலாதியபதங்கட்குந் துகட்பிரவேசமென்றும் பித்தம்வாதமென்னு மிரண்டின்பொலிவென்று முறைகூறினுமமைதிபெறுருமுளாரொன்னு முண்மைபற்றியொருவாறு கூறிவருகின்றும். ()

அகளசகளத்தனிகாயகனல்லயிலத்தனே
அகளசகளத்தனிகாயகனல்லயிலத்தனே
அகளசகளத்தனிகாயகனல்லயிலத்தனே
அகளசகளத்தனிகாயகனல்லயிலத்தனே.

(இ-ள்.) அகள-அகமுகத்தினளான ஞானசத்திக்கும், சகள - உலகமென்னும் வெளிமுகத்தினளான மாயாசத்திக்கும், தனி - சொக்தமானவன், நாய்-நாய்போன்ற, அகன்-மனத்தின், அல்-அஞ்ஞானவிருட்டை, அயில் - விழுங்கத்தக்க, அத்தன்-சொத்பொருளுடையோன், ஏய-யாவற்றிலும்பொருந்திய, கள்-தேன்போலுமானந்தசொரூபன், அசளத்தன் - ஆட்டுத்தலையோனுனதக்கனுக்கு, இனு-துன்பஞ்செய்தவரும், யகன் - பதினொருருத்திரானவரும், அல்-மதியோடுகூடிய, ஐ-ஐக்தாகிய, இல்-தலங்களையுடையவருமான, அத்தன்-சிவ

பெருமானிடத்து, நேய-அன்புள்ள, களச-பிரம்பேந்தியவரான நந்திக்கு, கள" கபடஞ்செய்த,தனி-தன்மையோன்,ராய-யாவரையுமடிமைகொள்ளும்பண்பும், கனல்-அக்கினியின், ஐயில்-அழகையொத்த, அத்தன் - செந்நிறமுமுள்ளோன், ஏ-வியக்கும்படி, அகளசகள-அருவமுமுருவமுமான, தனிநாயகன்-சமானமில் லாததலைவனப்படிப்பட்டவனுமொன்றல், நல்,உத்தமோத்தமமான, அயில் - வே லாயுதத்தை, அத்தனே-கையிலுடையவனே—ஏ-று.

(க-ரை.) ஞானசத்திக்கு மாயாசத்திக்குஞ் சொந்தமானவனு நாய்போ லலையுமனத்தினஞ்ஞானத்தைச்செயிக்கு மந்திரார்த்தமுள்ளவனும் வியாபிக்கு மானந்தசொரூபனுந் தக்கனுக்குத்துன்பஞ்செய்து பதினொருருத்திரருந்தாமே யாய்ப் பஞ்சதலத்தில்வசிக்கின்ற சிவபெருமானிடத்தன்புள்ளவராய்ப் பிரம் பேந்திய நந்தியினிடத்துக்கபடஞ்செய்தவனு மியாவரையு மடிமைகொண்டு நெருப்புப்போன்ற செந்நிறத்தோடிருப்பவனு நிட்களமுஞ்சகளமுந் தானே யாய்ச்சமானமற்றதலைவனு முத்தமோத்தமமான வேலாயுதத்தைக்கையிலுடை யவனேயென்பதாம்.

(ஞா-ம்.) அயத்தலையுடையோனை யயக்கிரீவனென்றமுறைப்படி யசத் தலையோனை யசகளத்தனென்றதும் யகனென்றசொல்லை யெண்வடிவாக்கொ ண்டு ருத்திரர்க்குபயோகப்படுத்தியதும் பஞ்சபூததலங்கள் சிதம்பரமுதற்றிரு வாரூரீறாகச் சொல்லப்பட்டவையென்பது நந்தியினிடத்துக் கபடஞ்செய்தது பிரமாவின்றலைவிடும்படி சிவாக்கினையெனச்சொல்லவந்தபோது பயஞ்செனிக் கும்படி பேசியவாறென்பதுமற்றவை வெளிப்படையென்பது மறிக.

(இ-ம்.) அகள் சுகளென்னும்பதங்களி லகரம்புணர்ந் தாறுமுருபின்பயன் பெற்றுச் சொந்தமென்னும்பொருடருந் தன்னெனுஞ்சொல்லி னெழுவாயாய் நின்றவற்றை யிரட்டலி னுன்காமுருபாக்கித் தொகையும்மையும்புணர்த்திப் பொருள்கூறிய வாசகநடைப்பொருத்தமு மறியார்க்கென் சொல்லற்பாற்று ளது அச்சொல்லின்முப்பாற்குமுரிமைகாட்டு மிகரம்புணர்த்தி யாண்பாலொ ருமைக்குபயோகப்படுத்தி யிருக்கின்றது நாய்போலுமகனென்றபதம் நாயக னெனவந்தவுவமைத்தொகை யாதிகளறியுமாறறிதல் கடமையாம் கள்ளென்ற சொல்லி னினிமைபற்றி யானந்தம்வருவிக்கப்பட்டதுஇன்னுவென்றசொல்லை யினுவெனச்சொல்லப்பட்டது அதில்நகரம்பிறழ்ந்தது களாசமென்றபதங்களச மெனக்குறுகின்றது ஐகாரமும் போலியும்பிறழ்ந்தும் வந்திருக்கின்றன. ()

அத்தத்தையாசித்தலையாதளித்தியடியனையே
அத்தத்தையாசித்தலையாதளித்தியடியனையே
அத்தத்தையாசித்தலையாதளித்தியடியனையே
அத்தத்தையாசித்தலையாதளித்தியடியனையே.

(இ-ள்.) அத்தத்தை-அத்தக்கிளியாகிய அருணகிரிநாதருடைய,ஆசி-தோத் திரத்தை, தலையா-இடமாகக்கொண்டுவசிப்போனே, தளி-குளிர்ந்த, தி - புத்தி க்கு, அடி-மூலமானவனே, அனை-மாதாவை, ஏய்-போன்ற, அத்து - பொருத்த

முள்ள, அத்து-சிவந்த, ஐயா-அப்பனே, சித்த-சித்தந்தோறும், லயா-கலந்திருப்போனே, தள்-யாவருங்கழிக்கத்தக்க, இத்தி-துவர்ப்பண்பை, அடு-கெடுக்கின்ற இயல்-குணத்தின், நயே-நன்மையுடையோனே, அத்த-திருக்கரங்களின், தயா-தயையானகொடைத்தன்மையும், சித்து-ஞானமும், அலையாது-அலைகளையுடையதான சரவணத்தடாகத்தின், அளித்தி-வண்டுள்ளதானபூவுமுள்ளோனே, அடி-சுடுகின்றதாகியநெருப்பை, அனை-போன்றவனே, ஏ-வியப்பைத்தருகின்ற, அத்தத்தை-பொருளை, ஆசித்து-விரும்பி, அலையாது-சஞ்சரியாது, அளித்தி-இரட்சிக்கக்கடவாய், அடியனை-அடிமையாகியவென்னை—எ-று. ஏ-ஈற்றசை.

(க-ரை.) ஜினியாகிய அருணகிரிநாதருடைய தோத்திரப்பாடல்களை யிடமாகக்கொண்டுவசிப்போனே சாந்தம்பொருந்தியபுத்திக்கு மூலமானவனேமாதாவைப்போலும் பொருத்தமுஞ்சிவந்தநிறமுமுள்ளவப்பனே யெல்லாச்சித்தங்களிலுங் கலந்திருப்போனே யாவருங்கழிக்கத்தக்க துவர்த்தன்மைகளைக்கெடுக்கின்ற குணநயத்தோனே கொடையுஞானமுஞ் சரவணத்தடாகத்தின் பூவுமுள்ளோனே சுடுகின்றநெருப்புப்போன்றோனே வியப்பைத்தருகின்ற பொருளை விரும்பியலையாதபடி யடியேனையிரட்சிக்கக்கடவா யென்பதாம்.

(ஞா-ம்.) கருணைமிகுதிபற்றி மாதாவைப்போன்ற பொருந்தஞ்சொல்லப்பட்டதும் வியாபகம்பற்றியெல்லாச் சித்தங்களிலுங் கலந்தோனென்றதுந் துவர்ப்பண்பென்றது பகைமையு மருவருப்பையுங் காட்டுமென்பது நெருப்புப்போன்றமை வீரத்தைக்குறிபிக்குமென்பது மத்தத்தைநாடி யலைதலே பெருந்துன்பமென்பா னங்ஙனங்கூறியது மற்றவைசாதாரணமென்பதுமறிக.

(இ-ம்.) ஏய்த்தலென்னும் பண்புச்சொல்பெயரொச்சத்துக்கு வரும்போதேயென்றானது நயத்தையுடையோனேயென்ற னயே யென்றானதும் அன்னுயென்றபதமன்னையென்று யனையென்றும் போல்வாயென்றற்குவந்ததும் பிறவுமியற்கையேயாம். (௰எ)

அடிக்கலனந்தலையிற்சேரலெற்றையறைதியன்றே
அடிக்கலனந்தலையிற்சேரலெற்றையறைதியன்றே
அடிக்கலனந்தலையிற்சேரலெற்றையறைதியன்றே
அடிக்கலனந்தலையிற்சேரலெற்றையறைதியன்றே.

(இ-ள்.) அடு-பொருகின்ற, இக்கு-கரும்பும், அலன் - இருளுமுடையவனை மன்மதனையும், கந்து-சங்கத்தோடுகூடிய, அலை - சமுத்திரத்தை, இல் உறைவிடமாக்கொண்டு, சேர்-மாலைதரித்த, அல்-இருணிறமுள்ளவிட்டுணுவையும், எற்று-தன்மையாலெதிர்கின்ற, ஐ - சுவாமியே, அறை - சிற்றிற்சம்பந்தமான, தியன்-புத்தியுடையோனே, தே-கிருபையும், அடி- தெய்வத்தன்மையும், கலன்-மலையுமுடையோனே, அம்-அழகில், தலை - முதன்மையானவனே, இல்-மனைவியானவள்ளியம்மையை, சேரல் - அணுகுந்தன்மையும், எல்-சூரியனை, தை-தழுவுந்தன்மையும், அறு-ஆறுவிதமான, ஐ-தலைமைத்தன்மையுமுள்ளோனே, தி-நெருப்பை; அன்று-அல்லாமல், ஏ-ஏகாரத்தினுரிமையும், அடி-மோதுகின்ற, கலன்-ஓசையுமுள்ளவாயுவின், அத்தல் - பொருத்தமுமுடையானே, அயில்-வேலாயுதத்தால், சேரல் - பகைவனை, எற்று - சங்காரஞ்செய்வோனே, ஐ-ஐந்து

விதக்குற்றங்களையும், அறு - கெடுக்கின்ற, ஐதி-விரைவுள்ளோனே, அன்றே-பழையோனே, அடிக்கலன்-உனதுதிருவடிகளாகியகிரீடம், நம்-எங்களுடைய, தலையில்-சிரசில், சேரல்-சூடப்படுதல், எற்றை-எந்நாள், அறைதி-சொல்லக்கடவாய்—எ-று. அன்றே-அசை.

(க-ரை.) மன்மதனையும் விட்டுணுவையுந் தன்மையாலெதிர்கின்ற சுவாமியே சிற்றில்விளையாட்டிற் செல்லும்புத்தியுடையோனே கருணையுந்தெய்வத்தன்மையு மலைகளும்பேரழகுமுள்ளோனே மனைவியானவள்ளியையடுத்தலுஞ் சூரியமண்டலவாசமும் ஆறுவகைத்தலைமையுமுள்ளானே நெருப்பையன்றி ஏகாரமுள்ளவாயுவின் சம்பந்தமுமுடையானே, வேலாயுதத்தாற் பகைவரைச் சங்கரிப்போனே யைவகைக்குற்றங்களையும் விரைவிலறுப்பவனே பழையோனே யுனதுதிருவடிகளாபரணம்போன் றெங்கள்சிரத்திற் சூடப்படுவதென் றென்பதாம்.

(ஞா-ம்.) முற்கூறியபண்பான் மன்மதனையும் விட்டுணுவையும் வருவித்ததுஞ் சல்லாபத்திலு மசுரவிரோதமாகியதன்மையிலு முயர்ச்சியெய்தலினவர்களை யெதிர்கின்றவனென்றது மிளமைநீங்காமை தோற்றச்சிற்றிற்பிரியஞ் சொன்னது மாறுவகைத்தலைமையாவ தங்ஙனமுள்ள சமயாசாரித்துவ மென்பது மக்கினியிலுங்காற்றிலும்பொருந்த லவதரித்தசரிதத்தால்விளங்குவது மகரமுதலான வைந்தெழுத்தில் ஏகாரம்வாயுக்கூறுதலு மைவகைக்குற்றம் புலப்பகுதியென்பது மன்றென்பதுகாலதத்துவத்தி னடியைப்பற்றலிற் பழமையெனப்பொருள்கூறியதுந் தலையணியிற்சீரியது கிரீடமாதலினங்ஙனம் வருவித்ததுமற்றவைவெளிப்படையென்பது மவற்றிற்குஞாயங்கூறிற் பெருத்துக்கெடுமென்பது மறிக.

(இ-ம்.) கல்லனென்னுஞ்சொல் கலனெனமெலித்திரண்டுழிவந்தது. நீயென்னுஞ்சொல்லு மங்ஙனமேவந்தது சூரியனைக்குறித்த எல்லென்றபதமும் வேலைக்குறித்த வயிலென்றபதமு மீற்றுள்ளலகரந்திரியப்பட்டமை யிரண்டுமன்றென்னுமுருபைத்தொக்கவாற்றால் அன்றியும் எற்றென்னுங்கொலைப்பெயரையதுடையானேயென முன்னிலையாண்பாற் குபயோகப்படுத்தியதாகிய செய்யுள்விகாரம்பொருணோக்க முன்மொழிபின்மொழிப்பொருத்த முதலியவற்றால் வந்தனவென்பதும் பிறவுமயக்கமற்றவான்றோர் விதிவழியறியக்கடவர். (௰அ)

அறைதற்கடங்கரிதாகியசித்தியதிசயனே
அறைதற்கடங்கரிதாகியசித்தியதிசயனே
அறைதற்கடங்கரிதாகியசித்தியதிசயனே
அறைதற்கடங்கரிதாகியசித்தியதிசயனே.

(இ-ள்.) அறை-சிறுவீடாகிய, தற்கடு-அதன்மேற்சினஞ்செய்கின்ற, அங்கர்-அடையாளத்தோரான சிறுவர்களுக்கு, இத - அறகூலஞ்செய்கின்ற, ஆகி-பெருச்சாளிவாகனத்தோனான விநாயகமூர்த்தி, அ-உடைய, சித்தி-உபபலமான

வதும், அதிசயன்-அதிகரித்தசெய்த்தையுடையவனும், நே-அன்பு, அறு-அற்ற, ஐது-ஆத்திரமான, அல்-அஞ்ஞானவிருளுக்கு, கடு - விடம்போல்வானும், அம்-அழகிய, கரி-ஞானவேழத்தின், தாகி-விருப்பமுள்ளவனும், அசித்து - மாயையாகிய, இய-காட்டினிடத்தும், திசயன் -நோக்கமுள்ளவனும்,ஏ-மிக்கதையுள்ள, அறு-புறச்சமயங்களாறின், ஐ-அருவருப்பான, தற்க-வாதஞ்செய்யும், டங்கர்-தூர்த்தர்களின், இத-சொல்லாகிய, அகி-சற்பங்களையும், அசி - ஆயுதங்களாகிய, தி-நெருப்பையும், அதி-அதஞ்செய்வோனும், சயன் - பருவதங்களுக்கதிபனும், ஏ-யாவனென்றால், அறைதற்கு - சொல்வதற்கு, அடங்கரிதாகிய - முடிவுபெறாதனவான, சித்தி-அற்புதங்களும், அதிசயனே - ஆச்சரியங்களுமுடையவொருவனே—எ-று.

(க-ரை.) சிற்றிலாடும் பேதைப்பருவப்பெண்கள் கெஞ்சும்படி யதனையழிப்பார்போற் சினக்குஞ்சிறுவர்க்கு கலஞ்செய்யும்விநாயகருக்குச் சகாயபலமானவனுமதிகரித்த செயப்பிரதாபமுள்ளவனு மன்பின்றிவினைகின்ற வஞ்ஞானத்தைக்கெடுக்குந்தன்மையுடையவனு ஞானவேழத்தில்விருப்பமுற்று மாயைக்காட்டினு நோக்கமுள்ளவனு மிகழ்ச்சியுற்ற புறச்சமயத்தோரானவறுவர்களின் வாதச்சொற்களையும் பிரயோகவாயுதங்களையு நாசஞ்செய்வோனு மலைகளுக்கதிபனுமியாவனென்றுற் சொல்லுதற்கரிய வற்புதங்களு மதிசயங்களு முடையவனே யென்பதாம்.

(ஞா-ம்.) திருவருணுட்டமில்லார்க்கே யாத்திரமிகுமாதலினஞ்ஞானத்திற்கதனையடையாகக்கூறியது மாயையுந்தனது பின்னுசத்தி யாதலினதனிடத்து நோக்கமுள்ளானென்றது நிந்தையுமருவருப்புஞ் சொன்னதாற்புறச்சமயங்களெனப்பொருடந்தவாறும் பரத்துவப்பொருளே யவனெனப்பயனிலைநிகழ்ந்தவாறு மற்றவைசாதாரணமாத்துலங்கத்தக்கன வென்பதுமறிக.

(இ-ம்.) தற்கவென்றசொல்லிற் றன்னென்னுஞ் சாரியையு மிரண்டாமுருபுமிருக்கின்றன. இயவு, என்னுங்காட்டின்பெயரி லுகரச்சாரியை நீக்கப்பட்டது நீக்காதிருப்பதுபோலு மதிசயமறிவார் சிலரோயாவார். அதனடுத்துவந்ததிசயனிலு மதனடியிலுள்ள சயனிலுமுள்ளபோலி யைகாரமாயது.தூர்த்தப்பெயராகிய இடங்கர் மொழிமுதலல்லாதகிமித்த மிகரநீக்கி டங்கரெனப்பிரயோகிக்கப்பட்டது. முதலடியிலுள்ள இதஆகியும், மூன்றுமடியிலுள்ள இதஅகியும் இதாகியெனவொன்றுபோனின்றது. இங்கனம்வரும் புணர்ப்பினங்களையோசைநிதான மூணராச்சிலபுலவர் வடமொழிக்கே யுரியனவெனச்சிறிதுநாணுதகூறுதலு மதுகேட்டிவர்கூறுதறென்மொழியென்று முணரார்போலுமெனவருந்திகருவாருமிவ்வுலகத்துளார். நெருப்பின்பெயராகிய தீ தியெனக்குறுக்கல்விகாரமவ்வுழி மிகவுமழகாப்பெற்றது மாயையினிழிவுநோக்கியுமாயிலோரிழிவும்மைவருவித்ததும் விளக்குறிப்பெசாநீடலும் பிறவுமறியுமாறறிதல்கடனேயாம். (ஙக)

சயந்தன்களுத்தகைபெண்ணியிக்காளிற்றயங்கினனே
சயந்தன்களுத்தகையெண்ணியிக்காளிற்றயங்கினனே
சயந்தன்களுத்தகையெண்ணியிக்காளிற்றயங்கினனே
சயந்தன்களுத்தகையெண்ணியிக்காளிற்றயங்கினனே.

(இ-ள்.) சயந்தன்-பருவதத்தின், கன-கூட்டமுடையோனே, ஏ-வியப்பான, தகை-குணம், எண்ணி-எட்டுடையானே, இன்-இனிதானதேனை, ஆள்-அநுபவிக்கின்ற, இல்-மனைவியானவள்ளியோடுகூடி, தயங்கு-பிரகாசிக்கின்ற, இனனே - சூரியன்போல்வானே, சை-இகழ்ச்சிக்குரிய, அந்தன் - இயமனது, கல்-ஆரவாரத்தொனியின், கா-இன்மையையும், த-பிரமாவின், கை-சிறுமையையும், எண்ணி - மதித்துச்செய்தசிவபெருமான், இன்-உடைய, ஆளில்-அடிமையைப்போன்று, தை-தழுவவேண்டியவற்றைத்தழுவி, அங்கு - மதுரையாகிய வவ்விடத்து, இனன்-கூட்டமிட்டோனே, ஏசு-குற்றம்பொருந்திய, ஐ-பஞ்சப்புலன்களின், அந்தன்-முடிவானவனே, கல்-கற்கத்தக்க, காத்தகை-நாவலங்காரமானபுலமையும், எண்ணி-கணிதத்திறமுமுள்ளோனே, இன்னுள்-துன்பத்தினளானசெட்டியப்பெண்ணின், இல்-வீட்டினிடத்து, தயங்கினன் - நடனஞ்செய்தோனே, ஏ-வியப்பான, சயந்தன் - இந்திரகுமாரன்கண்ட, கனத்தகை-கனவின்பெருமையை, எண்ணி-நினைத்து, இந்நாளில்-இக்காலத்தில், தயங்கினன்-அடியேன்றிகைக்கின்றேன்—எ-று. ஏ-ஈற்றசை என்கனவு மங்கனம்பலிதமுறவேண்டுமென்னும் பொருளெஞ்சிநின்றது.

(க-ரை.) பருவதக்கூட்டத்தோனே வியப்பானவெண்குணத்தோனே தேனைப்புசிக்கின்ற வள்ளிநாயகியோடுகூடிச் சூரியனைப்போற் பிரகாசிப்போனே யெமனதுகெருவநாசத்தையும் பிரமாவினிளப்பத்தையுங் கருதிச்செய்த சிவபெருமானது பத்தனைப்போன்று சைவசின்னங்களையெல்லாம் பாதுகாத்துமதுரையிற் கூட்டமிட்டோனே குற்றம்பொருந்தியபஞ்சப்புலன்களைமுடிப்பவனே புலமைத்திறமுங் கணிதத்திறமுமுள்ளோனே கைவெட்டுப்பட்ட தாற்றுன்பமுற்றசெட்டிச்சிமனையிற்போய் நடனஞ்செய்தோனே யக்காலத்திற்சயந்தன் கண்டகனவுபலித்ததுபோ லிக்காலத்தில் அடியேன்கண்டகனவும் பலியாமையெண்ணித்திகைக்கின்றேனென்பதாம்.

(ஞா-ம்.) தினைமாவிற்றினந்தோறுந் தேன்சேர்த்துண்ணலா லதையநுபவிக்குமனையென்றலும் வள்ளிநாயகியெனவருவிக்கப்பட்டது. எமனாரவாரத்தையின்மையாக்கலுதைத்துக்கொன்றது பிரமாவைச்சிறுமைசெய்தது தலைகொய்தல்அடிமைபோன்று மதுரையிற்கூட்டமிடல் திருஞானசம்பந்தப்பிள்ளையாராயவதரித்தது. புலன்களைமுடித்தலாசாரித்துவம் செட்டிப்பெண்ணுறொனின் முருகாவெனு நாமமொன்றேசொல்லியுய்ந்த பிரசித்தசரித்திரமுள்ள வோரடிமையெனத்தெரிவதோடு சயந்தன்கனவையெடுத்துக்காட்டி யங்கலாய்த்தது தான் கண்டகனவு மங்ஙனம்பயன்றரவேண்டும் பிரார்த்தனைக்குறிப்பென்றுமறிக.

(இ-ம்.) கடைவரியொழிந்த மூன்றடிமுகத்துஞ்சகரவைகாரம்போலியாய் மெலித்துநின்றது இனிமையுடையதேனை யின்னெனப் பின்மொழித்தொகையாச்சொல்லப்பட்டது ஞலியப்பொருடருகொரீட்டல்விகாரமுற்றது. கனவாத் தகையைக்கனத்தகையென்று மின்னுவுடையானை யின்னுளென்றுஞ் சொன்னதன்றி யிடரோக்கிமதுரையென்றும் புலன்களென்றும் வருவித்ததும் பிறவுமறிக. (உ௰)

• தயங்காதசத்தியத்தைத்தாக்கத்தாநல்லதண்ணளியே
தயங்காதசத்தியத்தைத்தாக்கத்தாநல்லதண்ணளியே
தயங்காதசத்தியத்தைத்தாக்கத்தாநல்லதண்ணளியே
தயங்காதசத்தியத்தைத்தாக்கத்தாநல்லதண்ணளியே.

(இ-ள்.) தயங்கு-சலனப்படுகின்ற, ஆத-குற்றமுள்ள, சத்தி-மாயாசத்தியின், அத்து-பொருத்தமான, ஐ-ஐந்துவித, தா-குற்றங்களும், கத்து-தொனிக்கின்ற, ஆன்-பசுக்களை, அல்-மதில்போற்சூழ்ந்துகாக்கும், அது-விட்டுணுகலையானது, அண்-பொருந்தத்தக்க, அளி-அன்பின், ஏது-காரணமானதவத்திற்கும், அயம் - ஆட்டின், காது-கொலையை, அசத்து-யாவருமறக்கச்செய்யும், இயத்து - வார்த்தைப்பிரசங்கத்தின், ஐ-அலங்காரத்திற்கும், தா-கேடாயிருக்கின்றன, கத்தான் - வானுலகிலிருப்போனே, அல்-இருண்ட, அதள்-ஆனைத்தோலை, களி-விரும்பியவனான சிவபெருமான், ஏ-வியக்குஞ்சொல், தை-புகுகின்ற, அங்காத-அழகிய காதுள்ளோனே, சத்திய - கைவேலுடையோனே, தைத்தா - தைத்தாவென்னுந் தாளசம்பந்தமுள்ள கூத்தாடும், கத்த-கடவுளே, அனல்ல-அக்கினிசம்பந்தமானவனே, தண்-தரித்திரமாகிய, நளியே-விலாசத்தில், தயங்காது-திகைப்படையாமல், அசத்தியத்தை - பொய்மையானவையும், தாக்க - அடித்துச்செயிக்கும்படி, தா-கொடுத்தருள், நல்ல-உத்தமமான, தண்-குளிர்ந்த, அளி-கிருபையை.—எ-று. ஏ-ஈற்றசை.

(க-ரை.) சலனசத்தியாகிய மாயையின் சம்பந்தமான வைங்குற்றங்களும் பசுக்களைக்காக்கும் விட்டுணுகலை தங்கத்தக்கதவத்திற்கு மூலகத்திலாட்டுக்கொலை நீங்கும்படிசெய்யும் பிரசங்கத்திற்குங் கேடாயிருக்கின்றனவாதலாற் சுவர்க்கலோகத்தை யுடையவனே சுறுத்த யானைத்தோல்போர்த்த சிவபெருமான்வியக்குங்கூறும் வார்த்தைகேட்குங் காதுள்ளோனே வேலாயுதமேந்திக் கொண்டாடுவோனே சருவசுதந்தரமான கடவுட்டன்மையு மக்கினிசம்பந்தமுமுடையோனே யடியேன்றரித்திரவிலாசத்திற் றிகையாமல்அசத்தியங்களெல்லாவற்றையு நாசஞ்செய்யும்படி யுத்தமமானவுனது கிருபையைக்கொடுத்தருளென்பதாம்.

(ஞா-ம்.) ஐங்குற்றங்கள் பஞ்சப்புலன்களென்பதும் பசுக்காப்புங்கொலைநிவிர்த்தியுஞ் செய்யவேட்டமையா லவைசித்திக்கும்படி செய்யுமுயற்சிக்கவ்விடயங்கள் கேடாயிருக்கின்றனவென்றது மிருண்டதோலென்றமையாலானைத்தோலென்றதுங் குருத்துவத்தாற் சிவன்வியக்குஞ்சொற் புகுங்காதுளானென்றதுங் குடைகொடியாதிய நடனத்தாற் றாளத்தைக்கொண்டு கூத்தனென்றது முற்கூறிய புலன்களும் பொய்மைப்பகுதியாதலி னவற்றையெல்லாம் வெல்லும்படி யருளைக்கேட்டவாறும் பிறவுமறிக.

(இ-ம்.) தன்மையால் விட்டுணுகலை வருவிக்கப்பட்டது தவமுதலிய சொற்களு மன்னனமேயாயவாறுகாண்க. அசதியென்னு மறதிப்பெயரினின்று மறக்கச்செய்கின்றவெனப்பொருடரு மசத்தென்னும் பெயரெச்சச்சொற்பிற

ந்தமையாதியவெளிதி லறியத்தக்கனவேயாம். இடநோக்கி யொருமையுன்மை க்குபயோகப்படுவ தான்முேர்வழக்காகவேயிருக்கின்றது. கள்ளியென்றல் களி யெனமெலித்தது தய்யென்றபோலியைத் தையெனக்கொள்ளலும் பிறவு நன்குமதித்துணர்ந்துகோடல் கடமையேயாம். (உக)

தண்ணாரஞ்செச்சையணிகையினனிணைத்தாள்கதியே
தண்ணாரஞ்செச்சையணிகையினனிணைத்தாள்கதியே
தண்ணாரஞ்செச்சையணிகையினனிணைத்தாள்கதியே
தண்ணாரஞ்செச்சையணிகையினனிணைத்தாள்கதியே.

(இ-ள்.) தண்-தாழ்மையானவணக்கமும், ஈரம் - அன்புமுடையவெமது, செ-செனனத்தாலுண்டான, சை-இகழ்ச்சியும், அணி-நிரைநிரையாயுள்ள,கை-சிறுமையும், இனன்-துன்பமுஞ்சொந்தமாகவகிக்கின்றவன், இணைத்து-தனக்கு வமைப்பொருளாக்கி, ஆள்-ஆண்டுகொள்ளும், கதி - நடைக்குத்தக்க, ஏது-கார ணத்தை, அண்ணார்-பொருந்ாதவர்கள், அஞ்சு - பயப்படும்படியான, எச்சை-குறைவுள்ளவன், அணிகை - அலங்கரித்துக்கொள்வதாலுண்டாம், இன் - சந் தோடமுற்ற, ஆன்-காளைபோல்வான், இணை-இச்சையோடுகூடிய, தாள்-முய ற்சியில், கதி-பொருந்துகின்றவன், ஏ-பாணத்தை, தண்-இகழத்தக்கதும், ஆர்-நிறைந்த, அம்-அழகுள்ளதுமான, செச்சை - திருநீற்றின், அணி - பொருத்த முள்ளசமயங்களின், கை-ஒழுக்கத்திற்கு, இல்-உறைவிடமானவன், நால்-நானு விதமான, நிண-ஊனின், ஐ-அருவருப்பை, தாள்-பொருந்திய, கதி-கோபக்காரி யானவள்ளியம்மனும், ஏ-வியக்கத்தக்க, தண்-குளிர்ந்த, ஆரம்-கடப்பமாலிகை யும், செச்சை-வெட்சிமாலையும்- அணி-தரித்திருக்கின்ற, கையினன்-தோள்களை யுடையவன், இணைத்தாள்-அவனதுபயதிருவடிகளும், கதியே - முத்திசொருப மேயாகும்—எ-று.

(க-ரை.) வணங்குகின்றவன்புள்ள வெமதுசெனனநிந்தையும் பலசிறுமை யுந்துன்பமுந்தனதாகவகிப்பவனுந் தன்னைப்போலாக்கி யாண்டுகொள்ளத்தக்க பக்குவமில்லாதவர்கள் பயப்படுங்குறைவுள்ளவனு மலங்காரசந்தோடமுற்ற காளைப்பருவத்தோனுஞ் சீவர்களின்முயற்சியிற்கூடிநிற்பவனும் பாணத்தையு மிகழத்தக்கவிபூதிசம்பந்தமுள்ள சமயங்கட்குறைவிடமானவனு மாமிசசம்பந் தத்தருவருப்புங்கோபமுமுள்ள வள்ளிநாயகியும் வியந்துகொள்ளுங்கடப்பமா லையும் வெட்சிப்பூமாலையும்புனைந்த தோளுள்ளவனுமான முருகக்கடவுளி னிர ண்டுபாதங்களுமே முத்திசொருபமாகுமென்பதாம்.

(ஞா-ம்.) தம்மை முற்றுமவனுக்கேகொடுத்துவிட்டமையாற் றமதிழி வாதியும் வகிப்பவனென்றதுந் தவஞ்செய்தற்கும் பிரசாதசித்தியை விரும்புவ தற்குந் தகுதியில்லாதவபக்குவர் பயப்படுங்குறைவுள்ளவனென்றது நிந்தை போலுந்துதியென்பதுஞ் சிவகோடிகண்முயற்சியிற்கூடல் சருவசாட்சித்து வத்தைவிளக்கின்றதும் பாணத்தைப்போற் கெடுதன்மாத்திரஞ்செய்யாமற் கேடுகலமுஞ் செய்தலாலதனையிகழத்தக்கது விபூதியெனச்சொன்னது மத்

தன்மை சமண்கழுவேறல்பாண்டியன்கூனிமிர்தலாதியாற்றுலங்கு மென்றது மூட்சமயங்களாதனிடம் பொருத்தமுள்ளன வவற்றிற்கவனபிமானியென்பது தோற்றவுறைவிடமானவனென்றதுங் கோபமுள்ளவள்ளி நாயகியியக்குமாலை யென்றதாற் றெய்வயானையாதியர் வியக்குமாறுதானேதுலங்குமென்பதுங் குருபாதமே கதியென்பது சருவசாத்திரலோகப் பிரசித்தமாதலினங்ஙனங்கூறி யதும்பிறவுமறிக.

(இ-ம்.) ஒன்றுமூன்றடிமுகங்களிற்றண்மை யென்றபதம் விகுதிகெட்டுநின் றது இன்னுஇனுவெனமெலிக் தன்சாரியைபுகுந்திறுனெனவந்தது. எச்சனை யெச்சையென்றது பெண்பாற்போலியாய்நின்றது கதுவலுடையானையுங் கத முடையானையுங் கதியென்றது மண்ணியென்றற்கணியென்றதும் போல்பவு நன்குற்றுணராது விபரீதபாவனைசெய்யாமையைப்பற்றிப்புலமைத்தொழிலின் கெருவத்தைப் பிரார்த்திக்கின்றும். நிணை-ஐ-நிணையெனவான்றோர் மொழிவழி பிரயோகித்திருக்கின்றது. ஆன்போல்வானை யானென்றது முருபுத்தொகை சொற்றொடர்பாதியும்விரித்திலம். (உஉ)

கதியளித்தாளத்தக்கானலனேலரன்கண்ணெளிதே
கதியளித்தாளத்தக்கானலனேலரன்கண்ணெளிதே
கதியளித்தாளத்தக்கானலனேலரன்கண்ணெளிதே
கதியளித்தாளத்தக்கானலனேலரன்கண்ணெளிதே.

(இ-ள்.)கதி-உச்சேச்சரவக்குதிரைநடையின், அளி-சந்தோடத்தைக்குறித்த, தாள்-முயற்சியும், அத்த-பொன்னின் சம்பந்தமான, கா-கற்பகச்சோலையின், நலன்-நன்மையும், ஏலர் - மயிர்சாந்துட்டியவளகபாரத்தோரானவரமகளிரும், அன்-உடையவனுன தேவேந்திரனது, கண்-இடமான வமராபதிப்பட்டணம், தெளி-நிலைபிறழ்தற்கேதுவான, தேக-அசுரர்சரீரத்துக்கும்,தி-புத்திக்கும், அளி-பாணமுதலியகூரியவாயுதங்கட்கும், தாள்-கால்கட்கும், அத்தக்கு-கைகட்கும், ஆனல்-கெடுதல்செய்யுந்தன்மை, அன்-உடையவனும், ஏல்-சோர்வுடையாதொ ருமிக்கும்பண்பில், அரன்-அரம்போல்வானும், கண் - கணுக்கலையுடையகரும் பை,எளி-இகழத்தக்க, தே-இருபையின், கதி-பொருத்தமுள்ளவனும், அளித்து-புட்பங்களாற்செய்யும், ஆள்-அடிமைத்திறத்தையும், அத்த-சொற்பொருளின், கான் - வாசமானபுலமைத்தொழிலையும், அலன்-மதிள்போற்சூழ்கின்றவனும், ஏல்-பொருந்திய,அரன்-குகையுடையோனுமானமுருகக்கடவுள், கண்ணு-தியா னிக்கின்ற, எள்-எட்போதுஞ்சிறுவடிவுள்ள, இது-எனதான்மாவானது, ஏ-ஆச்சரியமுறும்படியான, கதி-மோட்சத்தை, அளித்து-கொடுத்து, ஆள-ஆண்டு கொள்ள, தக்கான்-தகுதியுடையவன், அலனேல்-அல்லாதவனுயிருப்பானுனல், அரன்-சிவபெருமானுடைய, கண்-நேத்திரங்கள், எளிதே - அற்பப்பொருளே யாகும், எ-று.

(க-ரை.) உச்சேச்சரவக்குதிரை பேற்றமுங் கற்பகத்தருவினன்மையுந் தெய் வப்பெண்களினது கல்யாபமுமுடைய விந்திரனது பட்டினநிலைபுரளும்படியே

ய்கின்ற வசுரர்களின் சரீரங்களு மவயவங்களுமாயுதங்களுங் கெடச்செய்கின்ற வனும் வீரத்திலரம்போன்றவனுங் கரும்பையிகழத்தக்க கிருபையுள்ளோனும் பூமாலைப்பணியையும் பாமாலைப்பணியையும் பாதுகாப்பவனுங் குகைவாசத் தோனுமான முருகப்பெருமானவனைத் தியானிக்கின்ற வெனதுசிறியவான் மாவிற்கு முத்திகொடுக்குந்தகுதியில்லாதவனு லவனைப்பிறப்பித்தற்குக்கார ணமான சிவபெருமானது நேத்திரத்தின்பெருமை குன்றிவிடுமென்பதாம்.

(ஞா-ம்.) பின்வருமுன்வரும் பொருளுக்கத்தாற் குதிரையிக்திரனுதிய வருவிக்கப்பட்டன. தேகக்கேடுசொன்னதன்றி யவயவக்கேடுஞ்சொன்னது பல வசுரராதலிற்பொருந்திற்று. அளியென்றல் பாணத்துக்கு முழுப்பெயராயுங் கூர்மையுடையதெனப் பொருடரலினுயுதப்பொதுவிற்கு முபயோகப்படுதலி னங்ஙனம் விரித்துரைகூறப்பட்டது. தேவரியாவரையும் வென்றதன்மைதோற் றத் தன்னினமாமிரும்புருக்கனைத்தையும் வெல்லுமரத்தையுவமைகூறப்பட் டது. கரும்பிற்கோதுண்டாதலினதனையிகழத்தக்கது கிருபையெனச் சொல்லப் பட்டது. வண்டுடையதெனப்பொருடருமளித்தென்ற பதத்தைப்பூவிற்கிடப்பட் டிருக்குது தியானிக்குந்தன்மையாலு மிதென்னுமண்மைச்சுட்டாலு மென தான்மாவெனக் குறிக்கப்பட்டது. சிவபெருமானது நேத்திரங்களிலுயர்ந்து ஞானமயமான வக்கினிக்கண்களிலுற்பவித்தவ ராதலிற்றுன்குறித்த பிரசாத மனைத்துந்தரத்தக்காரோ யெனப்பொருடருமா றங்ஙனங்கூறியதும் பிறவுமழுக் காறொழிந்த முழுப்புலவரொளிதிற்றெரிதற்பாலவேயாம்.

(இ-ம்.) சிலபண்படுக்கியபின் னுண்பாலொருமைவிகுதியைப் புணர்த்தி யுடையானெனப்பொருள்கூறல்பலர்க்கிசைந்தவாறன்று. ஆதலினதற்கிசைவா ரான சிலரைக்கலைமகளாதியர்நன்கறிவாரென்பதுசித்தம். கணுப்பெயரானகண் ணென்றபதத்திற் கதனுற்சிறந்தகரும்பெனப்பொருள்கொண்டதங்ஙனம்வரும் பெயரினத்துட்சீரியதேயாகும். எள்ளியெனவினையெச்சம்போலுள்ள பெயர்ச் சொல்லொன்றெளியெனமெலித்தது. அன்றியொருமைக்குப் பன்மைப்பொ ருள்கூறலாதியவற்றிற்கு விபரங்கண்முன்னெழுதப்பட்டிருக்கின்றன. எங் ஙனமெழுதினு மொன்றுமெழுதாவிடினுங் களிப்புவெறுப்பென்னு மிருபகுதி யைச்சார்ந்தோரு மிருப்பாரென்பதுமறிவாம். (உ௩)

**கண்ணனந்தத்தையனுரனைத்தனங்காதலனே**
**கண்ணனந்தத்தையனுரனைத்தனங்காதலனே**
**கண்ணனந்தத்தையனுரனைத்தனங்காதலனே**
**கண்ணனந்தத்தையனுரனைத்தனங்காதலனே.**

**(இ-ள்.) கண்ணன்-விட்டுணுவினுடைய, நந்தத்து - சங்கத்தைப்போன்ற, ஐயன்-வெள்ளியவழகுள்ளானும், ஆல்-ஆலமரத்தின், தான-இடத்தை, நத்தன்-விரும்பியசிவபெருமானது, அங்காதலன் - அழகியபுத்திரனும், ஏ-பாணங்களை கண்ணு-கருதுகின்ற, அல் - இருண்டவேடர்கூட்டத்தில், நந்து-வளர்ந்த, அத் தையல்-அப்பெண்ணாகியவள்ளிநாயகியின், காறு-திருமேனிவாசமணக்கின்றத் ஆன்-காளைபோல்வானும், நல்-நல்ல, நத்து-மூக்கணிபூண்ட, அனம் - அன்னம்**

போன்றதேவயானையின், காதலன்-நாயகனும், கே-அன்பை, கன்னன்-உறைவிடமாக்கொண்டவனும், அம்-அழகிய, தத்தையன்-கிளியாகிய வருணகிரிநாதரையுடையவனும், ஆறுன் - கங்கையிலுற்பவித்தவனும், கண - நீங்காதசாக்கிரமாகிய, தனம்-தன்மையும், கா-கற்பகத்தருவாகிய, தலன்-இடமுமுள்ளவிந்திரன், ஏ-வியந்துசொல்லும், கண்-நேத்திரங்கள், அனந்தத்து-அனேகமுடைய, ஐயன்-செகதீசனுமான, ஆறுனனத்தன்-சண்முகக்கடவுளே,நம்-எங்களுடைய, காதலனே-பிரியத்துக்குரியவனுவான்—எ-று.

(க-ரை.) மகாவிட்டுணுவின் பாஞ்சசன்னியத்தைப்போன்ற வெள்ளைநிறமுள்ளவனும், ஆலடியைவிரும்பிய சிவபெருமானுடையபுத்திரனும், பாணங்களைவிரும்பும் வேடர்கூட்டத்தில்வளர்ந்த வள்ளிநாயகியின்சரீரவாசம்பொருந்திய காலைபோல்வானு நல்லழகணிபூண்டிருக்கு மன்னம்போன்ற தெய்வயானையினுயகனு மன்பையிடமாக்கொண்டவனு மருணகிரிநாதரானகிளியுடையவனுங் கங்கையிலுற்பவித்தவனு முறங்காத்தன்மையுங் கற்பகத்தருவுமுடையவிந்திரன்வியக்குமனந்தங்கண்களுடைய செகதீசனுமான சண்முகக்கடவுளேயெங்களுடைய விருப்பத்துக்குரியவனென்பதாம்.

(ஞா-ம்.) அசுரர்களைச்செயிக்கும் வெற்றிப்பிரதாபத்தொனியாலும் விபூதிதாரணத்தாலும் பாஞ்சசன்னியத்தை யுவமித்ததென்றும், பாணங்களைவிரும்புகின்ற விருளென்றதன்மையால் வேடர்கூட்டமென வருவிக்கப்பட்டதென்றுங் கங்கையோனெனப் பொருடரு மாறுனென்றசொல்லிற் கிசைவுநோக்கி யதிலுற்பவித்தோனெனக் கூறப்பட்டதென்று மிந்திரனுயிரங்கண்ணுள்ளோனுதலினவனுல் வியக்குமனந்தங்கண்ணெனன்றதினிதாயிற்றென்று மற்றவைவெளிப்படையென்பதுமறிக.

(இ-ம்.) கனவு-என்னும்பதம் உகரச்சாரியைகெட்டு கணவெனவியப்பநின்றது. அன்னமனமானது போல்வனமிகைபடும்வாய்பாடாதலின்விரிக்கிலம்.இச்செய்யுள் பாகமாமுடிவுபெற்றமை பற்றிக்களிப்புற்றும். என்பதுபற்றி யிம்முறைச்செய்யுள்பாடும்போ தெத்தகைப்புலவோரு மவற்றின்பின்செல்லுங்கடமையோரோ வென்னுந்துணிவுண்டாம். (உச)

காதாரக்கேட்டடியேனின்னலாழிகளைக்கடத்தே
காதாரக்கேட்டடியேனின்னலாழிகளைக்கடத்தே
காதாரக்கேட்டடியேனின்னலாழிகளைக்கடத்தே
காதாரக்கேட்டடியேனின்னலாழிகளைக்கடத்தே.

(இ-ள்.) காதார்-கொலைசெய்யாதவர்களுடைய, அக்கு - நேத்திரத்திலும், ஏட்டு-சுவடியிலும், அன்-கூரிய, டியே-புத்தியிலும், இல்-நிற்கின்ற, னல்-உத்தமமான, ஆழி-அழுத்தமுள்ளோனே, கலை-தேவகலைமுழுமைக்கும், கட-ஒருபாத்திரமான, தேகா - திருமேனியுடையவனே, தார் - மாலையாகக்கோத்த, அக்கு-எலும்பும், ஏட்டு - கொன்றையாதியபூவுமுடைய, அடி - கடவுளாகியசிவனும், ஏன்-வராகாவதாரஞ்செய்த, இன்-களிப்பும், அல்-இருண்டநிறமும், ஆழி-சக்

கராயுதமும், கள்-கள்ளத்தொழிலுமுள்ள, ஐ - தலைவனாகியவிட்டுணுவும், கட-கடோபநிடதத்தையுடைய, தே-தேவனானபிரமாவுமாகிய மூவரையும், கா-காக்கின்ற, தார-வெற்றியுள்ளோனே, கேட்டு-கெடுதலெல்லாவற்றையும், அடி-தகிக்கின்றவனே, ஏனின்-என்னுடைய, அல் - மதிள்போன்று, ஆழி - வளைந்துகாப்போனே, கலை - நல்லோரானபயிர்க்குக்களைபோன்றபொல்லாரை, கடு - சினக்கின்ற, அத்து-இசையின், ஏ-பொருத்தமுள்ளதானவெனதுபாடல்களை, காதார-உனதுசெவிகளிற்புகும்படி, கேட்டு - வினவி, அடியேன் - என்னுடைய, இன்னல்-துன்பங்களாகிய, ஆழிகளை - சமுத்திரங்களை, கடத்து - கடத்திவிடக்கடவாய்—எ-று. ஏ-ஈற்றசை.

(க-ரை.) சீவகருணையோர் கண்களிலுஞ்சுவடியிலும் புத்தியிலுநிற்கின்ற நல்லழுத்தத்தோனே தேவகலைமுழுமையும்பொருந்திய திருமேனியுள்ளோனே யெலும்புகொன்றையாதியதரித்த சிவனும் வராகாவதாரமுதலிய வடையாளமுள்ளவிட்டுணுவு முபநிடதசம்பந்தமுள்ள பிரமாவுமாகிய திரிமூர்த்திகளையுங் காக்கும் வெற்றியுள்ளோனே கெடுதலெல்லாவற்றையுந்தகிப்போனே யென்னை மதிள்போற்சூழ்வோனே பொல்லாரைச்சினக்கின்ற வெனதிசைத்தமிழ்ப்பாடல்களைச்செவியாரக்கேட்டுத் துன்பசமுத்திரங்களுக்கப்புறத்திலடியேனைவிடக்கடவாயென்பதாம்.

(ஞா-ம்.) கொலைசெய்யாரென்ற பொதுச்சொல்லெவ்வுயிரையு மெனப்பொருடருமாறு நிற்கின்றவென்னுஞ்சொ திருவடிகளைக்குறிக்குமாறும். பன்னிருகைகளிலுஞ் சட்சமயமூர்த்திகளுடைய சின்னங்களுந்தரித்தமையாற்றேவகலைமுழுமையுந் தங்குந்திருமேனியென்றது முபதேசித்துந் தாரகன்பறித்துக்கொண்ட சக்கரத்தைமீட்டுக்கொடுத்துங் குட்டிவிலங்கிட்டுக் கெருவந்தவிர்த்து மூவர்களையாண்டமையா லங்ஙனங்கூறியது மென்னைச்சூழ்ந்து காக்கின்றவனென்றுரைத்தபின் றுன்பசாகரங்களைக் கடத்திவிடவேண்டு மென்றமையாலவையாவும் பத்திசோதனையால் வந்தனவேயென விளங்குதலுமிச்செய்யுளிற் பாட்டுடைத்தலைவனதுநாமமுஞ் சரிதமும்விரியாவிடினுந் தன்மையால்விளங்கும்விதமும் பிறவுமறியக்கடவர்.

(இ-ம்.) அக்கமென்னுகேத்திரப் பெயரக்கெனநின்றது சாரியைநீக்கம். தியென்னும்புத்திப்பெயரொடுபுணர்ந்த ஏகாரம் ஏழாமுருபாயியல்புழிநின்றது ஏடென்னும் 'பெயருடைய விதழெல்லாப்பூவிற்குமுரியவுறுப்பாயினு மிதழியென்னும்பெயரற் கொன்றைக்குச்சிறப்பாதல்பற்றி யதுமுதலிய பூவென விரிக்கப்பட்டது. ஏனமென்றவராகப் பெயரேனெனச்சாரியை கெட்டுள்ளது அல்லென்றவிருட்பெயரை யிடரோக்கிநிறமெனக்கொள்ளப்பட்டது. என்னினென் வாறு முருபுதொக்குஞ்சாரியையாற்றொகாமைபோன்றுன்னபத மேனினெனநீட்டல் விகாரமுற்றது. களையென்றசொற்குப் பொல்லாரென்று மிசைப்பொருத்தமெனப்பொருடரு மத்தேயென்னுஞ்சொற்கிசைத் தமிழ்ப்பாடலென்றும் பொருள்விரித்ததாதிய வான்றோராட்சிக்குவிரோதமன்று. செம்பாகச்செய்யுளில் "ஆறுக்கணிகல" மென்றதை யதனில்வசிக்குஞ் சிவனுக்கெனப்பொருள்கோடலாதியவற்றானு நன்குணரக்கடவர். (உரு)

கடன்றீரத்தக்கநல்லாடலைச்செய்திடக்காதலியே
கடன்றீரத்தக்கநல்லாடலைச்செய்திடக்காதலியே
கடன்றீரத்தக்கநல்லாடலைச்செய்திடக்காதலியே
கடன்றீரத்தக்கநல்லாடலைச்செய்திடக்காதலியே.

(இ-ள்.) கடு-ஆலகாலவிடத்தை, அன்று-ஆதிகாலத்தில், ஈர் - வலிந்தெடுத்த, அத்த - கையினிடத்து, கனல்-அக்கினியையுடைய, ஆடல் - நடனஞ்செய்கின்ற, ஐ-தலைவரானசிவபெருமானது,செய்-சிவப்பும்,திட-வல்லபமும்பொருந்திய, காதல்-புத்திரனே, இ-பாதியான, ஏ-நிந்தையுள்ள,கடன்-கமண்டலத்தோனுனபிரமாவின், தீர-மனத்தயிரியமான, தக்கு-சாத்தியத்தைக்கெடுப்பதற்கு, அனல்-அக்கினிபோல்வானே, ஆடு-நாரதர்வேள்வியிற்பிறந்தவாட்டுக்கடாவை, அலைச்சு-தன்னிட்டப்படிநடத்தி, எய்து-அதனாலடைந்த, இட-இடப்பாகத்தில் வசிக்கும்,காதலி-மனைவியானதெய்வயானையால், ஏ-வியக்கப்பட்டவனே,கடன்-மலைச்சாரலுடையவனே, தீர-கடற்கரையானசெந்திலில்வசிப்போனே,த-குபேரனை,கனல்-கோபிக்கும்படியான, ஆள் - அடிமைத்திறத்தில், தலை-முதன்மையானசமயாசாரிகள், செய்-உண்டாதற்குவிளைநிலம்போல்வானே, திட-சத்தியசொரூபமானமுருகக்கடவுளே, காது-சொல்லுகின்ற, அலியே-ஏமனேயென்று சொல்லத்தக்க, கடன் - கடனுமுண்டானதொந்தரவு, தீரத்தக்க - முழுமையுந்திருப்படியான, நல்லாடலை-நல்லதிருவிளையாடல்களை செய்திட-செய்யும்படி, காதலி-விரும்பு—எ-று. ஏ-ஈற்றசை.

(க-ரை) ஆலகாலவிடத்தையெடுத்த கையிலக்கினியேந்திக்கொண்டு நடனமாடுகின்ற சிவபெருமானைப்போன்ற செந்நிறமும் வல்லபமுமுடையமைந்தனே பாதிப்பேரானிந்தையடைந்துள்ளபிரமாவின் மனத்தயிரியத்தைக்கெடுக்குமக்கினிபோல்வானே வேள்வியிற்பிறந்த செம்மறியாட்டுக்கடாவை யடக்கியதாற் கிடைக்கப்பெற்றவளு மிடப்பாகத்தில் வசிக்குமனைவியுமான தெய்வயானையால் வியக்கத்தக்கவனே மலைச்சாரலினுங் கடற்கரையிலும்வசிப்போனே பொருள்வெறுப்பாற் குபேரனையிகழ்கின்ற மெய்யடியாரனேகர்க்கு முயர்வோரான சமயாசாரிகளுண்டாதற் கொருவிளைநிலமாவானே சத்தியசொரூபமான முருகப்பெருமானே கொலைத்தொழில் செய்யுமெமனுக்குச்சமானமான கடன் முழுமையுங்கெடும்படி நல்லதிருவிளையாடல்களைச்செய்யத் திருவுளங்கொண்டருளென்பதாம்.

(குா-ம்.) தாரகன்விட்ட பாசுபதக்கணையைக்கையிற்பிடித்தது மசுரசேனையை யக்கினிக்கண்ணாலெரித்ததுமாதிய வியப்பாற்சிவனைப்போல்வானென்றது திருவிளைப்பயனுற்செனிக்கின்ற சிவசமூகத்திற்றீவினைப்பகுதியோர் பிரமாவையிகழ்தலுலகவழக்கமாதலிற் பாதிநிந்தையோனென வவனைச்சொன்னது மாட்டுக்கடாவையடக்கியதுந் தேவாநுகூலமேயாதலிற் சூரசங்காரமாதிய வற்றை யதனுள்ளடக்கிச்சொன்னதுங் கடற்கரையிலும் பெருங்கரைவேறின்மையிற்றீரமென்ற சொல்லைப்பற்றிச்செந்திலைவருவித்தது மந்தியுங்கரைபெ

னப்படுமெத்தலத்தைச்சுட்டினு மமையுமென்பதும் பொருள்வேட்கையறுதலி னும் பெரியசிறப் படிமைத்திறந்திற்கின்றென்பதுதோற்றக் குபேரனுடனே சொன்னதுங் குருத்துவமுடையபேரொச்சமயத்தோராயினு முருகப்பெருமா னமிசமேயாவரானபா னவர்க்கோர் விளைநிலமென்றதுங் கடலைப்போலுந் துயருமதனிவிர்த்தியைப்போலுஞ் சுகமுமின்றென்பதுதோற்றவங்ஙனம் பிரா ர்த்தித்ததுமறிக.

(இ-ம்.) ஒருவருமிசையாத விடபானத்தை மனப்பூர்வமாய்க் கருணையா லேற்றமைபற்றி யிழுத்தலெனப்பொருடரு மீர்த்தலென்னும்பதத்தின் பகுதி யானவீரென்னுஞ் சொல்லைப்பெயரொச்சமாகப்பிரயோகிக்கப்பட்டது. ஓரிகரத் தை யெண்வடிவாக்கிப் பாதியெனப்பொருள்கூறப்பட்டது. தக்குதலென்னும் பதத்திற்றல்னொன்னுஞ்சாரியைநீக்கிநாண்காமுருபுநோகப்பிரயோகித்திருக்குது இங்ஙனமுள்ள வுருபுத்தொகையாதிய விலக்கியத்தின் மிக்கபேட்டோர்க்குச் சாதாரணமாவிளங்கு மன்றிப் பதவுரையில் விரித்தெழுதியுமிருக்கின்றும் எங் ஙனமெழுதினும் பதசாரமும்பொருணோக்கமு மறியத்தக்கவிற்பனர்க்கே பயன் படுமென்பதுஞ்சித்தம். (உசு)

தலங்களிலென்னகஞ்சாரச்சற்றுசிறையைசெய்தியே
தலங்களிலென்னகஞ்சாரச்சற்றுசிறையைசெய்தியே
தலங்களிலென்னகஞ்சாரச்சற்றுசிறையைசெய்தியே
தலங்களிலென்னகஞ்சாரச்சற்றுசிறையைசெய்தியே.

(இ-ள்.) தலம் - பூமியும், கள் - தேனுக்கு, இல்-உறைவிடம், என்-என்று சொல்லப்பட்டபூவாகிய, அகம்-வீட்டையுடைய,சாரு-கிளிபோன்றதிருமகளும், அச்சு-கொண்டிருக்கிறபயங்கரம், அற்று - நிவிர்த்தியாய், ஆ-பசுக்களை, சிறை- காக்கின்ற, ஐ-தலைவனுனவிட்டுணுவின், செய்-சிவந்த, தி-புத்தியாகியவீரத்தன் மையுண்டாதற்கு, ஏது-காரணமான, அலம் - சமட்டித்துன்பமும், கள்-பொய் மையும், இல்-இல்லாத, எல்-பகல்போலுநற்காலம், நகு-பிரகாசிக்கின்ற, அஞ்சு- பஞ்சபௌதிகமானவுலகத்தில், ஆர-பொருந்தும்படி, சன் - சன்மார்க்கமான, தா-பலமுள்ள, சிறு - குழந்தைப்பருவத்தாற்சிறுத்துத்தோற்றுகின்ற, ஐ-சுவா மியே,ஐ-அழகிற்கு, செய்-விளைநிலம்போல்வானே, தி - அக்கினிதேவனது, ஏ- வியப்பான்,*தலம் - விரித்தகையிலும், கள் - ஒருக்காற்றிருட்டுத்தனஞ்செய்தவ ளான, இல்-அவனதுமனைவியிடத்தும்வசித்த,எல்-சூரியன்போல்வானே, நகம்- மலைகளாகிய, சார்-இடத்தில், அச்சு - சேவற்கொடிமுதலானவுடையாளமும், அல்-ஆணவவிருண்மலத்தை, தா-தாண்டும்படி, சிறு-சினக்கின்ற, ஐயை - தவப் பெண்களின், செய்தி-ஒழுக்கமும், ஏ-பொருத்தமுள்ள, தலங்களில்-உனதுகோ வில்களில், என்னகம்-ஒன்றுயென்மனமும், சார - சேரும்படி, சற்று-கொஞ்ச மும், ஆசில்-குற்றமற்ற, தயை-கிருபையை, செய்தி-செய்யக்கடவாய்—எ-று ஏ-ஈற்றசை.

(க-ரை.) பூமிதேவியுமிலக்குமிதேவியுங் கொண்டிருக்கிற பயங்கரநிவிர்த்தி யாய்ப் பசுக்களைக்காக்கின்ற விட்டுணுவுக்குக் கோரயுத்தஞ்செய்யுமிராசதகுணத்

தையுண்டுபெண்ணு மேதுவானலோகசஞ்சலமு மசத்தியமுமில்லாமற் போகி ன்றபகல்போலு நற்காலமானது விளங்குகின்றபஞ்சபௌதிகமானவுலகத்திற் பொருந்தும்படி சன்மார்க்கபலமுங்குழந்தைப்பருவமுமுள்ள சுவாமியே யழ கிற்குவிளைநிலம்போல்வானே யக்கினிதேவன்கையிலு மொருக்காற்களவுப்புண ர்ச்சியின்பமுங்கொடுத்தவளானவவன்பத்தினிவயிற்றிலும்வசித்தசூரியன்போல் வானே மலைகளிடத்திலனேக மடையாளங்களோடுகூடி யாணவவிருட்டைக் களையும்படிக்கான வைராக்கியமுற்றதவப்பெண்களி னொழுக்கமும்பொருந்திய வுனது கோவில்களிலொன்றுயென்மனமுஞ் சேரும்படி குற்றமற்றகிருபையிற் கொஞ்சஞ்செய்தருளென்பதாம்.

(ஞா-ம்.) தேனுக்கிடமாகிய வீடென்றமையாற் பூவெனவருவிப்பினு மவற் றிற்சிறந்ததாமரையென்பதுதானேவிளங்குவது மதில்வசிக்கும் கிளியென்ற தாலிலக்குமியெனப் பொருடந்தவாறுஞ் சரசுவதிக்குமொருஞாயத்தாற்பொரு ந்துமென்பதுமவர்போலுஞ் செங்கிளி வெண்கிளியுமுள்ளவென்பது மிரட்சிப் புக்கிருத்தியமுடைய விட்டுணுவுக்கு லோகநலத்தின் பொருட்டிராசதகுண முண்டாமென்பது முலகந்துன்புறு மசத்தியகாலமிரவுபோலு மாதலிற்பகல் போலு நற்காலமென்றதுங் குருத்துவமுடைமைபற்றிச் சன்மார்க்கபலமுளைத் ததும் அக்கினிகையிலுமவன்மனைவியிடத்தும் வசித்ததுமவன்மனைவியருந்த தியல்லாத வாறுபெண்களாயுருக்கொண்டு களவின்பமூட்டியவாறும் பவுராணி கப்பிரசித்த சரித்திரமென்பதுங் குறிஞ்சிக்கோயில்களிற் சேவன்மயின்முதலிய வடையாளங்களும் பாட்டுடைத்தலைவனுற் சிறையெடுக்கப்பட்ட தவப்பெண்க ளும் விளங்குவதுசுபாவமென்பது யென்மனமு மொருகோவிலாகவேண்டு மென்றசொல்லின்றுற்பரியமதனிலுஞ் நீங்காதிருக்கச்சம்மதியென்றதாமென்று மற்றவற்றிற்கும் விரித்தெழுதின்மிகைபடுமென்பது மறிக.

(இ-ம்.) அகஞ்சாறு வென்றவிருசொல்லினடுவரவேண்டிய வத்துச்சாரி யைதொக்கதுபோல்வனவற்றை மதித்த றியவேண்டுவது-சன்-தா-வென்றல்சற் றுவெனவிதிவழிநின்றது ஐச்செய்யென்றல் ஐசெய்யெனமெலித்து நிற்றல் போல்வன வற்றைப்பற்றி யிந்நிருவாகமறியாவிளம்புலவர் பேசுமாச்சரியத் தைப்போலு மருவருப்புவேறின்றும் தீயென்றவக்கினிப்பெயர் குறுக்கல்விகார முற்றுத்தியென்றுயிற்று. (௨எ)

செய்யதகரிடத்தேறினன்றுனந்தந்தேசிகனே
செய்யதகரிடத்தேறினன்றுனந்தந்தேசிகனே
செய்யதகரிடத்தேறினன்றுனந்தந்தேசிகனே
செய்யதகரிடத்தேறினன்றுனந்தந்தேசிகனே.

(இ-ள்.) செய்ய-சிறந்த, தகர்-கல்லையையுடையரானசிவபெருமானுக்கும், இடத்து - அவரிடப்பாகத்துக்குரியதான சத்திக்கும், ஏறு - நரசிங்காவதாரஞ் செய்தவிட்டுணுவுக்கும், இனன்-சூரியனுக்கும், தானம் - மதசலத்தையுடைய விநாயகருக்கும், தம் - மகாவாக்கியப்பொருளான, தே - பொதுத்தெய்வத்துக்

கும், சிகன்-சிகையுள்ளபிரமாவுக்கு, ஏ-சிறைபட்டானென்னுசித்தையை, செய்-உண்டுபெண்ணிய, அது-அஃறிணைச்சுட்டுக்கிலக்காகிய குழந்தைவடிவுற்றமுருகப்பெருமானுக்கும், அகரு-வாசனைப்புகை, இட-கொடுத்தலாதியானவாராதனஞ் செய்யும்படி, தேறி - தெளிவடைந்து, நன்று-நன்மையும், ஆனந்தம்-களிப்பும், தேசு-கீர்த்தியும், இகல் - வல்லபமும், நே-அன்பும், செய்ய-விளைவதற்குநிலம் போன்றதன்மையினது, தகு - பொருத்தமான, அரு - அருமையை, இடத்து-விசாலமாக, ஏல்-ஒருமிக்கின்ற, தின்-தீமை, அன்று-அல்லாததாய், ஆனம்-உண்டாகப்பெற்றேமாயினும், தம்-கொடைத்தொழின்முயலும், தேசிகன் - செட்டியும், ஏ-வியக்கத்தக்க, செய்ய-சிவந்த, தகரிடத்து-ஆட்டுக்கடாவாகனத்தில், ஏறினன்-ஏறுகின்றவனுமான, தான்-ஒருவனே, நந்தம் - எங்களுடைய, தேசிகன்-ஆசாரியன்—எ-று. ஏ-ஈற்றசை.

(க-ரை.) சிவன்சத்தி விட்டுணு சூரியன் விநாயகர்பரம்பொருள் முருகன் என்னுமேழுவிதமாயும் ஆராதிக்குந்தெளிவாகிய சமரசத்தால் நன்மை யின்பம் புகழ் வலி யன்பாதிய விளைதற்கோர்வயல்போன்ற குணத்தின்றகுதியையுமருமையையு மிவ்வுலகத்திற்றீமையற்றதா யடையப்பெற்றேமாயினுங் கொடைத்தொழிலுடைய செட்டியுஞ்செம்மறிக்கடாவிலேறுகின்றவனுமான வவர்களிலொருவனே யெங்களுக்குக்குருவானவனென்பதாம்.

(ஞா-ம்.) இவ்வேழுவித மூர்த்திகளைப்பற்றிய விபரமொருவாறிப் பிரபந்தக்காப்புரையில் விரித்திருக்கின்றுமன்றியு நம்மாற்செய்யப்பட்டதுஞ் சதுர்வேதசித்தாந்தத்தைச்சேர்ந்த பொதுவாசிரியர்சிறப்பாசிரியரொன்னு மிருதிறத்தாராற்பாடப்பட்டனவுமாயவெல்லாப்பிரபந்தங்களு மிவ்வெழுபகுதியுள்ளடங்குமென்பதுந் தெய்வமொன்றே சட்சமயத்துமுள்ளதென்றல் பொது. குறித்த நாமரூபமொன்றேசிறந்ததென்றல் சிறப்புஎன்பவுமமைதிநோக்கிப் பொருணன்குவிளங்கும்பொருட்டுப் பதவுரையிற்சிலவிரித்தெழுதப்பட்டதென்பது முன்புசெய்யுமுபசாரமான தூபத்தைப்பற்றியாராதனம்வருவித்தது மணக்கப்புகையுந் தன்மையாலகிலையுஞ்சாம்பிராணியையுமொன்றுபடச்சொன்னது மன்றியுமவ்விரண்டுஞ் சொற்பபேதமுள்ள வொருசாதிமரத்திற் சென்னியமென்பதுமப்படிப்பட்டவருமையடைந்தேமாயினுங் குருமுருகனே யென்றமையாலச்சமரசமம்மூர்த்தியநுக்கிரகத்தாற் கிடைத்ததாமென்பதும் பிறவுமறியுமா றறியக்கடவர்.

(இ-ம்.) பண்புநோக்கிச்சிலநாமங்கள்வருவிக்கப்பட்டன துவ்விகுதியுடைமை காட்டுதல் - முடித்து-பூட்டு-என்பனவாதியவற்றுற்றேன்றும். தானமென்றது பலருமாகுபெயரொன்னும் பின்மொழித்தொகை. சிகையுடையானைச் சிகனென்றல் விதிப்பிழையன்றெனல் சிகியெனுமயிற்பெயராற்றேன்றும் தீமைப்பெயரான தின்மை மைவிகுதிகெட்டுநின்றது. ஆனேமென லானமெனப்பலர்வாய் பாட்டுவழிநின்றது. (உ௭)

சிகராசலங்களனேகத்தினானன்றித்தேர்கிலனே
சிகராசலங்களனேகத்தினானன்றித்தேர்கிலனே
சிகராசலங்களனேகத்தினானன்றித்தேர்கிலனே
சிகராசலங்களனேகத்தினானன்றித்தேர்கிலனே.

(இ-ள்.) சிகர - தலையினிடத்துள்ள, ஆ - வியப்பான, சலம்-கங்கையினது, களன்-களவுப்புணர்ச்சியுடையசிவனும், ஏ - அவனதுபாணமானவிட்டுணுவும், கத்தின்-கம்மாகியபிரமாவுமென்றுசொல்லப்படுகின்றமூவர்களின், நா-நாக்களினது, நன்று-நன்மையானவன், இத்தேர் - இப்பூமியாகியதேரின், கிலன்-அச்சொடிதலானவூனத்தை, நேசி-விரும்பிச்செய்த, கராசலம்-யானைபோலும்விநாயகமூர்த்திக்கு, களன்-தேன்போலுமினியவன், ஏகு-செலுத்துந்தோறுஞ்செல்கின்ற, அத்தி-அயிராவதக்களிற்றையும், நானன்-கத்தூரித்திலகத்தையுமுடைய விந்திரனது, தித்து - மனத்தையுடையகுழந்தையானதெய்வயானையின், ஏர்-அழகிய, கிலன்-கழுத்தின்பூணானமங்கலத்திற்குரியவன், ஏசு-குற்றமுள்ள, இகர்-இகலோகத்தார், ஆ-இரங்கத்தக்க, சலம் - பெருங்கோபசம்பந்தமான, களன்-போர்க்களத்தையுடையவன், ஏக-ஓரேபொருளான, தினான் - நித்தியன், நன்றி-விசுவாசமுள்ள, தேர்-உரோகணிப்பெண்ணானேரிட்ட, கிலன்-உருவழிதன்மையோனானசந்திரனை, ஏ - தொடத்தக்கனவாவளர்ந்த, சிகர - கொடுமுடிகளோடுகூடிய, அசலங்கள்-பருவதங்கள், அனேகத்தினான் - எண்ணிலடங்காததொகையுடையவனானமுருகக்கடவுள், அன்றி-அவனையல்லாது, தேர்கிலன் - மற்றொருபொருளையானறியேன், எ-று. ஏ-தேற்றம், அல்லது-ஈற்றசை

(க-ரை.) சிவன் விட்டுணு பிரமாவென்னு மூவர்களினாவினாற்சொல்லுநன்மைக்குரியவனுந் திரிபுரசங்காரஞ்செய்யச்செலுத்திய தேரினச்சையொடித்த விநாயகருக்குப் பிரியமானவனுமானைவாகனமுங்கத்தூரித்திலகமுமுடைய விந்திரன்மனமுழுகும்படி மகவாசையைவிளைக்கின்ற தெய்வயானையினழகிய மங்கலத்திற்குரியவனும் பெருங்கருணையினியல்பறியாத வுலகத்தாரந்தோவென விரங்கத்தக்க போர்க்களமுடையவனுமொரேபொருளாக விளங்குகின்ற நித்தியனுமுரோகணிப்பெண்ணின் மோகத்தாலுருவழிதன்மையுற்றசந்திரன்வசிக்குமண்டலம்வரைவளர்ந்த சிகரங்களோடுகூடிய பலபருவதங்களையுடையவனுமான முருகப்பெருமானையன்றி மற்றொருவனையு நானறியேனென்பதாம்,

(ஞா-ம்.) உமையவளைவஞ்சித்துக் கங்கையைச் சிவபெருமான்றலையில் வைத்தானென்னும் பிரசித்தத்தாற்களவுப்புணர்ப்பென்றதுஞ் சிவனுக்கடுத்துப் பாணமென்றதாலு மவ்வினத்தினுயர்ச்சிபற்றியும் விட்டுணுவெனவருவித்தது நாவினதுநன்மைததியென்பது மித்தேரெனச்சுட்டியதாற் பூமியெனக்கொண்டது மகவாசையினும்பெரி தின்மையாலிந்திரன்மனத்தையுடையதெனத் தெய்வயானையைச்சொன்னதுந் துட்டசங்காரமுலகிற்கிதமென்றறியாரோ போர்க்களத்தின் கோரங்கண்டிரங்குவாராதலி னவரைக்குற்றமுள்ளாரென்றது மன்னியுமித்தாரென்றலிற் பரத்தாரனைவர்க்கு மசுரகாசத்திற்பிரியமுண்டெனல்

விளங்கியதும் ஒருபொருளானநித்தியனென்றதாற் பரத்துவங்குறித்தவாறு மற்றொருருவாயறியேனென்ற தறுபூதி நிலயமென்பது மற்றவைமூன்னுரையில் விரித்துள்ளதும் வெளிப்படையும் பவுராணிகப்பிரசித்தமுமாமென்பது மறிக.

(இ-ம்.) கம்மென்னும் பதத்திலத்துச்சாரியை புணரிற்கத்தெனவருமாறு மறியாராதியர்க்கெல்லா முதராணமெழுதிமுடியாதாதலின்விடுத்தனம். அப்பதத்தீற்றிலாறுமுருபைக் காட்டிநின்றவின்சாரியை முற்கூறியவிருவாயுந் தழுவியது. கராசலமென்றபதத்தினுமசலமெனமலைப்பெயர்வந்து மற்றோரடியினுமவ்வுழி - சிகராசலமெனவப்பெயர்வந்தமையான் மயங்குமிளம்புலவர்பலருளாராயினுமுந்தியது சல்மற்றபண்புடையதன்றுதலானு மாலையெனப்பொருடந்தமையாலும் பொருந்துமெனச்சொல்லித்தேற்றுமுதுபுலவருமுளாரொன நம்புகின்றேன். செலுத்துமத்தியையேகத்தியென்றது பிறவினையால் வந்தவமைதிசெலுத்துந்தோறும் போதல்பற்றிவழூவெனல்கூடாது. கழுத்துடையானெனப்பொருடருங் கில்லனென்றபதங் கிலனெனமெலித்தல்விகாரமுற்றது.

தேராதசிந்தையினேனென்றஞ்சஞ்சத்திக்கைச்சீரியனே
தேராதசிந்தையினேனென்றஞ்சஞ்சத்திக்கைச்சீரியனே
தேராதசிந்தையினேனென்றஞ்சஞ்சத்திக்கைச்சீரியனே
தேராதசிந்தையினேனென்றஞ்சஞ்சத்திக்கைச்சீரியனே.

(இ-ள்.) தேர் - அறிகின்ற, ஆத-இச்சையாகிய, சிந்து-சமுத்திரத்தின், ஐ-ஐந்துவித, இன்-இன்பமாகிய விடயங்களில், ஏன்று-பொருந்தி, அஞ்சம்-அன்னம்போன்ற, சத்தி-பெண்ணான சரசுவதியை, கைச்சு-வெறுத்து; ஈர்-பூருவபட்சஞ்சித்தாந்தமென்னுமிரண்டுவித, இயன்-வார்த்தைக்காரணான பிரமாவுற்பத்திக்கு, ஏது-காரணமான, ஏ-வியப்புற்ற, ரா-ராத்திரிபோன்ற நிறமுள்ள விட்டுணுவும், த-குபேரனும், சிந்தையின் - கருதத்தக்க வவிப்பிராயங்களில், ஏன்று-ஒருமித்து, அஞ்சம்-அம்மென்றுஞ்சம்மென்றுந்தொனிக்கின்ற, சத்திக்கை-மகாமந்திரபீசாட்சரங்களைச்செபிக்கின்ற, சீர்-சுபாவமான, இயல்-குணமென்னும், தே-தெய்வை, தேர்-தேர்போலுங் கடிதடசம்பந்தத்தாலுண்டாம், ஆத-குற்றங்கள், சிந்தை - சிந்துகின்றகட்டத்தை, இன்-இனிதென்னுமிலாபமாக, ஏன்று-ஒப்புக்கொண்டு, அஞ்சு-ஐந்தாகிய, அம்-அழகிய நிறங்களை, சத்திக்கை-உமிழ்கின்ற, சீர்-சொற்சீர்களோடுகூடிய, இயல்-தமிழின், தே-அன்பை, தேராத-ஆராயாமலுமிருக்கின்ற, சிந்தையினேன்-மனத்தினனாகிய வடியேனுக்கு, தஞ்சம்-ஆதாரமானவன், சத்திக்கை - வேலாயுதம்பிடித்தகையினாற் சீரியனே-சிறந்தவனான முருகக்கடவுளே—எ-று.

(க-ரை.) அறியப்பட்டதான விச்சாசமுத்திரத்தின் பஞ்சவிடயங்களிலழுந்திச் சரசுவதிகடாட்சத்தைவெறுத்துப் பூருவபட்சஞ்சித்தாந்தமென்னுமிருவித வார்த்தைவடிவான வேதத்தினையுடைய பிரமாவுற்பத்திக்குக்காரண

76480

மான வியப்புற்ற விருண்ட திருமேனியோடுகூடிய விட்டுணுவுங் குபேரனும் விரும்பத்தக்க பெருங்காரியங்களில் ஒருமித்து மகாமந்திரங்களைச்செபிக்கின்ற குணமாகியநெய்யைப் பெண்மோகத்தாலுண்டாகுங்குற்றங்கள் சிந்துகின்ற நட்டத்தை நலமாகவொப்புக்கொண்டு பஞ்சவன்னங்களைக்காட்டுகின்ற சொற்சீர்களோடுகூடிய தமிழருமையை யாராயாமலிருக்கின்ற மனத்தோனான வெனக்குத்துணை வேலாயுதம்பிடித்தகையாற்சிறந்துள்ள முருகக்கடவுளே யென்பதாம்.

(ஞா-ம்.) மனவாக்குக்காயங்களா லறியப்பட்ட பொருள்களிடத்தன்றி யிச்சையுதியாவாதலினத்தன்மையா லிச்சாசமுத்திரத்தைச் சிறப்பித்ததுமது பஞ்சவிடயரூபமேயாமாகலின் அவற்றிலமூர்த்தியென்றது மவையுற்றாற்கல்வியாசைகெடுமாதலிற் சரசுவதியைவெறுத்தென்றதும்பசுபந்தனவேள்வியாதிய பூருவபட்சவாக்கியங்களும் புல்லுள்ளதலத்தின் மூத்திரம்பெய்யலாகாதென்றலாதிய சித்தாந்தவாக்கியங்களும் வேதத்திலுள்ளனவேயாதலிற் பிரமாவை யீரியனென்றதும் வேதாகமவிதியாகிய சத்தியசவுசங்களைக் கெடுப்போனைக் கெடுத்தலினுந் தேவாலயச்சீரணோத்தாரணமாதியவற்றை விரும்பிச்செய்தலினுநாட்டமுறுதலால் விட்டுணுவுங் குபேரனுங் கொள்ளவேண்டு மவிப்பிராயத்திலொருமித்தென்றது, நெய்யாற்றன்முகதெரிசனமாதல் போற்றவத்தானன்மதெரிசனமாதல்பற்றி யங்ஙனந் திட்டாந்ததாட்டாந்தமாக்கியதுங் காமசல்லாபத்தா லந்நிலைகுன்றுமாதலி னதனைச் சிதறுகின்ற குற்றமாகிய நட்டமென்றது மத்தன்மையுணராதுமுயல்கை பற்றி நலமாகக்கொள்ளலென்றதுந் தனதுபுலமையாற் றிருவருட்பிரசாத சித்தியடையாத வருத்தத்தாற்றமிழையாராயாத மனத்தேனென்றதும் போகமோட்சகாமிகளிருவரு முபாசிக்குந் தெய்வமாதலின் முருகப்பெருமானே யெனக்குத்தஞ்சமென்றதுமறிக.

(இ-ம்.) இன்னென்றபத மோரிடத்திற்களிப்பையு மற்றோரிடத்தினலத்தையும் விளக்கின்றது முதலடியி லஞ்சம்போன்ற சத்தியென்றற்கஞ்சஞ்சத்தியென்ற வுவமைத்தொகை. ராவென்ற பதத்திற்கு முன்னுரைத்தபண்பால் விட்டுணுவெனப்பொருள்கூறப்பட்டது. சிந்தையென்றபத மோரிடத்திலவிப்பிராயத்தையு மற்றோரிடத்தின்மனத்தையுங் குறித்துநின்றது. இப்பாடலினிர்ப்பந்தத்தா லப்பிசாட்சரங்களை வெளிப்படுத்தும்படி நேரிட்டதாயினுமறிவார் சிலரேயென்றது சத்தியம். தேர்போலுமல்குலைத் தேனொன்றேசொல்லியதுமான்றோர்மரபேயன்றி வேறன்று. குற்றப்பெயரான-ஆது-பன்மையினிமித்தமாதவெனவந்தது. சிந்தலையென்றபதத்திற் றல் விகுதிநீங்கிச் சிந்தையெனநின்றது. சுவைக்குறைவன்றென வுணரும்புலவனை விரும்புகின்றும். ஐந்துசிறந் தமிழ்க்குண்டென்பது வெள்ளைக்கவி செந்தமிழ்பைந்தமிழென்னும் ஆன்றோர்மொழிகளாலுஞ் சுதந்தரஞானத்தாலுமறியுந் தகுதியில்லார் நம்மால் வியற்றப்பட்டுள்ள அறுவகையிலக்கணத்தா லறியக்கடவர். சத்திக்கைவாந்தியெனப்பொருடருமாயினு மிவ்விடத்தில் ஒளியைவீசுகின்றவெனப் பொருள்

கொடுத்தது. அங்ஙனமேயிப்பிரபந்தமு மேகாக்கிரசித்தராய்ப் பிரவஞ்சத்தை யுந்தன்னையுமறந்து தமிழ்மயமாகாத புலவனுக்கருவருப்பையும் அத்திறமூற் றமுக்காறற்றமுழுப்புலவனுக் கானந்தத்தையும் விளைக்குமென்பதுஞ் சருவகலா வல்லவியான ச்ரசுவதித்தாயின் றிருவடிகளறிந்த சத்தியம். யென்பதுமென்ற சொல்லிலுள்ள வும்மை மற்றெல்லாமுமெனத்தழுவியது. (நூ)

## முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

---

# நான்மகிமை.

அதரந்தட்டாத்தனித்தாளினந்தாதியயிலன்னதே
அதரந்தட்டாத்தனித்தாளினந்தாதியயிலன்னதே
அதரந்தட்டாத்தனித்தாளினந்தாதியயிலன்னதே
அதரந்தட்டாத்தனித்தாளினந்தாதியயிலன்னதே.

(இ-ள்.) அதர்-அண்டங்களைத்தாங்குந்தன்மையாலத்திமரம்போன்றவரும், அம்-அழகும், தண்-குளிர்ச்சியும், தா-வலியும், தனி - ஆகியதன்மையோரும், தாளி-தாளக்காரனுனபிரமாவும், நந்து - சங்கத்தையுடைய, ஆதி - கடவுளான விட்டுணுவும், ஐ-ஐந்தாகிய,இலன்-தலங்களையுடையசிவபெருமானும், அ-ஆகிய மூவர்களினது, தே-தெய்வமும், அதர்-அடியவர்செல்லும்வழிக்கு,அந்து-துணை யாகப்பொருந்துகின்ற, அள்—நெருக்கமுடையவரும், தா - வியாழபகவானை, தனித்து-சமானமில்லாதசேவைகொடுத்து, ஆளி - ஆண்டுகொண்டவரும், நம், எங்களுடைய, தாதி-சொற்றுதக்களைக்கொள்கின்றவரும், ஐ-தலைமைபெற்ற, இல்-மனைவியாகிய, அன்ன-அன்னப்புட்போலுந்தெய்வயானைவள்ளியின்,தே-திருபையும், அதரம்-அச்சமின்மையும், தட்டா - முட்டுப்படாத, தனி-சம்பத்து முடையவரும், தாளினம்-கடைப்பூட்டுள்ளகடககேயூரமாதியவாபரணங்களும், தாதி - மகரந்தப்பொடியோடுகூடியகடம்புவெட்சியாதியமாலைகளுந்தரித்தவரு மானமுருகக்கடவுளாரது, அயில் - புசிக்கும்படியான, அன்ன-சோறுமுதலிய வாகாரங்களினும், தேய்-உரைகின்ற, அதரம்-உதடுகள், தட்டா-ஒன்றோடொன் றொட்டாத, தனித்தாளின் - ஏகபாதச்செய்யுளுள்ள, அந்தாதி-அந்தாதியாகிய விப்பிரபந்தம், அயில் - அவர்க்குரியவேலாயுதத்தை, அன்னதே - போல்வதே யாம்—எ-று.

(க-ரை.) அண்டங்களைத்தாங்குந்தன்மையாலத்திமரம்போன்றவரு மழ குங்குளிர்ச்சியும்வலியுமாகிய தன்மையுடையவருங் கைம்மணிசங்கம் பஞ்ச பூதத்தலமென்னுமடையாளமுள்ள திரிமூர்த்திகளின்றெய்வமும் பத்தர்கள்

செல்லும்வழிக்கு நெருங்கியதுணையாவாருஞ்சமானமில்லாத சேவையருளி வியாழனை யொருக்காலாண்டு கொண்டவரு மெங்கள் சொற்களின்குற்றங்களை யெல்லா மேற்றுக்கொள்கின்றவருஞ் சருவசத்திசமூகமானவள்ளிதெய்வானை யென்னும் பத்தினிகளின்இருமையும் பயமின்மையுந் தட்டில்லாதசம்பத்து முடையவருமனேகமாபரணங்களும் பூமாலைகளுந்தரித்துக்கொண்டவருமான முருகக்கடவுளாரையுத்தேசித்து ஆகாரமுண்ணும்போது மொட்டுகின்றனவான வுதடுகள்சிறிதுஞ்சலனமுறாதபடிபாடியதான வேகத்தாளிதழுகலந்தாதியென்னு மிப்பிரபந்தமவரது வேலாயுதத்தைப்போல்வதென்பதாம்.

(ஞா-ம்.) முருகப்பெருமானது விசுவரூபதெரிசனத்திலண்டகோடிகளியா வுந்தொங்கிக்கொண்டிருப்பதாகப்பிரமாணமிருப்பதா லான்றோர்மொழிவழியங் ஙனங்கூறப்பட்டது. திரிமூர்த்திகளின் றெய்வமென்றதற்குமுன்னேருழி விப ரஞ்சொல்லப்பட்டிருக்கின்றது. வியாழனையாண்டுகொண்டதாகிய பவுராணிகப் பிரசித்தம். பத்தினிகளின்இருமையுடையானென்றசொற் கோலாகல் புருடர்க் கிழிவாகாது. அவர்களிடங்இருமையுடையானென்னினுஞ் செய்யுணிலையமையும் பரமகுருபரனுனபோது நீக்காததுவேலாயுதமே யாதலினதுபோன்றது. பிரபந் தமென்றதா லெக்காலுநீக்காமற்றரித்துக்கொள்ளத்தக்கதெனப்பொருடந்தது.

(இ-ம்.) தண்டாவென்றபதருஞ் செய்யுள்விகாரத்தாற்றட்டாவெனநின்றது தன்மையென்றபதத்தின் மைவிகுதிநீக்கி யஃதுடையானைத்தனியென்றுந் தா ளத்தோனைத்தாளியென்றுமில்லனையிலனென்றும் அகரமொன்றுன் மூவர்க்கு முடைமைகாட்டியு மடியவர்முதலிய சிலசொல்லையுரையில் வருவித்துஞ்சொற் றமையான்றோராட்சியேயல்லது-விகாரமன்று-இதழகலந்தாதிக்குப்பிரதிபதப் பிரயோகஞ்செய்ததிலொட்டாமையைமாத்திரங் குறிப்பித்தமையாற்குவியாமை யொழுகிற்றென்பாரங்ஙனமன்று குவியினுங்கடைவாயிலொட்டுதல்பற்றி யத னுள்ளடங்குமாறறியக்கடவர்.

யாவுந்திருவருட்செயலென்னு
மெய்யடியார்திருவடிகளேசரணம்.

# தெய்வமே துணை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞானசம்பந்தகுருப்யோநம:

திருவாவனக்கா

# பதிற்றுப்பத்தந்தாதி

இஃது

உறையூர்.

சைவசித்தாந்த சபாபரிபாலகரி

லொருவராகிய


## தே. பெரியசாமிபிள்ளையால்


இயற்றப்பட்டு


கா. கு. சங்கரலிங்க முதலியாரவர்களாற் றமது

டாட்ஸன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1901.

மஹா தேஜோ மண்டலம்
குகை, சேலம்.
உ ஊழியன்:- விசுவநாதன்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோ நம:

# திருவானைக்கா

# பதிற்றுப்பத்தந்தாதி

இஃது

உறையூர்

சைவசித்தாந்த சபையடியார்களி

லொருவராகிய

## தே. பெரியசாமிபிள்ளையால்

இயற்றப்பட்டு

கா. கு. சங்கரலிங்க முதலியாரவர்களாற் றமது

டாட்வென் பிரஸ்ஸில்

பதிக்கலாயிற்று.

1904.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

உ

உறையூர் வித்துவான்

மகா-ா-ா-ஸ்ரீ

## சி. வாஞ்சைலிங்க வைத்தியநாத செட்டியாரவர்கள்

இயற்றியது.

சீர்பூத்த சம்புமூலத்தடியில் வாழுமொரு தேவதேவை, கார்பூத்த வினைமுழுதுங் கழிந்துகழியாதபெருவகையைச சாரர யேர்பூத்த பதிற்றுப் பத் தந்தாதி யாலேத்தி யிறைஞ்சி னனல், பார்பூத்த புலவரெலாம் புகழ் பெரிய சாமியெனு ம்பான்மை யோனே.

மஹா ... மண்டலம்
குகை, சேலம்.
காரியதரிசி:- ...



உ

வேலுமயிலுந்துணை.

# சிறப்புப் பாயிரம்.

செந்தோம் கலாசாலை இயற்றமிழ்ப் போதகாசாரியரும்

மதுரை புதுத்தமிழ்ச் சங்கப்புலவரும் ஆகிய

## மகாவித்துவசிகாரத்தினம்

ஸ்ரீமாந் திருமயிலை

## சண்முகம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

பூவைவணத் தொருமாலும் புண்டரிக மேயானும் போற்றிக் காணக்
காவைபலப் பலசூழுங் காவையிறை யடியிணைக்கே கருதித் தந்தான்
நாவையருந் தமிழ்க்கடலு ளொட்டியமெய்ப் புலவரொலா நாட வின்றேர்
பாவையகந் தனிற்பதிற்றுப் பத்தந்தா திப்பெயரிற் பரிந்து மாதோ.

மதிபூத்த செழுஞ்சடையார் காந்திமதி யம்மையொடு கலந்தப் பூத்த
துதிபூத்த பதியுடையான் பதிபசுபா சத்திறனை தொகுத்தெல் லோர்க்
கும், விதிபூத்த வகையினளித் தருணிலைகாட் டுஞ்சபையின் மேவப்பூத்த
கதிபூத்த நெறியிறைமு கொருபெரிய சாமியெனுங் கவிஞ ரேறே.

---

சென்னை அஷ்டாவதானம்

பூவை

## மகா-ள-ள-ஸ்ரீ

## கலியாணசுந்தர முதலியாரவர்கள்

இயற்றியது

வானைத்தா வியவெண்ணு வலினிழலுழிவதிதல் வனப்பா மேற்ற
வானைக்காப் பெருமாற்குப் பதிற்றுப்பத் தந்தாதி யலங்க ரித்துத்
தேனைத்தேர் சுவைமலிசெம் மொழிசிறப்பச் சொற்றிட்டான் செய்பு
ளுளுஞ் சோலைப்போற் பொழிபெரிய சாமிநா வலனென்னத் துலங்கு
மேவானே

---

# சிறப்புப் பாயிரம்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ

## சி. தாமோதரம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

மதுவள ரினிய காவும் வாவியும் வயலு நாப்பட்
பொதுளுறு கவினு மோதும் பொன்னினீர்ப் பொலிவு மான்ற
முதுமறை யொலியு மிக்க முன்னவ னானைக் காவை
யிதுசுவை யமுதோ தேனோ வெய்திய கண்டோ வென்ன

மதித்த நல்லறி வினன்பர் வாய்செவி யாக மாந்த
வுதித்தசொன் மலரா வுள்ளி னெழுகுநர் நாரதாகப்
பதிற்றொடு பத்து சேர்ந்த வந்தாதியம் பிணை யாத்து
துதித்தன னுயர்ந்த வேளாண் டொல்குலத் தோன்ற லானோன்.

நற்குண மறிவு மேன்மை நாவன்மை ஞான மோன
சிற்பர னடிசே ரன்பு சிவநெறி விரிக்கு மாற்றல்
பொற்புறு தேர்ச்சி மாண்பு புகழிவை பொலியு நீரான்
முற்றவப் பெரிய சாமி முதுதமிழ்க் கவிஞன் மாதோ.

---

உ

தரங்கை வித்துவான்

மகா-ள-ள-ஸ்ரீ

## ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்

இயற்றியது.

மூவரா யவதரித்தவன் முதன்மைகொடு மிருந்தருள்செய் முழுநீர்ப் பொன்னி, பாவரா யப்பதியா னைக்காவலந் தாதியினைப் பரிவி னீந்தார், நாவரா யக்கவிஞர் நலமேவப் புவிவாழ்நர் ஞான மெய்தத், தேவரா யக்குரிசில் செப்பெரிய சாமியெனுஞ் சீரி யோனே.

---

மஹாதேஜோ மண்டலம்
குகை, சேலம்.
ஊழியன்:- விசுவநாதன்.

உறையூர் சைவசித்தாந்தசபை கௌரவ காரியதரிசியார்

## தொ. மு. நல்லசாமி பிள்ளையவர்கள்

இயற்றியது.

அருமறையின் னமுங்கானு தப்பா னின்ற
வநுபவமா மானைக்கா வண்ணல் மீது
கருவுறையுங் கொடியதுயர்க் கடல் கடந்தே
கருதுமுயர் தனிவீடாங் கரையிற் சார
திருவுறையுந் தெள்ளுதமிழ் சிறக்கப் பத்தாய்ச்
சேர்ந்தபத்தந் தாதிசொன்னான் றெளிந்தோர் கொள்ளத்
திருவுறையூ ரினில்வந்த சீர்மை யாளன்
றிகழ்பெரிய சாமியெனுந் திறன்மிக் கோனே.

திருப்பரங்குன்றம்

## அ. ரு. நாராயணசரணரவர்களியற்றியது.

சீர்பூத்த புனல்பரந்து வரும்பொன்னி யாற்றினிடை யுதித்துத் தோன்றி, பேர்பூத்த சம்புமுனி சிரத்துதித்து வளர்ந்தோங்கும் பெருவெண்ணாவ, லேர்பூத்த நிழலுறையுஞ் சம்புநா யகன்மலர்த்தாட்கின்ப மார்ந்த, கார்பூத்த மனமுறுநற் பெரியசாமிக்கவிஞன் நலமுற் றோங்க. க

பத்திபுரி யடியவர்கள் படித்துணர்ந்து கதியடையப் பதிற்றுப்பத் தாம், மெத்தியசீ ரந்தாதி தனைமொழிந்தா னதனைநனி மதித்து விண்ணில், லெத்திசையும் புகழ்படைத்த தருநிழல்வா ழிந்திரனு மேங்க நாளு, முத்தமரும் புகழ்படைத்த காட்டேர்வாழ் முதன்மையருள் மொழிபொய்யாது. உ

குணமெனுநற் பருவதத்திற் வளர்குமா சாமியெனுங் குரிசில் முன்னோன், மணமுறுநன் மலரெடுத்து மாதேவன் றாட்கணிந்த வரத்தாற் றோன்றி, துணருநறுநற் குழலுமையா ளொடனுறையுங் குழகனடி தொண்டு வாய்ந்து, பணமுடிவா ழுலகினுளார் புகழ்ந்தேத்தும் பலவழியைப் பலகா லோர்ந்து. ௩

புன்செய்கை நோக்குமவர் திசையினுநில் லாதகற்றும் புனிதசீலன், றன்செய்கை தனைநோக்கித் தருமஞ்செய் பவர்கட்குத் தகைமை பூண்டோன், இன்செய்கை யுடையவனை யெதிரேற்று வுபசரிக்கு மெழிற்செவ் வாயான், மன்செய்கை தனையறிந்து நடப்பதிலோர் மனுவேந்தன் மயக்கங் கொள்வான். ௪

இன்னவெலா முடைமையொடு வெழிலமைந்த மடமாத ரொஞ்ஞான் றுய்த்தான், துன்னவந்து புடைசூழுந் தொகுதியினால் மத னெனச் சொல்வா யின்னும், பன்னலமார் சுகாநுபவ முழுத,

மைந்து பலர்புகழும் பண்பின் மிக்கோன், நன்னயசங் கரலிங்க
வேளச்சிறப்பதித்திங்கு நல்கினனால். ரு


திரிசிரபுரம் நாஷனல் ஹைஸ்கூல். தமிழ்ப்பண்டிதரும்.
உறையூர் சைவசித்தாந்தசபை உதவிசபைத்தலைவருமாகிய,

மகா-ள-ள-ஸ்ரீ. தி. ச. ஆறுமுகநயினாரவர்கள்.

இயற்றிய.

நிலைமண்டிலவாசிரியப்பா.

சீர்தரு செந்தமிழ் சிவணிய நாட்டி, லாதித் தன்குல வரையர்சோலோ
ச்சச், சூழ்கா ரணத்தால் சோழ ராயின, ரன்னவர் பொலியு மமர ருல
கேய்த், இங்கிலம் பரவு மிலங்குசோ ணாட்டுப், பொன்னி யாற்றுப் பொ
ற்பார் தலத்து, ளத்தியுஞ் சிலம்பியு மம்பிகை யயனு, மடிமல ரேற்றி
யருணலம் பெற்ற, வாம்பல் வனத்து றப்பத் தலமாம், சதுர்மறை யோ
துஞ் சதுர்த்தப் பொருளான், காரணத் தியேயன் கதித்து நிறீஇ, பழவி
னை யொரீஇப் பதம்பெற நல்குந், திருவருட் டுறையின் சீரார்ந் துள்ளா
ர், தவநெறி யோங்குந் தமிழ்மறை யாரியம், மிக்கொலி செவியின் மீக்
கொண் டுற்றே, விம்பர்வந் தொல்லை பிறகரங் குவிக்கும், விண்ணோர் து
திபெறு வெண்ணாவ லேழலமர், ஞான தலங்கொள் நம்பன் னேய, நவர்
தரு பேத நடிப்பவன் மூன்று, பத்துட ஞறு பகுத்துமே னின்றோன், பு
லவர் நாவின் புகழ்பன் னூலு, ளுரெனப் படுவ துறந்தையம் பதிதிகழ்,
மேழிக் கொடியுடை வேளாண் குடியிற், றேவரா யன்மாற் செய்ய திரு
மேனிக், கலந்துவர் தருளுங் காந்தி மதியா, ரஞ்செய் சீரடி யருந்துதி
யாற்றித், திருப்பணி யுஞற்றிச் செய்யருந் தவத்து, (மகனாய் நந்தை) ம
ன்னிய பாவிற், கிலக்கா யதித்தோ னிம்மையி னலம்பெற, மெய்கண்ட
நூலின் மேதை வாய்ந்த, பெருமை மிக்க பெரியசா மிப்பெயர் புல
மை யுள்ளோன் புதுமணங் கமழுங், கனியோ தேனோ கண்டோபாகெ
னக், கற்றோ ருவக்கக் கண்ணுறுத லான்சிர், மயிலயி னீத்து மணித்தசங்
தானந், தாங்கும் பேறு தருமூத்தி நாதன், சைவம் வளர்த்த சம்பந்த மூ
ர்த்தி, யாதித் திலக மன்னனெம் மண்ணலா, ரருளுறு பாவா லகயலங்
தேத்திப், பத்தி ரசமுதற் பாங்கிற் சார்ந்தே, ஆறு மண்டுங் குலந்திரிய
ம்மூ, ருரணி மார்ப னுரமார் மிடற்று, ணன்பு மௌனவே ஈற்சீ ரடிதொ
டை, தருபதிற்றுப் பத்துத் தந்த வந்தாதி, மாலை சாற்றி மகிழ்ந்தா னத
னை, வானோ ரன்று வார்கட லமுதங், கொண்டையா னருளாற் குலவிய
பெற்றென, நல்லவர் போற்று நலஞ்செறி காட்டூர்த், தொண்டை வே
ளாண் டொன்மை முதன்மையன், குமாரசா மிப்பெயர்ப் குணம்புகழுற்
றோன், சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகெனுஞ், செப்பு மவ் வையு
ரை செப்பமா வோர்ந்து, கற்றவத் துதித்து நானிலம் புகழும், செல்வப்
புதல்வன் சுப்பிர மணியவேட், டன்னுடன் வந்த தகைகூ ரன்பன்,
சைவந் தழைக்க தண்மதி யுள்ளோன், சங்கர லிங்கஞ் சார்பே ராள,
னம்புவி யாரின் றன்புபெற் றுய்ய, தன்னச்சி லேற்றித் தந்தன னீதன்
றே, விசைதவழ் காட்டு வியைந்தோர் முறையே,



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞானசம்பந்தகுருப்யோநம:

# திருவானைக்கா பதிற்றுப்பத்தந்தாதி.

---

## கடவுள் வாழ்த்து.

### காப்பு விநாயகர்.

திருந்தியமா மறைபயிலுந் திருவானைக் காவிறைக்குப்
பொருந்தியநற் பதிற்றுப்பத் தந்தாதி புகலவரு
டருந்தியக்க மொழித்தெனக்குச் சதுர்முகனு மலன்வருகா
மருந்தியனுந் தொழுமானை வதனமுடை யான்பதமே.

### ஜம்பு நாயகர்.

பொன்பூத்த மார்பனய னரிபுலவர் முதன்மற்றைப் புனிதர் யாருங், கொன்பூத்த பலவகையாய் குளிர்நீர்கொண் டாட்டியது மன்றிக் கோதி, றென்பூத்த நபப்புனலே சடையிருந்து மதின்வி ழைவு தீர்கி லானாய், மின்பூத்த புனலுருவாய் வேழவனத் தார்ந் தானை வேண்டல் செய்வாம்.

## அகிலாண்ட நாயகியார்

மணமலிபூந் துணர்க்குழலுஞ் சிலைநுதலுஞ் செவ்வாயும் வயங்கு தோளும், கணமலியன் பருக்கருணைப் பொழிவிழியுந் தனதடமுங் கடகக் கையும், குணமலிபல் லுயிரெவையு மீன்றதிருவுதரமும்பொற் கொடிநேர் நன்ளும், வணமலியெ மகிலாண்ட நாயகிதன் மலரடியும் வணக்கஞ் செய்வாம்.

## செல்வ விநாயகர்

நீர்கொள் சடிலப் பரஞ்சுடரா நிமலா னந்தப் பெருமானார்
கார்கொ ளன்பி னோடளித்த கவினுமொருகோட் டிருசெவிநற்
சீர்கொண் மூன்று மதநால்வாய் திகழு மைந்து கரமுடைய
வேர்கொள் செல்வ மழகளிறென் னிதயத் தடத்தி லிலங் கிடுமால்

## குமாரக் கடவுள்

முன்ன மறையா கமமங்க மொழியுங் கலைகண் முழுதுணர்ந்த தன்னு மலயத் தமிழ்க்கடற்குத் தூய வோத்தை வலியுறுத்த மின்னுங் கருணைப் பெரும்பிழம்பாம் வென்றி யயில்வேற் கரத்தெந்தை, பொன்னங் கமலப் பூங்கழலைப் புகழ்ந்து பாட லெம் வேலை.

## திருநந்தி தேவர்

தெள்ளிய கங்கை வேய்ந்த செஞ்சடைப் பெருமான் வாழும், வெள்ளியங் கயிலை காக்கும் மேதகு சீர்வாய்ந் தோங்கு, நள்ளிய கருணை யோடு நந்தமை யடிமை கொள்ளும், வள்ளிய நந்திப் புத்தேண் மலரடிக் கன்பு செய்வாம்.

## திருஞான சம்மந்த சுவாமிகள்

கும்பர் தன்னி லிருகும்ப மேந்தி யொருகொம் புதித்திடவுந். தம்பர் தனில்வந் தான்சிவசா ரூபந்தனைத்தாங் கிடவுமரு, ளம்பர் தனைய முலைசுரந்தெம் மம்மை தரும்பா லயில்ஞான, சம்பந் தனையே, யெஞ்ஞான்றுந் தமியேன் செய்தல் சிந்தனையே.

## திருநாவுக்கரசு சுவாமிகள்

அன்ன வடிவாய் நான்முகத்தோ னளவில் கால நேடிநின்று, மின்னை படியென் றறியவொணு விண்டைச் சடையா னெமபெருமா, னென்னங் கொடுவந் தாற்றனிடை யளிக்கப் புரியு மரியதமிழ் மன்னுந் தவத்து நாவாசர் வனச மலர்மென் கழல் பணிவாம்.

## சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

குல்லைப் படலை யோன்கிடியாய்க் கூவை யிடந்துங் காண்பரிதா நல்ல கமலப் பதமகன்று நயனம் வளரு மிடத்திலும்வர், தொல்லை மகிழ்வி னெடுமுடிமே லொன்றப் புரியு முயர்தவத்து, வல்லைப் பொருவு முலைப்பரவை மணாள னடியை வணங்குவாம்.

## மாணிக்கவாசக சுவாமிகள்.

எழுதும் வேலை நான்முகத்தோர்க் கியற்றி யெழுதா மறைபுகன்ற, கொழுது வரிவண் டிழக்குமலர்க் கொன்றை புனைந்த பூரணனே, பழுதி லொருபூ சுரவடிவாய்ப் போந்து பதுமக் கரநோவ வெழுதும் படிநற் றீந்தமிழ்சொ லிறைவர் மலர்த்தா ளிறைஞ்சிடுவாம்.

## சண்டேசுர நாயனார் முதலாக வறுபத்து மூவர்கள்.

தந்தை யொருதா டனைத்துணித்துச் சாற்றுந் தனக்கொப் பொருவரிலா, வந்தி மதிநின் றொளிர்சடிலத் தமலன் கமல விருதாள்சேர், மைந்தர் தாமு மற்றபான் மும்மை யடியர் மலர்த்தாளுஞ், சிந்தை யுவந்தே சிந்திப்போந் தீய வினையுஞ் சிந்திப்போம்.

## அவையடக்கம்.

வானுதற் றேவி யார்செய் வயங்கு பூசனை தழீஇய, தானுவோர் சிலந்தி செய்பூ சனையையுந் தழீஇய வாற்றா, லேனுமா மடியர் செய்யு மினியபா வேற்ற லோடுங், கோனுமா மனத்தேன் சொற்ற செய்யுளுங் கொண்டாள் வானால்.

# நூல்.

சீரார் கமல மலர்தனிற் செறிந்து விளங்குந் திசைமுகனுங்
காரார் மேனி நெடுமாலுங் காண்டற் கரிய கழலிணையை
நாரா ருளமி லடியேனு நண்ணுங் கால முளதேயோ
வேரா ரானைக் காவிலம ரீசா வடிய ரிரும்பேறே க

இரும்பார் வலிய மனமுடைய வெளியே னின்ற னெழின்மிகுந்த
சுரும்பார் கமல மலரடிக்கே தூயவர் தமிழாற் பாமாலை
யிரும்பா ரதனிற் சூட்டுமா றெவ்வாறோ முன்னந் தவமிழைத்தேன்
கரும்பார் கழனித் திருவானைக் காவின் மேய கண்ணுதலே உ

கண்ணே கண்ணி னுண்மணியே கருத்தே கருதப் படும்பொருளே
விண்ணே விண்ண வர்க்கிறையே வீயே வீயி னறுமணமே
பண்ணே பண்ணின் மேலிசையே பரவும் வெண்ணா வன்னிழல்வா
ழண்ணா நின்றன் பொன்னருளை யடியே னென்றோ வெய்துவதே

எய்தி நினது மலரடியி னின்ப மடியர் நுகர்தரயான்
பொய்தி கழுமிவ் வுலக னிடைப் புண்ணா ருடலை யோம்பிநித
மைதி கழும்வெங் கணைவிழியார் வலையின் வாய்ப்பட் டுழல்கின்
றேன், மொய்தி கழும்வெண் ணாவனிழன் முதல்வா முக்கண் மு
ன்னவனே ச

முன்ன மறையு முணர்வரிய முதல்வா வானைக் காவினுறை
மின்னி னனைய சடையதனின் வேய்ந்த கொன்றைப் படலையனே
பின்னை கேள்வ னுணர்வரிய பிறங்கு நின்றன் றாளிணைக்கீ
ழென்னை யிருத்தி வைப்பதனுக் கிரங்கி யருள்வ தென்றுகொ
லோ ரு

என்று தவழு மாமதில்சூ ழெழிலா ரானைக் காவினமர்
கன்று குணிலாக் கனியுகுத்தோன் காண்டற் கரிய பரம்பொருளை
மன்று ளடிக்கும் பெருமானை வந்திப் பார்த மகத்தொளியை
யின்று வணங்கப் புகழ்வாயே யென்றோ குறைநிற் கென்மனமே

மனமே நினக்கோர் மாற்றமின்று வகுப்பே னதனைக் கேண்மதிநீ
வனமே வான வரையோங்கும் வளமார் காவின் மாமணியைக்
கனமே யனைய மிடறுடையெங் கனக வரைவிற் கடவுடனைத்
தினமே யுன்னி வாழ்த்துதிமேற் சேர்வாய் முத்திச் செழுங்கரை
யே எ

செழுநீர்ப் பொன்னி புடைசெறியுஞ் சீர்கொள் காவை நகர்மேய
மழுவார் கரத்தெம் பெருமானை மதிசூ டியநம் பிஞ்ஞகனைத்

தொழுவார்க் கிரங்கி யருள்வானைத் தூய்மை யானைப் பாடாமற்
பொழுதே போக்கித் திரிதந்தேபொல்லா மைய லாழ்ந்தேனே

மையார் கண்டப் பெருந்தகையை வளமார் காவை மாமணியைச்
செய்யா மறைசொல் செழுஞ்சுடரைச் சிந்தைத் தலத்து ளிருத்
தாதே, நெய்யார் குழன்மங் கையர்தமையே நாடி வாளா வாளா
ளாப், பொய்யா ருலகற் போக்குறுமிப் புலைய னேற்கு முய்வுண்
டோ ௯

உய்யு நெறியே சிறிதோரா துலகிற் பாஞ்ச ராத்திரமுன்
வெய்ய சமயப் படுகுழியில வீழ்ந்து வருந்தா வாறருளா
றுய்ய சைவசமயமெனுந் துலங்கு நெறியிங் கெனக்களித்தின்
றைய னானைக் காவிலம ரப்பனாட்கொண் டருளினனே. ௰

வேறு.

அருளினாற் பொலியுந் திருவுருக் கொடுநல் லறவிடை மீதினி லீ
வர்ந்தே, தெருளினாற் பொலியு மடியவர்க் கருளுஞ் செல்வமே நி
ன்னடிமலரை, மருளினாற் பொலியு மனத்திடைக் கண்டு நெஞ்ச
னேன் மகிழுநா ளுளதோ, பொருளினாற் பொலியுங் காவையின்
மேய புண்ணியா புசன்மறைக் கொழுந்தே ௧௧

மறையவன் முகுந்த னிந்திரன் முதலா மற்றுள வானவர்க்கெல்
லா, மிறையவ னானைக் காவினி லமர்ந்தோ னிணையடிப் புகழினை
யேத்தித், தறையினி லெவரு மெடுத்தெடுத் தேத்தத் தலைமை
சால ருள்பெரு மடியார், குறையினை மிகவு முடையவா னுலகை
க்குறிப்பது மனத்திடை யிலையே ௧௨

மனத்திடை நின்றன் றிருவுரு வன்றி மற்றுள வானவர் தம்மைத்
தினைத்தனை யடியேன் கனவிடை யேனுஞ் சிந்திப்பே னல்லனியா
ன கண்டாய், சினத்தினாற் புரங்கண் மூன்றையு முன்னர்ச் செழு
ந்தழற் கொள்ளுமா புரிந்த, கனத்தினுங் கரிய கண்டனே காவை
க்கடிநகம ரமர்ந்தவிண் ணவனே ௧௩

விண்ணவ னேநின் றிருவுருத் தனையே விருப்பொடுங் கருத்திலெ
ஞ் ஞான்றுங், திண்ணமா மதித்துன் வரமெதிர் பார்க்குஞ் சிறிய
னேன் றனைவிடேல் கண்டாய், பண்ணுறு தற் பரமே த ப்பரா சர
னுங் கவுதம னுந்தொழுங் காவை, விண்ணிற் போயின் மேவிய
தெய்வ விருத்தகு சம்புநா யகனே ௧௪

சம்புநாய யகனே சாற்றகி லாண்டத் தலைவிதன் பூசனைக் கன்றித்
தம்பியுஞ் சியுஞ் செய்தபூ சனைக்குஞ் சுரந்தருள் புரிந்ததோர்ந் த

டைந்தே, னம்பணி சடையெம் மாதியே கோதிலலையெறி யமுத
வா ரிதியே, சம்புறு ஞான தலத்திடை வைகு நலங்கெழு சுத்த
நிர்க் குணனே ௧௫

குணப்பெருங் கடலி னகடுகீன் டொழுகுங் குளிர்புனற் பொன்னி
சூழ்ந் தொளிருந், தணப்பருஞ் சீர்கொள் காவையின் மேய சம்
புவே நின்னடி மலரைப், பணப்பெரும் பாந்தட் சுடிகையிற் கிட
ந்த பார்மிசைப் பத்தியி னொடுமோர், கணப்பொழு தேனு நினைந்
திடா தின்றிக்கடையனே னுய்புநாளுளதோ ௧௬

காளெலா நின்றன் றிருவடி மலரை நாடுமா றறிவிழந் தெளிய
வாளுலாமுண்கண் மங்கையர் மையன் வாரிதி யாழ்ந்திவண் கழிக்
குங், கோளெலா முடைய கொடுமனத்தேற்குன் குரைகழ லளித்
தருள் கண்டாய், தூளெலா மொருங்கே பொழிதரு நாவற் றாய்
வனத் தமர்ந்தசுந் தரனே ௧௭

சுந்தரன் காழி ஞானசம் பந்தன்சொல்லிறை வாதவூர டிகள்
செந்தமிழ்ப் பாடல் கேட்டரு ணின்றன் றிருச்செவி யேற்குமோ
வென்றன், சந்தமில் பாடன் மற்றுநீ யிரங்கித் தண்ணளி புரிவ
தெவ் வாறோ, பந்தமின் முனிவர் சூழ்தரு காவைப் பதியயி னம
ர்ந்தவெம் பரனே ௧௮

பரமனே முன்னம் பங்கயத் தயனும் பரவையில் விழிவளர் பவ
னும், பரமொரு நானு னென்றுனை யெதிர்ந்து படருழந் தமைய
றிர் திருந்தும், பிரமநா மன்றி வேறிலை யென்னப் பிதற்றுநர் கா
ண்பரோ நின்னைக், கரமலைக் காவின் மேவிய தெய்வக் கவின்மிகு
சம்புநா யகனே ௧௯

நாயக னொளிருங் காவையின் மேய நான்மறை தனக்குமெட்
டாத, தூயவன் சோம சேகரன் றுலங்கு தொன்மையன் சுந்தர
னைந்து, சாயகன் றனைமுன் பார்வையி னெரித்த சங்கரன் றற்பர
னன்றித், தாயகம் வேறொன் றுண்டுகொ லிந்தத் தரணிமே லே
ழையேன் றனக்கே ௨௰

வேறு

தனக்குவ மையி றந்தி வனத்துறை
புனத்து ழாய்முகில் போற்றுறு மீசனை
மனத்துள் வைத்து வழுத்தவு மென்றனக்
கனத்தன் கால மருந்துய ரற்றவே ௨௧

அற்ற மோவுய ரானைக்கா வண்ணலைக்
கற்றை வார்சடைக் கண்ணுதன் மூர்த்தியைப்
பெற்ற மூரும் பிரான்றனைப் போற்றிடா
தெற்றுக் கோபிறந் தேங்குவி ரேழையீர் உஉ

ஏழை காளினி யேனு மிருண்மலர்க்
கூழை யார்தமைக் கூடன் மறந்துநீர்
வாழை காய வளையுயர் காவையெம்
மாழை வண்ணனை வாழ்த்தி வணங்குமே உ௩

வணங்கெ னத்தலை யோடு வழுத்தென
விணங்கும் வாயினை யீந்தடி யாரிருங்
கணங்கள் காட்டிக் கடையனை யாண்டனன்
மணங்கொ ளுயல் வனத்துறை மன்னனே உ௪

மன்ன னேமலை மங்கையோர் பாலுறை
யன்னஞ் சேர்வய லானைக்கா வண்ணலே
யுன்னை யேதொழு வேற்குத வாததின்
றென்னை நின்ற னிணையடிக் கஞ்சமே உ௫

கஞ்ச மன்ன கவின்றரு நன்முக
வஞ்சப் பெண்மயல் வாரிதி யாழ்ந்தொரு
தஞ்ச மின்றித் தவிக்குந் நமியனை
யஞ்ச லென்றரு ளானைக்கா வத்தனே உ௬

அத்த னேயொளி ரத்தி வனத்துறை
கத்த னேகுளிர் கங்கைச் சடையனே
பித்த னேன்செய் பிழைபொறுத் தாண்டிடி
னித்த லத்துனை யேசுக ரியாவரே உ௭

யாவ ருன்னை யறிதரு நீர்மையர்
பூவ ருமய னோடு புனத்துழாய்த்
தேவ னுந்தெரி யானெனச் செப்பிடிற்
காவை மேவிய கன்மகள் பாகனே உ௮

பாகை நேர்மொழிப் பாவையர் மையலா
லாக மோடறி வன்பழி வேனையாண்
மாக நாட்டவர் வந்து வணங்குநன்
னாக மாவன மேவிய நாதனே உ௯

நாத னாய்வந்திந் நானிலத் தென்றனைப்
போத நல்கிப் பொருளெனச் செய்துதன்
பாத தாமரை தன்னிற் பரிப்பவ
னோத நீர்வய லும்பல் வனத்தனே ௧௰

வேறு.

வனத்துழாய் மாலையணி மாலவனு மலர்மேய
யனத்துவச நான்முகனு மடிமுடிகா ணாதுழலச்
சினத்தினாற் புரமெரித்த தென்னானைக் காவானென்
மனத்துளே யெளிவந்த வாறென்னோ வறியேனே. ௧௧

அறியேனின் பெயர்புகன்றே யாடேனின் றிருமுன்னர்க்
குறியேனின் றனையுளத்திற் குவியேனின் றனக்கருகை
முறியேய்வெண் ணாவனிழன் முதல்வாமற் றதலினாற்
சிறியேனுன் னருட்கயலாச் செல்வேனோ தீநரகே. ௧௨

நரகமதி லுய்த்திடினு நாதாநின் றிருவடியின்
விரகருளிச் செய்குவையேல் வெறுக்கேன்மற் றதையின்றே
றுரகமொடு வெண்கரியைத் துரக்கவனிக் கனும்விரும்பே
னாகமணிந் தொளிருறா லும்பல்வனத் துறைபவனே. ௧௩

பவமென்னும் பெருங் கடலிற் படிந்துபடிந் தெந்நாளுஞ்
சவமென்னப் படுவேனைத் தண்ணளியி னாலினிதே
தவமென்னு நெறிபயிலுந் தங்கார்சூழ் காவைநகர்ச்
சிவமென்னும் பொருளின்றே தேடியடைந் தாண்டதுவே. ௧௪

ஆண்டானை யடியேனை யாளாக வனலுருவாய்
நீண்டானை நீள்சடைமே னிலவிதழி யோடரவம்
பூண்டானைப் பொருதழியும் புறச்சமயத் தவர்மனத்தை
வேண்டானைத் திருவானைக் காவானை மேவினனே. ௧௫

மேவியவெம் பந்தத்தால் வேறுவே றுருவெடுத்துக்
காவிநேர் கண்மடவார் கலவிதனி லாழ்ந்தென்றும்
பாவியேன் படுந்துயரம் பார்த்தருளா யீதருளோ
வாவிசூழ் திருவானைக் காவமர்ந்த வற்புதனே. ௧௬

அற்புதநின் றிருக்கோயி லடைந்தங்கம் புளகரும்பப்
புற்புதங்கொ ளாறென்னப் புனலொழுக விருவிழியி
னற்பினோடு நின்றுருகி யகங்குழையே னுய்வேனோ
சிற்பரனே திருவானைக் காவமர்ந்த தெள்ளமுதே. ௧௭

அமிழ்தனைய தமிழ்ப்பாட லரியநின தடிமலர்க்கே
யிமிழ்திரைவை யகத்தெளியே னியம்பிடுமா றருள்புரியா
யமரர்தொழுந் திருவானைக் காவினமர்ந் தடைந்தவர்தஞ்
சமலமதை முறுக்கியரு டனித்தலைமைப் பெருந்தகையே. ௧அ

பெருந்தகையைக் காவைநகர்ப் பிறப்பிலியைப் பேணுமன்
முருந்தனைய மூரலினார் முயக்கினிடை நனிவீழ்ந்து
வருந்துறுமெம் பாழ்நெஞ்சே மற்றனைய பெருமான்றன்
பொருந்துறுநற் றிருவருளைப் புசிப்பதுனக் குண்டாமோ. ௧௯

உண்டாமோ வுனையன்றி யுய்வருளத் தெய்வமெனப்
பண்டாய நான்மறைகள் பகர்வதையே பாராமற்
கொண்டாடும் பிறதெய்வக் கொடியருயும் வகையுளதோ
வண்டாரு மாருகத வனத்துறையும் வானவனே. ௨௰

வேறு.

வானுலவு நெடுமதில்கள் வயங்குறுநற் காவை
மாநகரின் மேவியவெம் வானவனே நாயேன்
கூனுலவு பிறைமேகங் கொடிவரையை வென்ற
குளங்கூந்த லிடைகொங்கை கொண்டகவின் மிகுந்த
மானுலவு விழிமடவார் மையலெனக் கிளத்தும்
வாரிதியின் வீழ்ந்துகரை யேறும்வகை காணேன்
கானுலவு நினதுமலர்க் கழலிணையாங் கலத்தைக்
கடையனேற் குதவியருட் கரையினிற்சேர்த் தருளாய். ௨௧

அருளெனன் னெறியைவிடுத் தவனிமிசை நாளு
மரிவையர்க டனைவிரும்பி யலைவுறுநிற் கென்னின்
மருளேயு மனமுடைய மாபாவி தனக்கே
மதுரையின்முன் பருள்புரிந்த மாண்பதனைக் கொண்டே
விருளேயு முகிலுலவு பொதும்பரிரு ஞாங்க
ரிலகுமெழிற் றிருவானைக் காவதனின் மேய
தெருளேயுஞ் சம்புமுனி போற்றுறுநற் றெய்வச்
செழுஞ்சுடரே சந்தமிகு முந்தை மறைக் கொழுந்தே. ௨௨

தேன்மணக்குங் கமலமல ரயனாகிப் படைத்துஞ்
செழுமேக மனையநிற மாலாகிப் புரந்தும்
வான்மணக்கும் பிறையணிந்த வானவனா யழித்து
மன்னுதனக் கோர்வடிவுந் தொழிலுமிலா தொளிருஞ்
சென்மணக்கும் வயற்காவைத் தெய்வநகர் தன்னிற்

திருவமுடன் வீற்றிருக்குஞ் சிவக்கொழுந்தே நாயே
னூன்மனக்கு முடற்பிறவி தனிலுறுதற் கஞ்சி
யுனதுபய சரணடைந்தே னபயமரு ளரசே. ௨௧

அரியபர வெளியதனி லம்மைமகிழ் பூப்ப
வானந்த நடம்புரியு மமலநின தடியைப்
பிரியமுட னுளமதனிற் பேசுறுமென் ஞான்றும்
பெரிதுநினைத் திடவருளிப் பிறங்குமுன தருளுக்
குரியவனு யெனைப்புரியி லுனைமுனிவா ருளரோ
வுவணமுயர்த் தோன் கமல வுயர்மனையோன் போற்றுங்
கரியமுகி லுறங்குமுயர் கடிமதில்கள் சூழ்ந்த
காவை நகர் மேயவருட் பேயபரஞ் சுடரே. ௨௨

சுடரிலைவே லனையவிழி மடவார்க டமையே
துருவியிவ ணலமருமித் தொல்வினையி னேற்குன்
மடலவிழு மரைமலர்ச்சே வடிதனையே நாளு
மறவாமன் மகிழ்வினொடு வாழ்த்துமடி யார்தந்
திடமிகுந்த கூட்டநனி சேர்த்தவர்கட் கேற்ற
திருத்தொண்டே புரிதருநற் செயலளித்தின் றருளாய்
தடமிடங்க டொறுங்குலவு ஞானதலத் தமர்ந்த
சசிகண்ட சிகண்டாவெஞ் சாற்றுமணி கண்டா ௨௩

கண்டாருங் கேட்டாருங் காசினியில் வெய்ய
கடியவனென் றுளநடுங்கிக் கைத்துமிக வேசக்
கண்டாரு மொழியயில்வேற் கண்ணியர்க டமக்கே
கழிமகிழ்வோ டேவல்செயக் கடவேனைப் புகழாம்
வண்டாரு மாமறைநூ புரமுமணிந் திமய
மலைமகளார் களிப்பெய்த மன்றினட மாடும்
வண்டாரும் வாரிசமென் மலரடியிற் கூட்டாய்
வளம்படைத்த காவைநகர் குளம்படைத்த விழியாய் ௨௪

விழிநிறைந்த புரத்தானும் வியினமர்ந் தானும்
விசுமலைப் பாயறனின் விழிவளரு வானுங்
கழிபொருளுக் குரியானுங் கவுசிகனுந் தூய
கைவந்த மாதவப்ப ராசரனு மருவி
விழியுமுய ரிமயவரை யீன்றெடுத்த வெங்க
ளிளங்கொடியு முளங்களிவுற் றென்புநெகிழ்ந் துருகி
யொழியாமற் றுடக்தம்பட் டேத்தவினி திலக்த
வுயாரானைக் காவாயென் னயர்போக்கி யாளாய் ௨௫

ஆளுடைய பிள்ளையுய ரரியதிரு மணத்தி
லலகிடுமோ ராளாய்முன் னமைந்திருப்பே னுகிற்
கோளுடையே னின்றுனது குரைகழற்சே வடியைக்
கூடவருந் தேன்றடைகொண் டேனருள்செய் தாளாய்ப்
பிளுடைய காரெனவே பேசுதிரு வருளைப்
பிறவியொழி தரவைந்து பிறங்கெழுத்தோ துவதாந்
தாளுடைய வடியவர்கட் கியைந்து பொழிந் தருளுந்
தந்திவனத் தேயமர்ந்த சந்திரசே கரனே ௪௮

கரமூன்றொ டிரண்டுடைய கரிதனையுஞ் சண்மு
கம்படைத்த கண்டீர வத்தினையு மீன்ற
வுரமூன்றோ டிரண்டுபுடை யொளிர் காவை மேய
வுண்மையறி வானந்த வுயர்வடிவப் பொருளே
புரமூன்று மன்றெரித்த புன்முறுவ றனையென்
புன்மலமெய் துறவினிதே புரிந்தெனையு முன்றன்
சிரமூன்று நான்குமுளார் தெரியவரி தாய
செங்கமல மலரடியிற் றங்கவருள் புரியாய் ௪௯

அருவாகி யுருவாகி யருவுருவ மாகி
யளவிறந்த வுயிராயவ் வுயிரினுக்கோ ருணர்வாய்
மருவாகி மலராகி மகத்தாகி யணுவாய்
வயங்குதிரு வருள்பதிந்த வாய்மையினோர்க் கருளுங்
குருவாகி மற்றுளவெப் பொருள்களுமாய் நின்ற
கொள்கையினு னுனையறிந்து கூடும்வகை காணேன்
றிருவானைக் காவினுறை தேவர்கடந் தேவே
தீதுடையேற் கிவ்வுலகி லேதுகதி செப்பாய் ௫௰

வேறு.

செப்பார் முலைநற் செல்லார் குழல்வெஞ் சேலார்கண்
டுப்பாரிதழ்கொண் மானூர் கலவித் தொடுக்கடல்வீழ்ந்
திப்பார தனி லேங்குறு வேனையு மேன்று கொளாய்
அப்பார் சடையென் னப்பா காவை யமர்ந்தவனே ௫௧

தவமே புரியுந் தகவே யின்றித் தையலர்பா
லவமே வாளுள் கழித்திங் குழலு மெளியனையுன்
சிவமே பொலியுஞ் சேவடி சேர்க்கற் செயிருனதே
பவமே யடைந்தோர்க் கற்றுங் காவைப் பதியானே ௫௨

பதியே யுண்மை யறிவா னந்தப் பரம் பொருளே
மதியேய் சடிலத் திறையே மன்றி னடமாடு
நிதியே யென்று நின்னை வழுத்த வருள் பொன்னி
நதியே புடைசூழ் காவையின் மேய நாயகனே ௫௩

நாயக னேயெனை யுன்னடி யாகிய நவில்கமல
வீயக மேவ விடுத்தரு ளின்று விளங்குகடற்
பாயக மேயவன் போறுறு காவைப் பதியமருஞ்
சாயக மைந்துடை யானுட னீற்றிய சங்கரனே ௫௪

சங்கர னேயுயர் தமனிய வரைபெறு தையலொரு
பங்கர னேமறி மான்மழு தன்னைப் பறித்தமல
ரங்கர னேயென் றுன்றனை யேத்தற் கருளவாயே
பொங்கர னேகமு டைத்தொளிர் காவைப் போரேறே ௫௫

போரே றேநின் பொன்னடி தன்னிற் பொய்ம்மையிலா
நாரே றடியா ரடைந்தமை கேட்டு ஞானமிலேன்
வாரே றிளமென் முலையார்க் கூடி வாள்விழியி
னூரே றுனேன் காவாய் காவை யுத்தமனே ௫௬

உத்தம மார்குண மொன்றுமி லாதவிவ் வொதியனையுன்
பத்தமர் குறியுடை யார்கழுன் மேவிப்பணிந்திடுமா
றித்தரை மீதினி யற்றுவை யேயெளி யேனுய்வேன்
வித்தக நற்றல மேவிய வேதவி ழுப்பொருளே ௫௭

வேதகத் தாமுதல் வானவர் பெறலரும் வியன்கழல்வாழ்
வேதகத் தாவெனு றுனையிரந் தேனருண் மிளிர் சலசப்
போதகத் தாள்புரி கூத்தையு வந்தவள் புருடனையாள்
போதகத் தார்வன மேவிய தெய்வப் புனலீசா ௫௮

ஈசா நின் றனிணையடி நீழலி லிவ்வுலகோ
ரேசா வண்ணஞ் சேர்த்தரு ளாயின் றெளியனையே
யாசார் பிறவிக் கனல் வெப் புறுத்த லாற்றகிலேன்
றேசார் மாட மோங்குறுங் காவைச் செழும்பொருளே ௫௯

பொன்னார் ஞாயில் புடைசூழ் காவைப் புத்தமுதே
மின்னார் சடிலத் திறையே முக்கண் வித்தகனே
யொன்னார் புரமூன் றெரியப் புன்னகை யுஞற்றியவெம்
மன்னா நின்னை யலதெளியேன்வாய் வாழ்த்தாதே ௬௰

## வேறு

வாழ்வினை நிலையா மென்றே மதித்தல மந்து வாடுந்
தாழ்மதி யுடையேன் றன்னைத் தந்திமா வனத்தின் மேய
போழ்மதிச் சடையி னானறன் பொன்னடி போற்று மாறின்
றாழ்வினை முழுதும் வேரோ டொழித்தினி தாட்கொண் டானே ௯௧

கொண்டுபன் மலரை நாளுங் குடங்கையாற் றூவி நின்முன்
றண்டென வீழ்ந்து நாவிற் றழும்புறப் பாடு நீற்றுப்
புண்டரக் குறிசேர் நெற்றிப் புனிதரோ டெனையுங் கூட்டாய்
கொண்டல்கண் படுக்கு மாடக் குஞ்சர வனத்து ளானே ௯௨

வடிகெழு மிலைவேல் மையுண் வடுவகி ரனைய நாட்டத்
துடியிடை மடவா ரேவற் றொழில்புரிந் துனைம றந்த
மிடியவ னேனு நின்றன் விரைமல ரடிதந் தாள்வாய்
அடியவர்க் கெய்ப்பில் வைப்பே யானைகா வமர்ந்த கோவே ௯௩

கோவல னயனுந் தம்முட் கோலமோ டேனமாகிப்
பூவல ரிணைப்பொற் றாளும் பொங்கெழின் முடியுந் தேடத்
தீவடி வாகி முன்னஞ் சேண்வரை நிவந்து நின்ற
காவையம் பதியா னன்றிக் கதிதரக் கடவுளுண்டோ ௯௪

கடவுளென் றுரைக்கு மோர்பேர் கடுப்பது நினக்கே மண்முற்
கடப்பரு நாத மீறுக் கருதுதத் துவங்க ளியாவுங்
கடந்துள தன்மை யாலே கன்னமுன் னுய மூலறு
கடகரி முகனை யீன்ற காவைமா நகரத் தானே ௯௫

நச்சர வுச்சி யாட்கு நகுமுக மனைய காவை
முச்சக மீன்று ளோடு முடங்குகாற் சிலந்தி வேழ
நிச்சலும் பரவு மெங்க ணிமலக் கொழுந்தை யாண்டு
மெச்சமிற் பொருளை நாயே னெத்திடா தயர்ந்த வாறே ௯௬

அயர்வறு கல்வி சாலீ ராயிரத் தாலோ னேனும்
பெயர்பல வற்று ளொன்றைப் பேசுவோர் புகழைப் பேசப்
பயமுறு வானேற் காவைப் பதியுளா யுனது கீர்த்தி
யுயர்வுசால் கலையி லேனோர் நாவினு லுரைக்க வற்றோ ௯௭

உரையொடு பொருளு மாகி யொளியினோ டிருளு மாகி
விரையொடு மலரு மாகி மேலொடு கீழு மாகித்
தரைமுதற் பூத மாகித் தயங்கிவை யல்வா மொன்றைப்
புரைதபு வெள்ளை நாவற் புரிநிழ றனிற்கண் டேனே ௯௮

கண்டதே காட்சி யிந்தக் கடலுடை யுடைய பாரிற்
கொண்டதே கோல மன்றிக் கூர்மகிழ் வோடெஞ் ஞான்று
முண்டதே போக மென்பா ருறவொழித் தெனையாட் கொள்ளாய்
வண்டர்பாண் மிழற்றுஞ் சோலை வாரணக் காவுளானே ௬௯

வாரணத் துரியான் மேனி மறைதரப் போர்த்தா மென்றோ
வாரண முகப்பிரானை வழங்கினா மென்றோ வன்றி
வாரண வடிவை முன்னர் மருவினா மென்றோ விந்த
வாரணக் காவின் வாழ்க்கை மகிழ்ந்தனை வள்ளா னீயே ௭௰

வேறு

வள்ளலென வேயுதவா மாதுடரைப் பாடு
மொள்ளறிவி னாவலர்கா ளும்பல்வன மேய
பிள்ளைமதி சூடியவெம் பிஞ்ஞகனைப் பாடி
லெள்ளலக லெப்பொருளு மெய்தலெளி தாமே ௭௧

தானேநற் பிரமமெனச் சாற்றிமத மெய்தி
யூனேசு மந்துழல்வீ ருட்கடைகி லீரோ
நானேயே பிரமமென்ற ஞானிசிரங் கொய்தூங்
கானேயுங் கொன்றையணி காவைநக ரானே ௭௨

காவைநகர் மேயவருட் கண்ணுதலார் பாதப்
பூவைமகிழ்ந் தேத்து[illegible]லாப் புல்லறிவீர் நும்பாற்
கோவைநிகர் தரவுரப்பிக் கூற்றன்வரி னீவிர்
நாவையசைத் தலைவற்கு நவிலவெவன் வல்லீர் ௭௩

எவனெள்ளி னெய்யெனவே யாண்டுநிறைந் துள்ளா
னெவன்படைத்துப் புரந்தழித்தற் கேற்றவன்மூ வடிவ
மெவன்முதலோ டிடைகடையி லாதிருப்பா னென்று
மவனெனையாட் கொளுங்காவை யண்ணலெனக் கண்டாம் ௭௪

கன்மமதே யென்றுமுத லென்றுகரை வார்கள்
சென்மமகன் றுன்னடியிற் சேர்ந்துசுகிப் பாரோ
தன்மமக லாதொளிருந் தந்திவன மேய
புன்மலம கன்றவர்பு சித்திடுநற் பேறே ௭௫

பேதையர்த மையலினாற் பேதுறுகின் றேனைப்
போதமலின் பொன்னடியிற் பொருத்துவையோ வன்றித்
தீதமைக ருக்குழியிற் சேர்ப்பையோ வின்சித்த
மேதமியேன் வேழவனத் தேய்ந்தபெருங் கதியே ௭௬

கதிரொளியுங் கண்ணொளியுங் கலப்பதுபோ லுன்றன்
மதுவவிழு மலரடியின் மகிழ்வொடு கலக்கு
முதிர்வருசுத் தாத்துவித வுண்மையெனக் கருளாய்
வெதிர்புரைமென் றோளியர்சூழ் வேழவனத் தானே ௭௭

தானமொடு தவம்விரதஞ் சற்றுமறி யாத
ஈனனுமுன் சேவடியிற் சேர்ந்துசுகிப் பேனோ
தேனமர்பொ தும்பர்தொறுஞ் செழுமயில்க ளாலு
ஞானதல மேயவுயர் நாரவடி வாளா ௭௮

வடிகமழும் வேல்விழியார் மையலென வோதுந்
தடிகமழுஞ் சலதியிடைத் தமியனுழ லாதுன்
கடிகமழு மலரடியாங் கலமருள்வ தென்றோ
பொடிகமழு மேனியுடைப் போர்தகவ னத்தாய் ௭௯

தாயினுநல் லாய்நினையே சார்ந்தவொரு நாயேன்
றீயில்புழு வொத்துருகிச் செல்லலுற னன்றோ
ஞாயிறொடு சந்திரனு நாடிமகிழ்ந் தேத்து
நாயில்களோ ரைந்துபொலி நாகவன மேயாய் ௮௰

வேறு

நாக வண்கிளை தொறுமுறை நாகம தெல்லா
நாக மேயவைந் திருவினை நகவலை தீர்க்கு
நாக மாவனத் தேயமர் நம்பர னாய
நாக வெஞ்சிலை நாதனை நாடுதி மனனே ௮௧

மனமெ னும்பெரு மாமத யானையை வயங்குன்
றனமெ னும்மலர்த் தாட்டுணை யாகிய தறியிற்
சினமி லன்பெனுங் கயிற்றினாற் சிமிழ்த்திடு வேனோ
வனமி குந்தொளிர் காவையின் மேவிய மணியே ௮௨

மணிமு கங்களோ ராறுடை வள்ளலை யீன்ற
பிணிமு கத்தொழுங் காவையெம் பெரும்பதி யார்க்கே
பணிபு ரிந்திடப் படுமென திடைப்பக ரேர்ந்தின்
றணுகி யாதுநீ யியற்றிட வல்லையந் தகனே ௮௩

தகைமை சான்ற வருளினைச் சார்வது முளதோ
துகளு லாமலர்ச் சரிகுழற் றோகையர் தமக்கே
அகமெ லாமளித் திடருறு மளியவ னேனே
செகமெ லாம்புகழ் காவையின் மேவிய சிவனே ௮௪

சிவந்த கட்பெயர்ச் செம்பியன் செய்வழி பாட்டை
யுவந்த காவையம் பெரும்பதி யான்றனை யுளமே
நவந்த ருந்துதி கொடுதின நாடுவை யாகிற்
பவந்த விர்ந்தரும் பரகதி யிடைப்படர் வாயே ௮௫

வாயி னுனை வழுத்தகி லேன்றிரு வயங்குன்
கோயில் சூழ்ந்தறி யேன்சிர மேற்கரங் கூப்பி
சேயிதழ்ப் பனி மொழிச்சிறு மியர்மயற் றீரே
னுயி னேற்பணிக் கதியெவ னுகமா வனத்தாய் ௮௬

மாவ ணங்கொளு மரலவ னொடுமல ரவனுந்
தூவ ணங்கொளு மலர்கொடு தூய்த்தொழு தேத்துங்
காவ ணங்கொளு மறுகுடைக் காவையம் பானை
நீவ ணங்குதி நிகரிலாப் பதம்பெற நெஞ்சே ௮௭

நெஞ்ச மேயினு மஞ்சுத னீயெவ னெடிதே
கஞ்ச மார்சுனைக் காவையங் கடிநக ரானைத்
தஞ்ச மாவது நீயலா லிலையெனச் சார்ந்தும்
வஞ்ச மார்மன மறலிசெய் வாதனை தனக்கே ௮௮

வாத வூர்வரு மறைமுதற் றலைவர்வாய் மலர்ந்த
போத நற்றமிழ் மாலையைப் புகன்றுகேட் டருள்செய்
சீத நீர்வயற் காவையிற் றிகழ்தருந் தெய்வ
நாத னுரமர்ந் திடவென துள்ளநற் றனியே ௮௯

தனிரி யற்கொளு மேனியங் கையலார்க் கூடிக்
கனிகொள் வெம்மனக் கடையனே னுயினு நின்ற
னொளிகொ டாமரை மலரடி நினைப்பினை யொழியே
னளிகொ ளுவனன் னீழலி லமரருட் பிழம்பே ௯௰

வேறு

அருளு ருக்கொளு மால நீழ லமர்ந்து நால்வ ரகத்தெழு, மருளி ரித்துமுப் பொருளின் வாய்மை வகுத்த ஞானவ ரோதயா, தெருள்கொள் செவ்விழிச் செம்பி யன்றினஞ் சிந்தை யோகையோ டேத்துறும், பொருள்கொள் காவை யின்மேய தெய்விகப் புண்ணியப்பொருள் போற்றியே ௯௧

பொருதிரைக் கடலிடை யுறுத்தெழு பொங்கு காளகூ டத்தையே
திருமி டற்றி லமைத்து வானவர் திரளை யாண்டருள் செல்வமே
கருவிமா மழைகண் படுக்குநற் கடிகொள் பற்பல காவல்சூழ்
பொருவில் காவையம் பதியின் மேவிய புநித சிற்பர போற்றியே
௯௨

நாய காவறு பத்து மூன்றுகன் னுயன் மார்தமை யாண்டரு
ளேய வாமறை யோன்ற னுமே தொடரொணு மற்றுலங் குநற்
றேய மார்சடைச் சுந்த ராசுவ தந்தரா சுதைத்தொ டுகடற்
பாய லான்றெழுங் காவை மேவிய பஞ்ச கிர்த்திய போற்றியே
கச

பஞ்சு லாம்பதப் பனிமொழிப் பெரும் பந்துலா முலைப்பா வைமார்
நஞ்சு லாங்கொடு வேல்வி ழிபொர நன்னி லைகுலை வேன்றனைக்
கஞ்ச மென்மலர்த் தாட்டு ணைதனைக் காட்டி யாண்ட புராதனு
மஞ்சு லாம்பொழிற் காவை மாநகர் வயங்கு பேரொளி போற்றி
யே கரு

ஒளிகொள் வெண்பிறை சூடு செஞ்சடை யுலக காரண போற்றி
யே, யளிகொ ளன்பருக் கெய்ப்பில் வைப்பெனு மமல நாயக
போற்றியே, நளிகொள் தேவர்க ளோடு நான்மறை நாடரும்
பொருள் போற்றியே, களிகொள் வண்டிசை பாடு பூம்பொழிற்
காவை மேயவ போற்றியே. கசு

மேய பாரிடை யைந்த தாகி விளங்கு நீரிடை நான்கதாய்த்
தேயு தன்னிடை மூன்ற தாகியே செப்பு காலிடை யீரதாய்ப்
பாய விண்ணிடை யொன்ற தாகிப் பரந்து நின்றிடு பான்மைகொ
ளேய ஞான தலத்தின் மேவிய சுருதி நாயக போற்றியே. கஎ

சுருதி யாயிர மாயிரம் பெயர் சொல்லி வாழ்த்துநற் றூயவா
கருதி யென்வி னைமா சறுத்து கடைக்க ணித்தக பாவியே
குருதி வேற்கரக் குகனை யீன்றருள் குலவும் மட்டகு ழலையா
தருண மாமதி சூடுகா வையெஞ் சகள நிட்கள போற்றியே கஅ

போற்றி சங்கர போற்றி சாம்பவ போற்றி சந்திர சேகரா
போற்றி புங்கவ போற்றி புண்ணிய போற்றி பூதநன் னுயகா
போற்றி பன்னக பூட ணுபுகல் போற்றி காமபு ராந்தகா
போற்றி வதுவித காவை மேவிய பூரணப் பொருள் போற்றியே
கக

பூர ணுங்கி னதுயர் கொள் பொன்முடி போற்றி போற்றி
நின் பொலிமுக, நார ணுதிய ரேத்து நின்புயம் போற்றி போற்றி
நிறைற்கரம், பார ளாவுறு மன்பர் மும்மலம் பாற்றி யன்னவர்க் கரு
ள்செயு, மேர ளாவுறு வேத நூபுர மிலங்கு சீரடி போற்றியே ா

வாழ்த்து.

தழைதரு வெள்ளை நாவனன் னீழற னிலமர்
தனிமுதல் வாழ்க
கழைதரு மொழிகொ ளுயரகி லாண்டக்
கவின்மிகு நாயகி வாழ்க
விழைதரு மிவருக் கன்புசெய் மனத்து விளம்புறு
மடியவர் வாழ்க
பிழைதபு தூய வைதிக சைவப் பெருநெறி
யேமிக வாழ்க.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீமெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

7648
மறைமலையடிகள்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1